# கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

# KARKATHAR OPPURAVU



| மலர்–14, இதழ் – 6 | வைகாசித் திங்கள் | விலை ரூ. 25/– | ஆண்டு சந்தா ரூ. 300/– | தமிழ் மாத இதழ் |
| --- | --- | --- | --- | --- |
| Volume - 14, Issue - 6 | May 2023 | Price Rs. 25/- | Annual Subscription Rs. 300/- | Tamil Monthly |





"Delivered by India Post"

www.indiapost.gov.in




PICS
Parvathy Institute of Cardiac Sciences

Complete Cardiac Care In The Heart of Chromepet.

Chromepet : 241, GST Road, Chromepet, Chennai 44.

Website: www.parvathyhospital.com

Call: 044 2238 2248




SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM
SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION

## WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

## CUT DOWN YOUR ELECTRICITY COST

**MARUTHI POWER CONTROL SYSTEM**

**CALL US @ 9841828077**

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com



S.SELVAKUMAR - C.E.O

உ
திருச்சிற்றம்பலம்
ஓம் சிவ சிவ
ஸ்ரீ சித்ஸபேசாய மங்களம்.

# ஸ்ரீ ஏகாதச ருத்ர ஜபம்

ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் சமேத, ஸ்ரீ ஆனந்த நடராஜமூர்த்தியின் அனுக்கிரகத்துடன் கார்குல மகளிர்கள் பல ஊர்களிலிருந்து ஒன்றுகூடி இணைய வழியில் (Google meet) 2021 ஆம் ஆண்டு முதல் ஸ்ரீ ருத்ரம் பயிற்சி செய்து வருகிறார்கள். முதல் குழுவில் 18 நபர்கள், இரண்டாவது குழுவில் 5 நபர்கள் தற்பொழுது நடைபெற்று வருகின்ற மூன்றாவது குழுவில் 18 நபர்கள் என தொடர் பயிற்சி செய்து வருகிறார்கள்.

**ஸ்ரீ ருத்ரம் விளக்கம் சிறப்பு :** சைவத்தின் ஆதார நூல்கள் – வேதம், ஆகமம், இதில் வேதம் என்பது ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்கிற நான்கு வேதங்களாகும். நான்கு வேதங்களுள் யஜுர்வேதம் 4–ஆவது காண்டத்தின் 5–ஆவது உட்பிரிவிலுள்ள பரமேஸ்வரரின் மகிமையை வெளிக்காட்டும் ஸ்ரீ மகாருத்ரம் உள்ளது. வேதங்களுள் யஜுர் வேதம் முக்கியமானது. அதற்குள் அதன் மத்தியபாகமாகிய நான்காவது காண்டம் முக்கியமானது. அதற்குள்ளும் மத்திய பாகமான ஐந்தாவது பிரச்னம் முக்கியமானது அதுதான் ஸ்ரீ ருத்ரம் ஆகும். அதற்குள்ளும் நமசிவாய என்ற பஞ்சாக்ஷரம் மத்தியில் சிவ என்ற இரண்டு அக்ஷரம் அடங்கியிருக்கிறது. இதையே ஜீவரத்தினம் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். மையமாகவும் மெய்ப்பொருளாகவும் திகழ்கின்ற ஸ்ரீ ருத்ரத்தை பதினோரு முறை ஜபம் செய்வது என்பது ஏகாதச ருத்ர ஜபம் ஆகும்.

**ஸ்ரீ ருத்ரம் மூன்றாவது குழு :** ஸ்ரீ ருத்ரம் மூன்றாவது குழு ஸ்ரீ சத்யோஜாத சிவம் தங்க. சிவப்பிரகாசம் பிள்ளை அவர்களையும், பெருமகனார். ஸ்ரீ தத்புருஷ சிவம் சிவ. சிவநேசன் அவர்களை குருவாக ஏற்று திருமதி. விஜயராணி மணிவாசம் அவர்களால் இணைய வழியில் கற்பிக்கப் பட்டது.

**ஸ்ரீ ருத்ரம் மூன்றாவது குழு பயின்ற அன்பர்கள்:**


திருமதி. விஜயராணி மணிவாசகம், கடலூர்.

1. திருமதி. இந்திரா சீதாராமன், முருகமங்கலம்.
2. திருமதி. சிவகாம சுந்தரி சிவகுருநாதன், மயிலாடுதுறை.
3. திருமதி. கீதா அசோகன், மயிலாடுதுறை.
4. திருமதி. இந்துமதி அன்பழகன், மயிலாடுதுறை.
5. திருமதி. கோமதி ரத்தினகுமார், மயிலாடுதுறை.
6. திருமதி. பொன்மணி ரவி, மயிலாடுதுறை.
7. திருமதி. சிவரஞ்சனிமுத்துநாதன், திருச்சி.
8. திருமதி. செந்தில்ராணி வேல்முருகன், சிதம்பரம்.
9. திருமதி. சௌந்தரநாயகி பெருமாள், விழுப்புரம்.
10. திருமதி. ஜோதீஸ்வரி சந்திரசேகர், சென்னை.
11 திருமதி. தேவாம்ருதம்மோகன், சென்னை.
12. திருமதி. வனஜா Dr. செல்வகணபதி, சென்னை.
13. திருமதி. யமுனாபாஸ்கரன், பெங்களூர்.
14. திருமதி. வனஜா இளங்கோவன், சென்னை.
15. திருமதி. நிர்மலா ராஜவேல், சென்னை.
16. திருமதி. பிரபா, சென்னை.
17. திருமதி. விஜயலெஷ்மி, சென்னை.
18. திருமதி. சுகந்தி ரவிக்குமார், திருச்சி.
19. திருமதி. குருலெஷ்மி ராஜன், ஜார்கண்ட்



**ஸ்ரீ ஏகாதச ருத்ர ஜபம் பானலிங்கம் ஏற்றல் :** நிகழும் சுபகிருது வருடம் பங்குனி திங்கள் ஆறாம் நாள், (20 –3–2023) சதய நட்சத்திரம்,ஸோமவாரம், சித்தயோகம் கூடிய சுப வேளையில் காலை ஒன்பது மணிக்கு மேல், கடலூர், K. K நகர், மெய்கண்டார் வீதியில், திருமதி சிவ.மங்கையர்கரசி கார்த்திகேயன் அவர்களது, திருஞான சம்பந்தர் நிலையத்தில் உள்ள ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜமூர்த்தி முன்பாக ஸ்ரீ தத்புருஷ சிவம்.சிவ. சிவநேசன் ஸ்ரீ ருத்ர குழு அன்பர்களை வணங்கி, வரவேற்று, சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதிநான்கோடும், பதி, பசு பாசம் என்ற முப்பொருள் உண்மையை, பதி+நான்+கு என பிரித்து ஒப்பிட்டு, ஏகாதச ருத்ர ஜப முறைமையை விளக்கினார்கள். அதனை தொடர்ந்து ஸ்ரீ ருத்ரம் குழு அன்பர்கள் (ஆண்களும் பெண்களும்) இருபது பேர் " ஏகாதச ஸ்ரீ ருத்ர ஜபம்" செய்தார்கள்.

**இதழின் உள்ளே....**




கோடை விடுமுறை.......... 7

நட்சத்திரங்களும் மரங்களும்.......... 9

குதிரை வண்டி .......... 11

சொத்துப் பரிமாற்றச் சட்டம் 1882 .......... 13

அன்பு எனும் அறநெறி.......... 19

மணமகன் / மணமகள் தேவை.......... 35–38

சங்க நிகழ்வுகள்.......... 39

சர்வதேச சிறுதானியங்கள் .......... 46



**கார்காத்தார் ஒப்புரவு**

**கார்காத்தார் சங்கம் (சென்னை)**

64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,

சூளைமேடு, சென்னை – 600 094.

தொலைபேசி : 044–2472 4882

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**

**ஆண்டு சந்தா ரூ. 300/-**

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533


கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

## ஏடு இட்டோர் இயல்

### எரி சக்தி



கார் பஸ் போன்ற வாகனங்களை இயக்க பெட் ரோல் டீசல் போன்ற எரி பொருள்கள் தேவை அதேபோல் நம்முடைய அன்றாட ஒவ்வொரு செயல்பாடுகளுக்கும் ஒரு வகை எரி சக்தி என்னும் ஆற்றல் தேவைப்படும் அதில் மின்சாரம் மிக மிக முக்கியமாகும் மின்சாரம் இல்லாமல் ஒரு சில நிமிடங்கள் கூட நம்மால் இருக்க முடியாது என்ற அளவிற்கு நம் அன்றாட வாழ்க்கை மின்சாரத்துடன் இணைந்துவிட்டது. இந்தக் காலங்களில் நம் வீட்டிற்கு வேலை செய்ய வரும் கார்பெண்டர் வெல்டர் போன்றவர்கள் கூட மின் சக்தி இல்லாவிட்டால் அவர்கள் செய்ய நினைக்கும் வேலையை அவர்கள் கொண்டு வரும் பல வகை மின் சாதனங்களைப் பயன் படுத்த முடியாது கடந்த பதினைந்து இருபது வருடங்களாக தொழில் துறையில் மின் தேவை பெருமளவில் அதிகரித்து வருகிறது. ஆனால் தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு உற்பத்தி அதிகரிக்கப்படவில்லை. அதனால் மின்வெட்டு ஏற்படுகிறது. இந்நிலை எப்பொழுது மாறும் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

நீர் மின்நிலையங்கள் மூலம் மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமானால், எப்பொழுதும் அணைக்கட்டுகளில் தொடர்ந்து நீர் இருப்பு முழுமையாக இருக்குமாறு மழை பெய்து கொண்டே இருக்க வேண்டும். காடுகள் அழிக்கப்பட்டது போன்ற பல காரணங்களால் பருவ மழை சரியாக பெய்வதில்லை. இந்நிலையில் நீர் மின்நிலையங்கள் மூலம் மின் உற்பத்தியை அதிகரிக்க வாய்ப்பில்லை.

அனல் மின் நிலையங்கள் மூலம் மின் உற்பத்தியை அதிகரிக்க புதிய அனல் மின் நிலையங்கள் அமைக்க வேண்டும். அவற்றில் நீரை ஆவியாக்க நிலக்கரி தேவை. பல்லாயிரம் வருடங்களுக்கு முன் பூமியில் புதையுண்டு போன காட்டு மரங்கள் பூமியின் அழுத்தத்தால் ரசாயன மாற்றம் அடைந்து கரியாக மாறியது. எனவே இது தொடர்ந்து நமக்கு கிடைக்க வாய்ப்பில்லை.

அணுமின் நிலையம் அமைப்பதன் மூலம் மின் உற்பத்தியை அதிகரிக்க நினைத்தாலும் அணு மின் நிலையத்தில் தண்ணீரை நீராவியாக்க, அணுவை பிளக்கும் பொழுது ஏற்படும் உஷ்ணம் பயன்படுத்தப்படுகிறது. விபத்து ஏற்பட்டு கதிரியக்கம் வெளியே பரவினால் ஏற்படும் பாதிப்பு பயங்கரமானதாக இருக்கும். யுரேனிய கழிவை பெரும் செலவில்

பூமிக்கடியில் புதைத்து பாதுக்காக்கும் அளவிற்குதான் விஞ்ஞானம் முன்னேற்றம் அடைந்துள்ளது. அதை சாதாரண கழிவாக மாற்றும் அளவிற்கு தொழில் நுட்பத்தில் முன்னேறவில்லை. எனவே இது அரைகுறை தொழில் நுட்பம்தான்.

இறுதியாக உள்ளது சூரிய ஒளி மின்சாரம். இது எளிமையாக உற்பத்தி செய்யக்கூடியது, ஆபத்தில்லாதது. சூரியன் இருக்கும் வரை அதன் ஒளிக்கதிர்களில் இருந்து தடையின்றி பெறக்கூடியது. எதிர்காலத்தில் இது மற்றவகை மின் உற்பத்திக்கு ஒரு மாற்றாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இருக்க முடியாது.அதிலும் நம் நாட்டில் சூரிய வெப்பத்துக்கு குறைவே இராது வரும் மே ஜூன் மாதங்களில் சூரிய வெப்பம் அபரி மிதமாகக் கிடைக்கும் வீட்டு உபயோகத்திற்கான மின்சாரத்தை சூரிய ஒளி மூலம் தயாரிக்க பலர் துவங்கியுள்ளனர். அவர்களை ஊக்குவித்து உதவும் வகையில் மாநில அரசு அவ்வாறு சோலார் மின் உற்பத்தி செய்பவர்களுக்கு மான்யம் கொடுத்து உதவுகிறது எதிர்காலத்தில் சோலார் பவர் சிஸ்டம் வடிவமைத்தல், பராமரித்தல் போன்றவற்றில் தொழில் நுட்பம் தெரிந்த வேலையாட்கள் பெருமளவில் தேவைப்படும்.

சூரிய ஒளி மூலம் தங்களுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்வதுடன் அவர்களது தேவைக்கு மீறிய உபரி மின்சாரத்தை அரசு மின்சார வாரியமே வாங்கிக் கொள்ளும் இந்த வாய்ப்புகளைப் பயன் படுத்தி சோலார் எனர்ஜி மூலம் மின்சாரம் தயாரிக்க முன் வருமாறு மக்களைக் கேட்டுக் கொள்கிறோம் நன்றி – விகாஸ்பீடியா இணைய தளம்.

## சென்னை கார்காத்தார் சங்கம்

64, சௌராஷ்டிரா நகர், 10–வது தெரு,

சூளைமேடு, சென்னை–600094.

சென்னை கார்காத்தார் சங்கத்தின் நூற்றாண்டு விழா கடந்த 08–01–2023 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு தலைமையேற்று வாழ்த்துரை வழங்கிய கார்குல வள்ளல் உயர்திரு. S. வெங்கடேசன் பிள்ளை கார்காத்தார் ஒப்புரவு மாத இதழை இன்னும் பொலிவுடனும் வலிவுடனும் நடத்துவதற்கு ஏதுவாக ரூ. இரண்டு லட்சமும், இது வரையிலும் கார்காத்தார் ஒப்புரவு வாங்காத நமது கார்குலத்தை சேர்ந்த குறிப்பாக கிராம பகுதிகளில் வசிக்கும் சுமார் 500 குடும்பங்களுக்கு ஓர் ஆண்டுக்கு சந்தாதொகையாக ரூ. ஒன்றரை லட்சம் வழங்குவதாக தெரிவித்தார்கள். இதன் தொடர்ச்சியாக ரூ. இரண்டு லட்சமும், முதல் நூறு சந்தாதாரர்களின் சந்தாதொகையாக ரூ. முப்பதாயிரமும் வழங்கி சிறப்பான பெருமையை நமது சங்கத்திற்கு அளித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம். மேலும் நாநூறு சந்தாதாரர்களை சேர்க்கும் பணி நடைபெற்று வருகிறது என்பதையும் நன்றியுடன் தெரிவித்து கொள்கிறோம். மேற்படி கார்காத்தார் ஒப்புரவு பத்திரிகையின் வளர்ச்சிக்கு வாரி வழங்கிய நமது கார்குல வள்ளல் உயர்திரு. S. வெங்கடேசன் பிள்ளை அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறோம்.

– கைலை. சண்முகம்,

செயலாளர்.

## ஓர் அறிவிப்பு

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள் ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25ஆம் தேதிக்குள் அனுப்பபடவேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் கீழே சங்கத்தின் தலைவர் / செயலரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையுடனும் அனுப்பப்படவேண்டும்.

- செய்திகள், கட்டுரைகளை கூட்டவோ, குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- சங்க விழாக்கள் பற்றிய செய்திகள் சுருக்கமாகவும், தெளிவாகவும், முக்கிய கருத்துக்களை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்கள் கையொப்பத்துடன் அனுப்பப்படவேண்டும்.
- E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.
- **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பப்படவேண்டும். இந்த இதழில் வெளிவந்துள்ள QR CODEயை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்.**
- செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

*அனைத்து தபால்களையும் **கார்காத்தார் ஒப்புரவு,***
*எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.*
*என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.*

*– கார்காத்தார் ஒப்புரவு*

# கோடை விடுமுறை

அது ஒரு காலம். பள்ளிப் படிப்பின் கடைசி தேர்வு முடிந்தவுடன் என் வயதுப் பசங்களோடு கோடை விடுமுறை நாட்களை அப்படிக் கொண்டாடி இருக்கிறோம். இரண்டு பக்கமும் ஊரைத்தொட்டு ஓடிக்கொண்டிருக்கும் பவானி ஆற்றையும் காவிரி ஆற்றையும் அங்குலம் அங்குலமாய் அளந்து ஆடிக்களித்த பொழுதுகள் எங்கள் அப்போதைய வயது வாங்கி வந்த வரங்கள். வாய்க்காலின் வரப்புகளோடு ஓடித்திரிந்து வைக்கோல் போரின் அழகு மெத்தையில் குதித்து அரிப்புகளோடு வீடு திரும்பிய மாலை நேரங்கள் இனிப்பால் செய்து எங்களுடன் படைக்கப்பட்டவை.

ஒரு குடுவை தேநீரில் ஒரு குடும்பமே ஆற்றல் பெறும் அந்த காலை நேரத்தில் தேநீரில் நனைத்த வர்க்கி தேனில் நனைத்த வர்க்கியாய் இதழ்களில் இறங்கும்போது பல் விலக்காத பாதி நாட்கள் மறந்து போகும் அந்தக்கதை கூட தினத்தந்தி கன்னித்தீவு கதைபோல நீளும். குடும்பமலர் புத்தகத்துக்காக காத்திருந்து தேநீர் வாங்க மறந்து அடி வாங்கிய நினைவுகள் இன்னும் அழகாய் விரிகிறது.

கலர் கலராய் பம்பரங்களும் அதற்கு ஜோடியாய் அழகழகான சாட்டைகளும் வைத்துக்கொண்டு சின்ன குழந்தைகளின் கைகளில் விட்டதும், அக்காக்கள் கடந்து போகும் போது பம்பரத்தை சுற்றி கீழே விடாமல் கையில் பிடித்த நாட்களும் இன்னும் மனதின் ஓரத்தில் சாட்டைகள் இல்லாமல் சுழன்று கொண்டுதான் இருக்கிறது.

சைக்கிள் செயினில் இருக்கும் பாலிஷ் குண்டு முதல் கைகளின் பிடிக்க முடியாத அளவு பெரிய குண்டுகளை வைத்து விளையாடிய நிமிடங்கள் எங்கள் சிறுவயதின் மீது தெளிக்கப்பட்ட ஆசிர்வாத துளிகள். அதிலும் அந்த சோடா பாட்டிலுக்குள் இருக்கும் குண்டையும் ஒரு இரும்பு குண்டையும் வைத்திருப்பவன் அந்த கூட்டத்தின் ஒட்டு மொத்த பொறாமையையும் சுமந்து கொண்டிருப்பான்.

இரண்டு பக்கமும் கூர்தீட்டப்பட்ட கில்லியை அடித்து சில கண்ணாடிகள், சில பானைகள், சில மண்டைகளையும் உடைத்திருக்கிறோம். கில்லி தண்டை எங்கள் ஊர் வழக்கப்படி பில்லி கோட்டி என்று அழைப்பதுண்டு. அந்த கோட்டி என்பது பெரிய குச்சி. ஒரு முறை அந்த பெரிய குச்சி கிடைக்காமல் பருப்பு கடையும் மத்தை எடுத்துக்கொண்டு போய் விளையாடி அம்மாவிடம் அதிலேயே அடிவாங்கிய நினைவுகள் இன்னும் பரணில் உட்கார்ந்து கொண்டு பல்லிளிக்கிறது.

நடிகர்களின் படங்கள், கடை கடையாய் தேடி எடுக்கும் லவ்ஓபாட்டில் மூடிகள், குழிபந்து, பூப்பறிக்கவருகிறோம், நொண்டியாட்டம், கண்ணாமூச்சி, அஞ்ஜாங்கல், ஐஸ் நம்பர், கிழித்துப்போட்ட பிலிம்ரோல் பிக்சர்கள், ஓணான் அடிக்கும் உண்டி வில், முதுகுதாண்டும் பச்சக்குதிரை, கிச்சு கிச்சு தாம்பாளம், பனையோலை காத்தாடி, நுங்கு வண்டி, டயர் வண்டி இப்படி இன்னும் எத்தனை எத்தனையோ விளையாட்டுக்களை எங்கள் பால்ய வயதின் பக்கங்கள் பத்திரமாய் வைத்திருக்கின்றன நினைவுப் பெட்டகத்தின் ஒரு மூலையில்.

வீடுகள் குறைந்து விளையாடுமிடங்கள் நிறைந்த அந்த நாட்களில் எங்களுக்கான எல்லா விளையாட்டுக்களையும் கற்றுக் கொடுத்த இடம் கணக்கன் காடு என்று அழைக்கப்படும் முன்னாள் தோட்டம், கடந்த மாதத்தில் ஒரு நாள் நினைவுகளின் விரல்கள் நெட்டித்தள்ள அங்கே போய் பார்க்க நேர்ந்தது. புழுதிபறக்கநாங்கள்விளையாடிய அந்த இடம் இப்போது வீடுகள் நிரம்பியபடி விசும்பிக் கொண்டிருக்கிறது. எங்கள் கால்தடங்கள் பதித்த சுவடுகளையெல்லாம் தார்ரோடுகள் விழுங்கிவிட்டன, எங்கள் பம்பரங்கள் சுழன்ற இடங்களை டைல்ஸ்கள் மறைத்துவிட்டன. எங்கள் பட்டங்கள் பறந்த உயரங்களில் கைப்பேசி கோபுரங்கள் முளைத்திருக்கின்றன.

இப்போது விடுமுறையில் இருக்கும் குழந்தைகளுக்கு இந்த விளையாட்டுக்களின் பெயர்களும் அதற்கான விதிமுறைகளும் தெரியுமா என்பது மிகப்பெரிய கேள்விக்குறி. நாகரீக வளர்ச்சி இன்றைய குழந்தைகளை நான்கு சுவர்களுக்குள் பிடித்து இறுக்கி வைத்திருக்கிறது. தொழில்நுட்ப வளர்ச்சியென திடீரென முளைத்த தொலைக்காட்சி கார்ட்டூன்கள், கம்ப்யூட்டர், மொபைல் கேம்ஸ்கள், யூ டியூப், ஐ பேடுகள் அவர்களின் கண்களையும் விரல்களையும் அடிமைகளாக்கி விட்டன.

சொந்த மண்ணில் புழுதியில் விளையாடாமல், கைகளில் சுற்றும் பம்பரங்களின் குறுகுறுப்பை உணராமல், ஆலமர ஊஞ்சலில் ஆடித்திளைக்காமல், குழந்தைகளின் கூட்டாஞ்சோறில் பசியாறாமல், வாய்க்காலின் கரைகளில் கால் நனைக்காமல், நுங்கு வண்டியில் பயணிக்காமல், பனையோலை காற்றாடிகளில் காற்று வாங்காமல், தாத்தா பாட்டிகளிடம் கதை கேட்காமல், வீட்டுக்குள்ளேயே விளையாட விட்டோ சம்மர் வகுப்புகளுக்குள் திணித்தோ குழந்தைகளை குழந்தைகளாக இருக்கவிடாமல் வெயில், பயம், அக்கறை, அசுத்தம் என நமக்கு வேண்டிய பெயரை வைத்துக்கொள்கிறோம்.

நான் பட்ட கஷ்டங்களை என் குழந்தை படக்கூடாது என நினைக்கும் நாம்தான், நாம் அனுபவித்த அத்தனை சந்தோசங்களையும் நம் குழந்தைகளுக்கு தர மறுக்கிறோம்.

முடிந்த அளவு குழந்தைகளை குழந்தைகளாக இருக்க விடுங்கள் இந்த கோடை விடுமுறையிலாவது....!

– அர்ச்சனா சுவேதாரண்யம், பெசன்ட் நகர்,
சென்னை–90. செல் : 9943702054

## மங்கல சந்திப்பு

### விண்ணப்பப் படிவம்

பெயர் :

பிறந்த தேதி : பிறந்த நேரம் :

கோத்திரம் :

நட்சத்திரம் :

ராசி :

உயரம் :

எடை :

நிறம் :

கல்வித் தகுதி :

பணி விபரம் :

பணிபுரியும் நிறுவனம்:

பணிபுரியும் இடம் :

வருட வருமானம் :

தந்தையார் பெயர் :

தந்தையார் பணி :

தந்தையார் பூர்வீகம் :

தாயார் பெயர் :

தாயார் பணி :

தாயார் பூர்வீகம் :

சகோதரர்கள் :

சகோதரிகள் :

பிறந்த ஊர் :

திருமண நிலை :

தொடர்பு முகவரி :

அலைபேசி எண் :

மின்னஞ்சல் :

# திருச்சி கார்காத்தார் சங்கம்

**50-வது ஆண்டு பொன்விழா மற்றும்**
**20வது மங்கல சந்திப்பு புத்தக வெளியீட்டு விழா**

அன்பு சொந்தங்களே... வணக்கம் !

**சிறப்பு :** இது திருச்சி சங்கத்தின் ராசியான மங்கல சந்திப்பு இது வரை 1000க்கு மேற்பட்ட திருமணங்கள் நடத்த உதவிய சந்திப்பு.

**நீங்கள் செய்ய வேண்டியது :** இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தினை முறையாக எல்லா காலங்களையும் விடுதலின்றி தமிழில் தெளிவாக நிரப்பிட வேண்டுகிறோம்.

**அனுப்பவேண்டிய முகவரி :**
**மணி பிரிண்டர்ஸ்,**
C15/1, 5வது மெயின் ரோடு, இராமலிங்கநகர், உறையூர், திருச்சி – 620 003.

**பதிவு கட்டணம் : ரூ.400/-** (ரூபாய் நானூறு மட்டும்) புத்தகம் மற்றும் அஞ்சல் செலவு ஆகியவற்றிற்கான செலவுக்காக மட்டும். இத்தொகையை காசோலையாகவோ, வரைவோலையாகவோ / **NEFT** மூலம் **Trichy Karkathar Sangam, Indian Bank, Thiruvanaikovil Branch, Trichy-5. A/c No. 451248110 IFSC : IDIB000S110** என்ற வங்கி கணக்கிலோ செலுத்தலாம். (**NEFT** மூலம் பணம் அனுப்புபவர்கள் அதற்கான ரசீது நகலை விண்ணப்பத்துடன் கட்டாயம் இணைத்து அனுப்பவும்.)

பொன்விழா நாள் : **30.07.2023 ஞாயிற்றுக்கிழமை**
இடம் : **அரிஸ்டோ ஹோட்டல் L.K.S. மஹால்**
மத்திய பேருந்து நிலையம் அருகில், திருச்சி – 620 001.
**மேற்படி விழாவில் மங்கல சந்திப்பு புத்தகம் வெளியிடப்படும்.**

**பொன்விழாவை முன்னிட்டு மங்கல சந்திப்பு நடைபெறாத காரணத்தினால் மங்கல சந்திப்பு வரன் பதிவு புத்தகம் 01.08.2023 முதல் கொரியர் மூலம் பதிவு செய்த வரன்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.**

## பதிவுக்கு கடைசி நாள் : 15.07.2023

| | | |
|---|---|---|
| நவிலு. **N.B. பாலசுப்ரமணியன்**<br>அமைப்பாளர் / திருமண மையம் | **C.சபாபதி**<br>இணை அமைப்பாளர்<br>94459 17361 | **T.ராஜராஜன்**<br>இணை அமைப்பாளர்<br>98429 88772 |
| **M. பாலசுப்ரமணியன்**<br>தலைவர் / திருச்சி கார்காத்தார் சங்கம்<br>98424 44322 | **C.சுப்ரமணியன்**<br>செயலாளர்<br>98424 75125 | **N.பாண்டியன்**<br>பொருளாளர்<br>94879 96520 |

## நட்சத்திரங்களும் மரங்களும் (தொடர்ச்சி)

14. சேதுசுப்ரமணியன், சிதம்பரம்.
அலைபேசி : 9443665642

### 13. அஸ்தம்

அஸ்தம் நட்சத்திரம் வானில் காணப்படும் கன்னி ராசி மண்டலத்தில் இருக்கின்ற முழுமையான நட்சத்திரமாகும். இதன் நான்கு பாதங்களும் கன்னி ராசியில் இடம் பெற்றுவிடுகின்றன. உள்ளங்கை போலவும் ஒற்றை மயில் பீலி போலவும் காணப்படும் இந்த நட்சத்திரத்தின் கிரகாதிபதி சந்திரன் ஆகும். புதன் கிரகம் உச்சம் பெறுவதும் அஸ்தம் நட்சத்திரமேயாகும். எனவே இந்த நட்சத்திரக்காரர்களுக்கு புதனுக்குரிய சாதுரியமும் சந்திரனுக்குரிய கற்பனைத் திறனும் காணப்படும். இந்த நட்சத்திரத்தின் மிருகம் பெண் எருமை, பறவை பருந்து, கணம் தேவகணம், விருட்சம் வேல மரம், அதிதேவதை ஆதித்தியன், பரிகார தெய்வம் பெருமாள் என்பவையாம். கன்னி இராசிக்குரிய புரட்டாசி மாதத்தில் புதனின் அதிபதியான பெருமாள் வழிபாடு எண்ணற்ற பலன்களை நல்கும். விநாயகப் பெருமானுக்குரிய நட்சத்திரமும் அஸ்தம் நட்சத்திரமேயாகும்.

அஸ்தம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள், மனோ தைரியமும், உற்சாக மனப்பான்மையும் கொண்டவர்கள். புத்தி கூர்மையும், அனைவரையும் கவரும் வசீகரமும் உடையவர்கள். மற்றவர்கட்கு உதவிடும் மனப்பான்மை உண்டு. ஏமாற்றும் குணம் இல்லையென்றாலும், தன்னை ஏமாற்றுபவர்களைப் பழி வாங்கும் எண்ணம் உள்ளவர்கள். வாழ்வின் பிற்காலத்தில் தனம் உடையவர்கள். வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும். அஸ்தம் நட்சத்திரத்துக்குரியவர்களுக்கு சந்திரன் கிரகாதிபதியாய் இருப்பதால் இவர்களுக்கு ஆரம்ப திசை சந்திரதிசையாக அமையும். அஸ்தம் நட்சத்திரத்துக்குப் பரிகாரத் தலமாக விளங்குவது தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற தலமான திருவேற்காடு ஆகும்.

**தலவரலாறு :**

பிரளய காலத்தில் இந்த உலகம் மூழ்கிய போது, சிவபெருமான் மீண்டும் உலகைப் படைக்க விரும்பினார். பெருகிய வெள்ளத்தை வற்றச் செய்து, நான்கு வேதங்களான ரிக், யஜுர், சாம, அதர்வன வேதங்களை இத்தலத்தில் வெள்வேல் மரங்களாக வடிவெடுக்குமாறு பணித்தார். அவ்வாறே, நான்கு வேதங்களும் வெள்வேல் மரங்களாக மாறி இறைவனை வழிபட்டு வந்தன. எனவே இத்தல விருட்சம் வெள்வேல் மரமாகியது. திருவேற்காடு என்னும் பெயரும் அவ்வாறே அமைந்தது.

பிரணவத்துக்கும் பொருள் சொல்லத் தெரியாத பிரம்மாவை முருகப் பெருமான் சிறையில் வைத்தார். அதனால்படைப்புத்தொழில்தடைபடவேசிவபெருமான் நந்தியை முருகனிடம் அனுப்பி பிரம்மாவை விடுதலை செய்யப் பணித்தார். ஆனால், முருகன் அதற்கு இசையவில்லை. எனவே, சிவபெருமானே நேரில் சென்று படைப்புத் தொழில் தடைபடுவதால் ஏற்படும் சிக்கல்களை விளக்கி, பிரம்மாவை விடுவித்தார். முருகப் பெருமானை திருவேற்காடு சென்று தன்னை வழிபடுமாறு ஆணையிட்டார். அதன்படி, முருகன் இங்கு வந்து தனது வேலினால் தீர்த்தம் உண்டாக்கி சிவனை வழிபட்டார். இக்கோயிலின் கருவறை மேற்குப் பக்கத்தில் உள்ள முருகன் சந்நிதியில் முருகனின் முன்னாள் சிவலிங்கம் இருப்பதைக் காணலாம். இத்தகைய அமைப்பை வேறு எங்கும் காண முடியாது.

சிவபெருமான் பார்வதி தேவியை திருமணம் செய்த காலத்து, தேவர் முதலானோர் பெருந்திரளாகத் திரண்டதால் வடதிசை உயர்ந்து தென்திசை தாழ்ந்தது. இதனைச் சரி செய்ய இறைவன் அகத்தியரை தென்திசைக்கு அனுப்பினார். அகத்தியர் இறைவன் இறைவி திருமணக் காட்சியைக் காண விழைந்து வேண்டினார். அதற்கு இறைவன் இத்தலத்தில் அகத்தியருக்கு திருமணக் கோலம் காட்டி அருளினார்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான மூர்க்க நாயனார் அவதரித்த தலம். அடியார்களுக்கு தினமும் உணவளித்து வந்த நிலையில் அவருக்கு வறுமை நேரிட்டது. அதனால், சூதாட்டத்தை மூர்க்கத்தனமாக ஆடி கிடைத்த பணத்தைக் கொண்டு அடியவர்களுக்கு உணவளித்து முக்திப்பேறு பெற்றார்.

இத்தலத்து இறைவனை திருமால், விநாயகர், பராசர முனிவர், அத்திரி, பிருகு, வசிட்டர், கௌதமர் ஆகியோர் வழிபட்டு பேறு பெற்றனர். ஆதிசேடனும் வழிபட்டதால் இத்தலத்தில் யாரையும் பாம்பு தீண்டுவதில்லை.

இத்தலம் திருமண பாக்கியம் அருளும் தலமாகவும் விளங்குகிறது.

**விருட்சம் :**

தலவிருட்சமாக விளங்கும் வெள்வேல் மரம் Acacia Leueophloea என்ற தாவரவியல் பெயரைக் கொண்டது. Mimosacoae என்ற தாவரக் குடும்பத்தைச் சேர்ந்தது. வறட்சியைத் தாங்கக் கூடிய இம்மரம் பரவலாக இந்தியா முழுவதும் காணப்படுகிறது. இலைகள் சிறியவை. கூட்டிலை அமைப்பு உடையவை. முட்கள் கொண்ட மரம். பூக்கள் ஜுன், ஜுலையில் மஞ்சள் நிறத்துடன் தோன்றுகின்றன. காய்கள் டிசம்பர்

– ஜனவரி மாதங்களில் உருவாகும். நெற்றுகளில் 10–12 விதைகள் பொதிந்திருக்கும்.

**மருத்துவப் பயன்கள் :**

வெள்வேல் மரத்தின் பட்டை மருத்துவப் பயன் கொண்டது. பட்டை வளிச்சுரம் போக்க வல்லது வயிற்றிலுள்ள புழுக்களை அழிக்கும் குணமுடையது. வீக்கம், வலி, கை கால் குடைச்சல், வாந்தி ஆகியவற்றைக் குணமாக்கும். வேர்ப்பட்டை, அருகம் வேர் இரண்டையும் வகைக்கு கால் கிலோ எடுத்து 2 லிட்டர் நீர் விட்டு ½ லிட்டர் ஆகும் வரை காய்ச்சி அரைலிட்டர் நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி எடுத்துக் கொண்டு தேய்த்து முழுகி வர பித்த மயக்கம், வாதக் காய்ச்சல், இடுப்பு வலி ஆகியவை குணமாகும்.

மரத்தின் தழைகள் ஆடுகளுக்குத் தீவனமாகும். பட்டையிலிருந்து நார் தயாரிக்கலாம். உறுதியான கயிறு தயாரித்து மீன் வலை, படகு கட்டுதல் ஆகியவற்றுக்குப் பயன்படுத்தலாம். மரம் வேளாண்மைக் கருவிகள் தூண்கள் செய்யப் பயன்படும். மரத்திலிருந்து பெறப்படும் பிசின் மருந்துப் பொருள்கள் தயாரித்தல் சாயத்தொழில், ஒட்டும் பசை ஆகியவற்றுக்குப் பயன்படுகிறது.

**வழிபாடு:** அஸ்தம்நட்சத்திரக்காரர்கள் திருவேற்காடு மற்றும் வேதபுரீஸ்வரர் அருள்பாலிக்கும் திருவோத்தூர் (செய்யாறு), தேரழுந்தூர், புவனகிரி, திருவேதிகுடி, ஸ்ரீ கிருபாபுரீசுவரர் தலமான மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் அருகிலுள்ள கோமல் ஆகிய தலங்களை வழிபாடு செய்ய நற்பலன்கள் கிடைக்கும்.

மேலும் வேல மரக்கன்றுகளைக் கோயில் வளாகங்களிலும், பெருங்கட்டட தோட்டங்களிலும் நட்டு பராமரித்து வருவதும், மரத்தை வழிபடுவதும் சிறந்த பரிகாரமாகும்.

(பயணிப்போம்)

---

## பாராட்டுகிறோம்

சங்க ஆலோசகர் டாக்டர் திரு. கு. விவேகானந்தன் அவர்கள், பேரன் திருமணத்தை முன்னிட்டு கார்குல மாணவர்களின் கல்வி நிதிக்காக ரூபாய் 60,000/– அண்ணாநகர் அமுதசுரபி அறக்கட்டளைக்கு வழங்கி உள்ளார்கள். அவருக்கு சங்கத்தின் சார்பிலும், அண்ணாநகர் அமுதசுரபி அறக்கட்டளை சார்பிலும் நன்றியும், வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது.

T. தியாகராஜன், தலைவர்

அண்ணா நகர் அமுத சுரபி அறக்கட்டளை

98840 14600


## திருச்சி கார்காத்தார் சங்கம்

### 50-வது ஆண்டு பொன்விழா அறிவிப்பு

திருச்சி கார்காத்தார் சங்கத்தின் பொன்விழா வருகின்ற 30.07.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள அரிஸ்டோ ஹோட்டல் **L.K.S. மஹாலில்** மிக சிறப்பாக நடைபெற உள்ளது. இந்த நிகழ்ச்சி கொண்டாட்டத்தை தொடர்ந்து நம் வரலாறுகளை உள்ளடக்கிய ஆவணமாக ஒரு வண்ண மலர் வெளியிடவும் திட்டமிட்டு இருக்கின்றோம். அந்த மலரில் உங்களது விளம்பரங்களை அளித்து எங்கள் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். **A4 Size** பொன்விழா மலரில் விளம்பரம் (கலரில் மட்டும்) வெளியிட கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**முழு பக்கம் : ரூ.6000/-**
**அரை பக்கம் : ரூ.3000/-** } **Multi Colour**

**விளம்பர குழு**

திரு. நவிலு. M. சுப்ரமணியன் 99439 33990

திரு. Er.S. சோமசுந்தரம் 90950 99869

E-mail : maniprinters.cs@gmail.com

M. பாலசுப்ரமணியன் 98424 44322

C.சுப்ரமணியன் 98424 75125

N.பாண்டியன் 94879 96520

## குதிரை வண்டி - A. Story of 1965....

Dr. D. Kalyanakumar, Trichy-18.

நாங்கள் பயணிக்கும் ரயில் (meter gauge) திருவாரூரை நெருங்கிக் கொண்டிருக்கும்..... ஸ்டார் ஹோட்டல் பாத்ரூம் பைப் மாதிரி ஏகப்பட்ட கைப்பிடிகள் நீராவி இஞ்சினுக்குள் துருத்திக் கொண்டிருக்கும். அதில் ஏதோ ஒன்றிரண்டை டிரைவர் பிடித்து இழுக்க ரயிலின் வேகம் குறையும். பிறகு இன்னொரு லீவர் மேல் ஏறி உட்கார்ந்து ப்ரேக்கைப் போடுவார். சிலிண்டரிலிருந்து நிறைய சுடுநீர் கொட்டும் ரயில் ஒரு வழியாக ப்ளாட்பாரத்தில் நிற்கும் மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக்கொண்டு இறங்குவோம். பெரியவர்களுக்கு மட்டும் தான் வாசல் தகவு வழியாக இறங்கும் பாத்யதை உண்டு லக்கேஜ்கள் எல்லாம் ஜன்னல் வழியாகவே இறக்கப்படும்.

அந்தக் காலத்து கம்பார்ட்மெண்ட் ஜன்னல்களுக்கு கம்பிகள் கிடையாது. அது Windows டெவலப் ஆகாத காலம் லக்கேஜ்கள் ஜன்னல் வழியாக இறக்கப்பட்டதும் என்னைப் போன்ற பொடிசுகளும் ஜன்னல் வழியாகவே இறக்கப்படுவார்கள் இதற்காக ரயில் உள்ளே ஒரு Giver இருப்பார். ப்ளாட்பாரத்தில் ஒரு Taker இருப்பார். நம் குடும்பத்தைச் சாராத மூன்றாம் நபர் கூட இந்த Give and take policy ல் இணைவார்.

லக்கேஜ்கள் எண்ணப்படும் கை கால் முளைத்த லக்கேஜ்களுக்கும் Numbering system உண்டு. பித்தளைக் கூஜாவுக்கு நம்பர் கிடையாது. அது Hand luggage அப்போதெல்லாம் பயணத்தின் போது படுக்கை கண்டிப்பாக இருக்கும். அதன் உள்ளே தான் துணிமணிகளை சுருக்கம் சுருக்கமாய் அள்ளிப் போட்டு சுருட்டியிருப்பார்கள். சுருக்கமாகச் சொன்னால் அது ஒரு படுக்கப் போட்டிருக்கும் லாண்டரி பேஸ்கட். படுக்கையை கயிறு போட்டு கட்டியிருப்பார்கள். யூனியன் ஜேக் கொடி மாதிரி ப்ளஸ், பெருக்கல் இரண்டுமே அதில் இருக்கும். ஜெமினி கணேசன் மாதிரி பிஸ்தாக்கள் மட்டும் தான் வலது தோளில் ஹோல்டாலை கோணலாக சாய்த்துக் கொண்டு ரயிலிலிருந்து இறங்குவார்கள். எங்களுக்கு எல்லாம் பவானி ஜமக்காளம் தான் ப்ராப்தி.

இது நாள் வரை அந்த ஹோல்டாவை எப்படி பேக் செய்கிறார்கள் என்றே எனக்கு புரிபடவில்லை. அதை மடிப்பதும் சுருட்டுவதும் ஒரு கலை. ஹோல்டாலுக்குள் நம் ஜட்டி பனியன்கள் எல்லாம் தலையணை அவதாரம் எடுத்திருக்கும் என்று மட்டும் தெரியும். அப்பாவும் அம்மாவும் முன்னால் போவார்கள். பின்னால் கோழிக்குஞ்சுகள் மாதிரி நாங்கள் ஒரே வித்தியாசம் கோழிக்குஞ்சுகளுக்கு மண்டையில் முடி இருக்கும் எங்களுக்கு நாட் அலோவ்ட் முடி உச்சவரம்பு சட்டம் அமுலில் இருந்த காலம் அது.

வெளியே நான்கு குதிரை வண்டிகள் காத்துக்கொண்டு நிற்கும். எங்களைப் பார்த்ததும் ஒரு குதிரை வண்டி முன்னால் வரும் குதிரை வண்டிக்காரர் கையில் இருக்கும் குச்சி முப்பது டிகிரி கோணத்தில் ஏதோ சேட்டிலைட்டை சுட தயாராக இருப்பது போல ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கும். ''அய்யா,,,, ஏறுங்கய்யா'' என்பார் வண்டிக்காரர். அவரை இனி கோவிந்து என அழைப்போம். எங்கே போக வேண்டும் என்று கேட்க மாட்டார். மேட்டு தெரு MGR வீடு என்றால் அந்த சின்ன ஊரில் அனைவருக்கும் தெரியும். எனக்குத் தான் MGR என்றால் புரியாமல் இருந்தது.

வண்டிக்குக் கீழே பன்னியை கட்டித் தூக்கிப்போகும் வலை மாதிரி ஒன்று தொங்கிக்கொண்டிருக்கும். குதிரைக்குண்டான புல் அதில் தான் ஸ்டோர் செய்து வைத்திருப்பார்கள். கோவிந்து குதிரைக்குப் புல் போட்டு நான் பார்த்ததில்லை. ஏதோ statutory requirements க்காக அந்த புல் பேங்கை வைத்திருக்கிறார் என்று தோன்றியது. அந்த புல்களுக்கு மேல் படுக்கை மற்றும் இதர சாமான்களை வைப்பார் கோவிந்து. இதன் விளைவாக வீட்டுக்குப் போனவுடன் பல புல்லரிக்கும் சம்பவங்கள் நடக்கும். வண்டிக்கு உள்ளே ஒரு லோ பட்ஜெட் மெத்தை இருக்கும். இங்கும் புல் தான். மேலே சாக்கு போட்டு மூடியிருப்பார்கள். புல் ஒரு சம்பிரதாயத்திற்குத் தான் இருக்கும். கவாஸ்கர் வண்டியில் ஏறினால் There is little amount of grass and it may assist passengers என்று பிட்ச் ரிப்போர்ட் கொடுத்து விடுவார்.

கோவிந்து எங்களையெல்லாம் கண்ணாலேயே எடை போடுவார். சாக்கில் யார் உட்கார வேண்டும் என்று அவர் சாக்ரடீஸ் மூளை வேலை செய்யும். பொதுவாக பெண்களுக்குத்தான் சாக்கு அலாட் ஆகும். ஏனென்றால் இந்த சாக்கு சறுக்காது. அது ஒரு Safe zone கால் வைத்து ஏற பின் பக்கம் ஒரு படி இருக்கும். உள்ளங்கை சைஸுக்குத் தான் இருக்கும். ஏகப்பட்ட பேர் பால் வைத்து வைத்து உள்ளங்கை ரேகை முழுக்க அழிந்து போயிருக்கும் கால் வைத்தால் வழுக்கும். வழுக்கி வீழ்வதற்கே என்று பயமுறுத்தும். ஒரு வழியாக பெண்கள் முதலில் ஏறுவார்கள். சாக்கு மெத்தையில் உட்காருவது ஒரு கலை. அந்த காலத்து பெண்கள் Table mate மாதிரி. பதினாறு வகைகளில் மடங்குவார்கள். ஒரு குக்கர் கேஸ்கட் அளவே உள்ள வட்டத்துக்குள் கூட கால்களை மடக்கி உட்காரும் அளவுக்கு Flexibility வைத்திருந்தார்கள்.

ஒரு பெண்ணுக்கு எதிரே பொதுவாக இன்னொரு பெண்ணே உட்கார வைக்கப்படுவார். பொதுவாக மாமியாரும் மருமகளும்தான் எதிர் எதிரே உட்காருவார்கள். மருமகளுக்குத் தான் பிரச்சினை. கால் மாமியார் மேல் படாமல் உட்கார

வேண்டும். வாஸ்து புத்தர் மாதிரி முழங்கால்களைக் கட்டிக்கொண்டு உட்கார வேண்டும். அடுத்து பாட்டி ஏறுவார். பாட்டி நிறைய மடி பார்ப்பார். ஆனால் உடம்பு தான் மடியாது கஷ்டப்பட்டு உட்காருவார். பாட்டி மீது எல்லோரும் படுவார்கள். வேறு வழியில்லை. அரை மணி நேரத்துக்கு மடி விலக்கு கொள்கையை அமுல்படுத்துவார் பாட்டி.

வண்டிக்கு மத்தியில் ஜன்னல் இருக்கும். ஏழு இஞ்ச் ஸ்க்ரீன் செல்போன் சைஸுக்குத்தான் இருக்கும் அந்த ஜன்னல். அதன் வழியாகப் பார்த்தால் கும்பகோணம் பாத்திரக்கடை என்ற கடையின் பெயர்ப் பலகை முழுதாகத் தெரியாது. எந்த கோணத்தில் பார்த்தாலும் கோணம் மட்டும் தான் தெரியும். குதிரை பாட்டுக்கு ஒரு ப்ளாஸ்டிக் ஸ்டுல் மாதிரி ஆடாமல் அசையாமல் நின்று கொண்டிருக்கும். வண்டியின் உள்ளே ஆட்கள் ஏறியதும் குதிரையின் கால்களுக்கு லோட் டிரான்ஸ்பர் ஆகும். கால்கள் உதறும் சில சமயம் வண்டி முன்னால் கூட போக ஆரம்பிக்கும்.

இதைத் தவிர்க்க வண்டியைக் கையினால் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு Hand brake போட்டுக் கொண்டு நிற்பார் கோவிந்து 'ஏண்டா... அந்த குதிரையை கெட்டியா பிடிச்சிக்கோடா' என்று அலறுவார் பாட்டி. பாட்டி எல்லோரையும் வாடா போடா என்று தான் கூப்பிடுவார். எவ்வளவு வயதானவர்களாக இருந்தாலும் டா தான். அவருக்கு அந்த Civil liberty உண்டு. இரண்டு சுமாரான பையன்களை பின்னால் உட்கார வைப்பார் கோவிந்து. குறுக்காக ஒரு கம்பியைப் போடுவார். Location sealed என்று அதற்கு அர்த்தம்.

பின்னால் உட்காருவதில் ஒரு சௌகரியம் உண்டு. காலைக் கீழே தொங்கப் போட்டுக் கொள்ளலாம். வேடிக்கை பார்க்கலாம். தெருவோரத்து மரங்களும் ஓட்டு வீடுகளும் ரிவர்ஸில் போவதைப் பார்க்க ஆனந்தமாக இருக்கும். பின்னால் ஆட்கள் ஏறியவுடன் வண்டி பின்நோக்கிச் சாயும் இந்த சமயத்தில் தான் 'டேய் கடன்காரா' என்ற திட்டு பாட்டியிடமிருந்து கிளம்பும். பாவம். இவ்வளவுக்கும் கோவிந்துவுக்கு எந்த கடனும் இருக்காது. அவனால் எந்த பேங்குக்கும் NPA ஏறியதில்லை.

கோவிந்து ஒரு ரவுண்டு அடித்து பின்னால் வருவார். கொஞ்சம் உள்ளே போங்க... தம்பி காலை இப்படி நீட்டு என்று சில Balancing acts செய்வார். பிறகு அப்பா முன்னால் ஏறி உட்காருவார். முன்னால் உட்காருவது மிகவும் கடினம். அப்பாவின் ஒரு தொடை வண்டிக்குள்ளும் இன்னொரு தொடை முன்னால் இருக்கும் சட்டத்தின் மீதும் இருக்கும். அப்பா தொடை நடுங்கியாக வந்து கொண்டிருப்பார். அப்பா பக்கத்தில் என்னைத் தூக்கி வைப்பார்கள். முன் இருக்கை. வேடிக்கை பார்க்க நன்றாக இருக்கும். ஆனால் பின் விளைவுகள் பயங்கரமாக இருக்கும். எனக்குப் வலது பக்கத்தில் கோவிந்து உட்காருவார். 'தம்பீ.... நகந்து உட்காரு. காலை கீழே போடு' என்பார். காலை கீழே போட்டதும் தான் நமக்கு பிரச்சினை ஆரம்பிக்கும்.

குதிரைக்கு வால் நீளமாக இருக்கும். அதில் முடிவில்லாமல் முடி இருக்கும் திரௌபதி மாதிரி குதிரையும் ஏதோ சபதம் செய்திருக்க வேண்டும். முடியை முடியாமல் தொங்கப் போட்டுக் கொண்டே வரும். அந்த முடி நம் காலில் பட்டு கிச்சுக்கிச்சு மூட்டும் சில சமயம் குத்தும் குதிரையின் வால் முடியில் இயற்கையிலேயே முள் உண்டா என்று நமக்கு சந்தேகம் வரும். முதலில் வண்டி பர்ஸ்ட் கியரில் மெதுவாகத் தான் போகும் திடீரென்று கோவிந்து தன்னை மறப்பார். குச்சு எடுத்து குதிரையை அடிப்பார். வடிவேலு இருந்திருந்தால் 'நல்லாத்தானே போயிகிட்டு இருக்கு... ஏன்?' என்று கேட்டிருப்பார். குதிரை வேகம் எடுக்க ஆரம்பிக்கும் வண்டிக்குள் உட்கார்ந்திருப்பவர்கள் மண்டை பக்கத்து கூரையில் டங் டங்கென்று இடித்துக்கொள்ளும். முன்னால் உட்கார்ந்திருக்கும் எனக்கு சறுக்கு மரத்தில் கீழே போவது போல ஒரு ஃபீலிங் வரும் இப்போது குதிரை தன் வாலை உயர்த்தும் அது என் தொடையை நோக்கி வாலை நகர்த்தும். அந்த அவுட் கோயிங் வால் ஏகமாய் என் தொடையில் உராசி தொடையெங்கும் கீறல் விழும் தொடை வால் பேப்பர் ஆகியிருக்கும்.

திடீரென்று குதிரை வேகத்தைக் குறைக்கும். ஒரு இடத்தில் நின்றே விடும். கோவிந்து குதிரையிடம் ஏதோ பேசிப் பார்ப்பார். அது நகராது. பதினைந்து நாள் முன்னாலேயே ஸ்டிரைக் நோட்டீஸ் கொடுத்திருக்குமா எனத் தெரியாது. வாரைப் பிடித்து இழுப்பார். அடிப்பார். குதிரை நகராது. தியானம் பரமானந்தம் என்று நின்று கொண்டிருக்கும் திடீரென்று அதுவே நகர ஆரம்பிக்கும். மறுபடியும் வேகம் பிடிக்கும். பத்து நிமிடத்தில் எங்கள் வீட்டு வாசலில் நிற்கும். கோவிந்து அதற்கு ரூட் எப்படி சொன்னார்? அது எப்படி வந்தது? கூகுளாலேயே கண்டுபிடிக்க முடியாத புதிர் இது அதன் மண்டைக்குள் ஓவர்சீயர் வீட்டுக்கு Navigation implant ஆகியிருக்கிறது. வீட்டுக்குள் லக்கேஜ்களையும் கோவிந்துதான் கொண்டு வந்து வைப்பார். அப்பா பணம் கொடுப்பார். கண்டிப்பாக ஒரு ரூபாய்க்குள்தான் இருக்கும். எங்கள் அடுத்த குதிரை சவாரிக்கும் இதே கோவிந்துதான் தவறாமல் வருவார்....

(பயணங்கள் நிச்சயமாக முடிவதில்லை)

'ஒரு சாதாரணமான சம்பவத்தை இவ்வளவு சாமர்த்தியமாக, சுவாரஸ்யமாக, ஹாஸ்யமாக சஜாதாவைத்தவிர வேறு யாராலும் சொல்ல முடியுமா என்பது சந்தேகம்'.

Sujatha's beautiful story!

(மலரும் நினைவுகள்)

# சொத்துப் பரிமாற்றச் சட்டம் 1882
## TRANSFER OF PROPERTY ACT 1882

மேலையூர் ச. அன்பழகன் 98413 73184

சொத்து பரிமாற்றம் என்பது ஒரு அசையா சொத்தினை விலைக்கு வாங்கும் கிரையம் மட்டும் தான் என்று பலர் தவறாக நினைப்பார்கள். அடை மானம், உடன் படிக்கைகள் கிரையம் தான செட்டில்மெண்ட் போன்ற பல வித மான சொத்து பரிமாற்றங்களும் ட்ரான்ஸ்ஃபர் ஆஃப் ப்ராபர்டி என்னும் சொத்து பரிமாற்றச் சட்டம் 1882 ன் கீழ் வரும் இந்த சொத்து பரிமாற்றச் சட்டம் TRANSFER OF PROPERTY ACT 1882 என்பது 8 அத்தியாயங்களையும் 137 பிரிவுகளையும் ஒரு அட்டவணையை யும் கொண்ட ஒரு பெரிய சட்டம். இந்த ஒரு கட்டுரையிலேயே அந்த சட்டத்தின் அனைத்து அம்சங்களையும் பார்த்து விட முடியாது சில பிரிவுகள் / அம்சங்கள் பற்றி ஏற்கனவே வேறு சந்தர்ப்பங்களில் / கட்டுரைகளில் பார்த்திருப் போம் இந்தக் கட்டுரையில் சில முக்கிய அம்சங்களைப் பார்ப்போம். இதில் சொல்லப் படாத வற்றை இனி வரும் காலங்களில் பார்ப்போம்.

**சொத்து என்றால் என்ன ?**

சொத்து பரிமாற்றச் சட்டம் பெயரில் இருப்பது போல் இரண்டு அம்சங்களைக் கொண்டது. ஒன்று சொத்து இன்னொன்று பரிமாற்றம். இந்த இரண்டையும் முதலில் பார்ப்போம் . ப்ராபர்டி என்னும் சொத்தினை அசையா சொத்து மற்றும் அசையும் சொத்து என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

**1. அசையா சொத்து**

நிலத்தில் நிற்கும் மரம் , வளரும் பயிர் மற்றும் விளையும் புல் போன்றவை தவிர

**2. அசையும் சொத்து**

சட்டத்தின் விளக்கம், "அசையாச் சொத்தில் நிற்கும் மரம், வளரும் பயிர்கள் அல்லது புல் ஆகியவை இல்லை" என்று கூறுகிறது. பிரிவு 3 (26), பொது உட்பிரிவு சட்டம், 1897, வரையறுக்கிறது, "அசையாச் சொத்து" என்பது நிலம், நிலத்திலிருந்து எழும் நன்மைகள் மற்றும் பூமியுடன் இணைக்கப்பட்ட விஷயங்கள் அல்லது பூமியுடன் இணைக்கப்பட்ட எதையும் நிரந்தரமாக இணைத்தல் ஆகியவை அடங்கும். மேலும், பதிவு சட்டம், 1908, 2 (6) "அசையாச் சொத்து" என்பது நிலம், கட்டிடங்கள், பரம்பரை கொடுப்பனவுகள், வழிகளுக்கான உரிமைகள்.

**பரி மாற்ற வகைகள்**

1882 ஆம் ஆண்டின் சொத்து பரிமாற்றச் சட்டத்தின் 5 வது பிரிவு வரையறுக்கப் படுகிறது, அதன்படி சொத்து ஒரு உயிருள்ளநபரால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்குஅன்றைய தேதியில் அல்லது எதிர்கால காலங்களில் வழங்கப்படும். எதிர்கால சொத்துகளை பரிமாற்றம் செய்ய இயலாது சொத்து பரிமாற்றம் செய்பவரைப் போலவே சொத்தினை பரிமாற்றம் பெறுபவரும் தகுதி உள்ளவராக இருக்க வேண்டும் அவ்வாறு பெறுபவர் வயது வராத மைனராகவோ புத்தி ஸ்வாதீனம் இல்லாதவராகவோ அல்லது தாயின் கருவில் உள்ள குழந்தையாகவோ கூட இருக்கலாம் பலவகையான பரிமாற்றங்கள் வருமாறு ;-

கிரையம் – இது ஒரு வகைப் பரிமாற்றம் இதில் பரிமாற்றம் செய்பவர் பதிலுக்கு பணமாகப் பெறுவார்

அடைமானம் – இது சொத்தின் மீது ஒரு குறிப்பிட்ட காலத்துக்கான பரிமாற்றம் அந்த குறிப்பிட்ட காலத்துக்கு வட்டி செலுத்த வேண்டும்

குத்தகை – இதில் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அசையா சொத்தினை அனுபவிக்கும் உரிமையை பரிமாற்றம் பெற்றவர் பெறுவார்

பரிமாற்றம் – இதுவும் கிரையம் போன்ற ஒரு பரிமாற்றம் தான் ஆனால் இதில் பரிமாற்றம் பெறுபவர் பதிலுக்குப் பணமாகக் கொடுக்காமல் வேறு அசையா சொத்தினைக் கொடுப்பார்

தானம் / பரிசு – இதிலும் கிரையம் போல் அசையா சொத்தின் உரிமை இன்னொருவருக்கு மாறுகிறது ஆனால் அதற்கு பதிலாக அவர் பணமோ அல்லது வேறு அசையா சொத்தோ கொடுக்க வேண்டாம் முற்றிலும் இனாமாக தானமாகக் கொடுக்கப்படுவது

**54. கிரையப் பத்திரம் வரையறை – "Sale" defined**

சொத்து பரிமாற்றம் பற்றிக் கூறும் சொத்து பரிமாற்றச் சட்டம் 1882 பிரிவு 54 ல் சேல் என்னும் கிரையம் என்றால் என்ன என்பது வரையறுக்கப்படுகிறது அதன்படி கிரையம் என்பது பணம் கொடுத்ததற்கு அல்லது பாதி கொடுத்து மீதி கொடுப்பதாக உறுதி கூறிய நிலையில் அந்தப் பணத்துக்கு பதிலாக அச் சொத்தின் உரிமையை மாற்றிக் கொடுப்பதாகும்

"Sale" is a transfer of ownership in exchange for a price paid or promised or part-paid and part-promised.

Sale how made : Such transfer, in the case of tangible immovable property of the value of one hundred rupees and upwards, or in the case of a reversion or other intangible thing, can be made only by a registered instrument.

In the case of tangible immovable property of a value less than one hundred rupees, such

transfer may be made either by a registered instrument or by delivery of the property.

Delivery of tangible immovable property takes place when the seller places the buyer, or such person as he directs, in possession of the property.

**பரிமாற்றம் ஆகாத அசையா சொத்து நடவடிக்கைகள்**

**1 பாகப் பிரிவினை –**

சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் போன்ற இரத்தத் தொடர்புள்ள உறவினர்கள் தங்கள் சொத்துக்களை தங்களுக்குள் பிரித்துக் கொள்வது பாகப் பிரிவினை என்று அழைக்கப்படுகிறது. அது சொத்து பரிமாற்றமாக இருக்க முடியாது, ஏனெனில் அந்த சொத்து ஏற்கனவே அவர்கள் வசம் இருந்ததுதான் புதிய சொத்து எதுவும் உருவாக்கப்படவில்லை. பாகப் பிரிவினையில். முன்னதாக ஒருவருக்கு உரிய பங்கு / பாகம் அவரது குறிப்பிட்ட பங்கு, இப்போது அவருக்கே பிரிக்கப்பட்டுள்ளது.

**2 விடுதலை கொடுத்தல்**

இங்கே, மாற்றுவதற்கு எதுவும் இல்லை, ஏனென்றால் இதில், அந்த சொத்தின் உரிமையாளராக இருந்த வாரிசு, அவர் அந்த சொத்தை தனக்கு வேண்டிய நபருக்கு தியாகம் செய்தார், இடமாற்றம் செய்தவர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவராக இருக்கலாம்

**3 சரணடைதல்**

ஒரு சொத்து பரிமாற்றக்காரருக்கு வயது வராத மைனருடன் சில சொத்துக்களை மாற்றுவதற்கான ஒப்பந்தம் உள்ளது. ஆனால், மைனரின் பாதுகாவலருக்கு வேறொரு நபருடன் ஒரு நிபந்தனை இருந்தால், அது சொத்து பரிமாற்றமாக இருக்காது.

**4 வசதியுரிமை EASEMENT**

ஒரு ஈஸ்மெண்ட் என்னும் வசதியுரிமையை உருவாக்குவது பரிமாற்றம் ஆகாது

**5 உயில்**

இது உயிலை எழுதியவர் / உருவாக்கியவரின் மரணத்திலிருந்து வருகிறது பரிமாற்றம் என்பதன் வரையறைப் படி அது ஒரு உயிருள்ள நபரால் எதிர்காலத்துக்காக உருவாக்கப்படுவது அதனால் அது பரிமாற்றத்தின் வரையறையில் வராது

**6 சமரசம் / சமாதானம்**

இது ஒவ்வொரு வழக்கின் உண்மைகளையும் சூழ்நிலைகளையும் பொறுத்தது. இது மாற்றுவதற்கான தொகையாக இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம்.

**7 குடும்ப ஏற்பாடு / தீர்வு–**

எந்தவொரு குடும்பப் பிரச்சினையும் அவர்களின் சொத்துக்களைப் பற்றி எழுகிறது, பின்னர் மூன்றாவது நபர் தலையிட்டு அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்போது அத்தகைய நடவடிக்கை சொத்து பரிமாற்ற வரையறைக்குள் வராது பாகப் பிரிவினை போல் இதிலும் பங்கு பெறும் அனைவருக்கும் ஏற்கனவே அந்த சொத்தில் உரிமை இருக்கும்.

**எப்போது ஒரு நபர் சொத்தினை பரிமாற்றம் கொடுக்கத் தகுதி உடையவராவார் ?**

சொத்து பரிமாற்றச் சட்டம் 1882 பிரிவு 7 ன் படி " எப்போது ஒரு நபர் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட அனுமதிக்கப்படுகிறாரோ அவர் அந்தச் சொத்தை மாற்றவும் அனுமதிக்கப்படுவார் , பின்னர் அது நடந்தபின்னர் அந்த சொத்தை முழுமையாக அனுபவிக்கவும் அனுமதிக்கப்படுவார். நடைமுறையில் இருக்கும் காலத்திற்கு சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்படுவார் . பரிமாற்றம் செய்பவர் ஒப்பந்தத்தில் கையொப்பம் இடும் தகுதி உடையவராகவும் நல்ல மன நிலை உள்ளவராகவும் இருக்க வேண்டும்

**பரிமாற்றத்தின் செயல்பாடு**

சொத்து பரிமாற்றச் சட்டத்தின் பிரிவு 8 பல்வேறு வகையான சொத்துக்களை மாற்றுவதையும் அவை சம்பந்தப்பட்ட சட்ட சம்பவங்களையும் வழங்குகிறது. இதன் பொருள் என்னவென்றால், அனைத்து சட்டரீதியான சம்பவங்களுக்கும் உட்பட்டு, அந்த பரி மாற்றம் செய்பவர் தனது சொத்தை பயன்படுத்தக்கூடிய அனைத்து வட்டிகளுடனும் சொத்து பரிமாற்றம் பரிமாற்றக்காரருக்கு செல்கிறது.

எந்தவொரு சூழ்நிலையிலும், சொத்து நிலத்துடன் தொடர்புடையது அல்லது சொத்து வாடகைக்கு விடப்பட்டால், அந்த சொத்து பரிமாற்றம் செய்யப்பட்டவர் மற்றும் பரி மாற்றம் செய்பவர், ஆகிய இருவரும் அந்த பரிமாற்றம் நடந்தபின் அந்த சொத்தின் விளைவுகளைப் பற்றி ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும். அதன் பிறகு, எதிர்காலத்தில் எந்த பிரச்சனையும் ஏற்படாது மற்றும் சொத்து பணம் சம்பாதித்தால்தான் பரிமாற்றம் நடந்தபின் வருமானத்தை கணக்கிட முடியும்

**எதிர் காலத்தில் வரக்கூடிய சொத்தினை பரிமாற்றம் செய்ய முடியுமா ?**

சட்டபூர்வமாக, ஒரு மகன், தனது தந்தையின் சொத்தை வாரிசாகப் பெறுவான் என்று நம்புகிறான், அவனது தந்தை உயிருடன் இருக்கும் வரை, இந்தச் சொத்தின் வர இருக்கும் உரிமைகளை அவன் வேறு எந்த நபருக்கும் மாற்ற முடியாது. ஒரு நபர் தனது

எதிர்காலத்தில் தனக்கு வர இருக்கும் சொத்தின் மீதான உரிமையை வேறொருவருக்கு மாற்றுவதாக உறுதியளித்தால்,, அந்த இரு தரப்பினருக்கும் இடையிலான ஒப்பந்தம் செல்லாது . இருப்பினும், அவ்வாறு எதிர்காலத்தில் உங்களுக்கு வர இருக்கும் சொத்தினை மற்றவருக்குத் தானமாக பிரதி பலன் ஏதும் இல்லாமல் எழுதிக் கொடுத்தால் அது செல்லத் தக்கது ஆகும்

### மற்றக் கூடிய மற்றும் மாற்ற இயலாத பரிமாற்றங்கள்

சந்தர்ப்ப சூழ் நிலைக்கும் பரிமாற்றம் செய்யும் சொத்துக்கும் ஏற்ப ஒரு அசையா சொத்தினை பரிமாற்றம் செய்யும்போது அத்தகைய பரிமாற்றங்களில் வேறு சில பலன் களும் சேரும்

**1 பரிமாற்றம் செய்யப்படும் அசையா சொத்து நிலமாக இருந்தால்**

அ அந்த நிலத்துடன் சேர்ந்த ஈஸ்மெண்ட் ரைட் எனப்படும் வசதியுரிமை

ஆ அந்த பரிமாற்றத்துக்குப் பிறகு கிடைக்கும் வாடகை மற்றும் இதர லாபங்கள்

இ அந்த நிலத்துடன் சேர்ந்துள்ள பொருட்கள் மரம் கட்டிடம் போன்றவை

**2 பரிமாற்றம் செய்யப்படும் அசையா சொத்து வீடாக இருந்தால்**

அ அந்த வீட்டுக்கு உரிய ஈஸ்மெண்ட் என்னும் வசதியுரிமை

ஆ அந்த பரிமாற்றத்துக்குப் பிறகு அந்த வீட்டிலிருந்து கிடைக்கும் வாடகை

இ வீட்டில் உள்ள கதவுகள் ஜன்னல்கள் அவற்றில் பொருத்தப்பட்டுள்ள பூட்டுகள் அவற்றுக்கான சாவிகள்

ஈ அந்த வீட்டில் நிரந்தரப் பயன்பாட்டுக்காக செய்து வைக்கப்பட்டுள்ள வசதிகள் பரிமாற்றம் செய்யப்படும் சொத்து ஒரு கடன் அல்லது செயல்படுத்தக்கூடிய பிற உரிமைகோரலாக இருந்தால், பத்திரங்கள் (அவை மற்ற கடன்கள் அல்லது இடமாற்றக்காரருக்கு மாற்றப்படாத உரிமைகோரல்களுக்காகவும் உள்ளன தவிர, பரிமாற்றத்திற்கு முன் பெறப்பட்ட வட்டி நிலுவைத் தொகை அல்ல. அசையாச் சொத்தை அடமானம் அல்லது அசையும் சொத்தின் உறுதிமொழி அல்லது பாதுகாக்கப்பட்ட கடனைத் தவிர வேறு எந்தவொரு கடனுக்கான உரிமைகோரலாக செயல்படக்கூடிய உரிமைகோரல் வரையறுக்கப்படுகிறது,

### பரிமாற்றம் செய்ய இயலாத சொத்துகள்

சொத்து பரிமாற்றச் சட்டம் 1882 , இச்சட்டத்தின் விதி முறைகளின் கீழ் பரிமாற்றம் செய்ய முடியாத சொத்துகள் பற்றியும் கூறுகிறது அவற்றைப் பற்றிப் பார்ப்போம்

அ ஒரு சொத்திற்கு ஒரு வாரிசு–வெளிப்படையாக வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு, ஒரு

உறவினரின் மரணம் குறித்த ஒரு வாரிசுரிமையைப் பெறுவதற்கான வாய்ப்பு அல்லது

இதுபோன்ற வேறு ஏதேனும் மாற்ற முடியாத சாத்தியங்கள்

ஆ ஒரு நிபந்தனையை மீறிய பிறகு அதற்கான திரும்ப நுழையும் உரிமையை அதன் மூலம் பாதிக்கப்பட்ட சொத்தின் உரிமையாளரைத் தவிர வேறு யாருக்கும் மாற்ற முடியாது.

இ ஈஸ்மெண்ட் என்னும் வசதியுரிமையை அதுவரை அனுபவித்து வந்த ஆதிக்க பாரம்பரியத்திலிருந்து மாற்ற முடியாது

ஈ ஒரு சொத்தின் மீது அதன். உரிமையாளருக்கு தனிப்பட்ட முறையில் உள்ள அதன் மீதான ஆர்வத்தை அவரால் மாற்ற முடியாது.

உ எதிர்காலபராமரிப்புக்கான உரிமை, பாதுகாக்கப்பட்ட அல்லது தீர்மானிக்கப்பட்ட எந்த வகையிலும் மாற்ற முடியாது

ஊ ஒருவர் மீது வழக்கு தொடர உள்ள உரிமையை மாற்ற முடியாது.

எ ஒரு பொது அலுவலகத்தை மாற்ற முடியாது, அதே போல் ஒரு பொது அதிகாரியின் சம்பளமும், அவர் ஏற்கனவே பெற்றிருந்தாலோ அல்லது இனி பெற வேண்டி இருந்தாலோ அல்லது அதனையும் பரிமாற்ற முடியாது

ஏ இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் அரசாங்கத்தின் சிவில் ஓய்வூதியதாரர்களுக்கு அனுமதிக்கப்பட்ட உதவித்தொகை மற்றும் அரசியல் ஓய்வூதியங்களை மாற்ற முடியாது

**ஐ கீழ்க் கண்டவையும் மாற்ற முடியாதவை யாகும்**

1) இதன் மூலம் பாதிக்கப்படும் ஆர்வத்தின் தன்மையை எதிர்ப்பதால், அல்லது

(2) இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 (1872 இல் 9) இன் பிரிவு 23 இன் அர்த்தத்திற்குள் வரும் ஒரு சட்டவிரோதமான பொருள் அல்லது

3 இடமாற்றம் செய்ய சட்டப்பூர்வமாக தகுதியற்ற ஒரு நபருக்கு. த. இந்த பிரிவில் எதுவும் குத்தகைதாரருக்கு

ஆக்கிரமிக்க உரிமை இல்லாத உரிமையை கொண்டிருப்பதாக அங்கீகரிக்க கருதப்படாது,

**அங்கீகரிக்கப்படாத நபரால் பரிமாற்றம்**

ஒரு அசையா சொத்தினை மாற்றம் செய்ய உரிமை இல்லாத ஒரு நபர் அந்த சொத்தினை பரிமாற்றம் செய்ய முடியாது அப்படி அவரால் செய்யப்பட்ட ஒரு பரிமாற்றம் அங்கீகரிக்கப்படாத நபரால் செய்யப்பட்ட பரிமாற்றமாகக் கூறப்படும். பிரிவு 43– அங்கீகரிக்கப்படாத நபர்களால் பரிமாற்றம் என்பது, சில அசையாச் சொத்துகளை மாற்றுவதற்கு தனக்கு அதிகாரம் இருப்பதாக யாரோ ஒருவர் மோசடியாகக் காட்டுகிறார், மேலும் அத்தகைய பரிமாற்றத்தை பரிசீலிப்பதற்காக அத்தகைய சொத்தை தகுந்த விலைக்கு விற்பதாக அறிவிக்கிறார்.

**இந்தப் பிரிவு அனுசரிக்கப்பட கீழ்க் கண்ட நிபந்தனைகள் பூர்த்தியாக வேண்டும்**

" சொத்தினை பரி மாற்றம் செய்து தருவதாகக் கூறியவருக்கு ஏமாற்றும் நோக்கம் இருக்க வேண்டும்

" அவ்வாறு பரிமாற்றம் செய்வதாகச் சொன்னவர் அந்த சொத்தின் உண்மையான உரிமையாளராக இருக்கக் கூடாது

" அந்த பரிமாற்றத்தில் பரி மாற்றம் பெறுபவர் பரிமாற்றம் தருவதாகச் சொன்னவர் கூறிய பொய்யான தகவல்களை உண்மை என்று நம்பி செயல் பட்டிருக்க வேண்டும்

" அந்தப் பரிமாற்றத்துக்குபிரதிபலனாக பணம் கொடுக்கப்படுவதாக இருக்க வேண்டும்

" யாரோ ஒருவர் மாற்றுவதாகக் கூறிய சொத்தில் பின்னர் அவர் சிறிது உரிமை பெறக் கூடியதாக இருக்க வேண்டும்.

" அந்த பரிமாற்ற ஒப்பந்தம் இன்னும் நீடிக்கவேண்டும்

**அசையா சொத்து பரிமாற்றம் செய்யப் படத் தேவையான அம்சங்கள்**

ஒரு அசையா சொத்து இன்னொருவருக்கு பரிமாற்றம் செய்யப்பட வேண்டுமானால் கீழ்க் கண்ட அம்சங்கள் நிறை வேற்றப்பட வேண்டும்

" இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உயிருள்ள நபர்களிடையே சொத்து பரிமாற்றம் நடை பெற வேண்டும்

" பரிமாற்றம் செய்யப்படும் சொத்து மாற்றத்தக்கதாக இருக்க வேண்டும்

" பரிமாற்றம் செய்பவர் பரிமாற்றம் செய்யக் கூடிய தகுதி உடையவராகவும் ஒரு வேளை பரி மாற்றம் செய்யும் சொத்துக்கு அவர் உரிமையாளராக இல்லமல் இருந்தால் அந்த சொத்தினை பரிமாற்றம் செய்ய அங்கீகாரம் பெற்றவராகவும் இருக்க வேண்டும்

" சொத்து பரிமாற்றச் சட்டம் 1882 ல் கூறப்பட்டுள்ள வகையில் பரிமாற்றம் நடை பெற வேண்டும் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து சான்றொப்பங்களும் பதிவும் செய்யப்பட வேண்டும்

" பரிமாற்றம் நிலத்திருக்கும் தன்மைக்கான விதி முறையை பாதிப்பதாக இருக்கக் கூடாது

" பரிமாற்றம்நிபந்தனைக்குஉட்பட்டுஇருந்தால் அந்த நிபந்தனை சட்ட விரோதமானதாகவோ செய்ய முடியாத தாகவோ நெறியற்றதாகவோ ஒழுக்கம் கெட்டதாகவோ மக்கள் கொள்கைக்கு எதிரானதாகவோ இருக்கக் கூடாது.


# ஜெயஸ்ரீ திருமண தகவல் மையம்

**19/2, வள்ளலார் கோயில் சன்னதி தெரு, மயிலாடுதுறை. அலைபேசி : 94434 88125**

கார்குல பெரியோர்கள் தங்கள் வரன் பற்றிய விபரங்களை பதிவு செய்து ஏற்ற வரன்களை எங்கள் ஆலோசனையுடன் பெற்றுச் செல்லலாம். தாங்கள் ஜாதகம் கொடுத்தால் தங்கள் அனுமதியுடன் மட்டும் தரப்படும். நிர்வாக செலவிற்கு பதிவுக்கட்டணம் ரூ. 200/– மட்டும் பெறப்படும். திருமணம் முடிந்த பின் பதிவு நீக்கப்படும். பதிவு ஓர் ஆண்டிற்கு பிறகு புதுபிக்க வேண்டும். திருமணம் முடிந்த தகவல் தெரிவிக்க வேண்டும்.

**அலுவலக நேரம் :** மாலை 4.30 மணி முதல் 7.30 வரை ஞாயிறு விடுமுறை

நிறுவனர் **எஸ். ஜெயம்** வாழ்த்துக்களுடன் **எம். சத்தியபால்**

கடித தொடர்புமுகவரி : **எஸ். ஜெயம்,** 10, மயூரநாதர் மேல வீதி, மயிலாடுதுறை – 609 001.

# பணி நிறைவு பாராட்டு விழா







திருமதி. G. கலைவாணி குணசீலன் M.Sc, M.Ed, M.Phil., தலைமை ஆசிரியை, அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சிதம்பரம் Res : வாணி இல்லம், 10/37, திருநகர், சிதம்பரம்–608001. செல் : **9486628862.**

நாள், இடம் : ஆறுமுக நாவலர் நிலையம், சிதம்பரம் **8–1–2023** மாலை **4** மணி.

விழா ஏற்பாடு : I.G. முகிலன் M.Tec.Lead இன்ஜினியர் H.C.L. சென்னை (மகனார்) V. விஜயலட்சுமி முகிலன் M.Tec உதவிப் பேராசிரியை, வேல் டெக் நிகர்நிலை பல்கலைக்கழகம், ஆவடி, சென்னை– (மருமகளார்)

விழாவிற்கு வருகை தந்த அனைத்து பெரு மக்களையும் விழா அமைப்பாளர்கள் வரவேற்புரை நிகழ்த்தியும், பொன்னாடை அணிவித்தும் சிறப்பித்தனர். விழாவிற்கு தலைமை ஏற்று துவக்கி வைத்த திரு. R. வீராசாமி M.A. M.Ed முன்னை கடலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தமது உரையில் கலைவாணி அவர்களின் சிறப்பான நிர்வாகத்தை செவியுற்ற நான் அவரை பாராட்டும் வாய்ப்பு இந்நிகழ்வின் மூலம் ஏற்பட்டதற்கு மகிழ்ந்து வாழ்த்துகிறேன் என்றார். சிறப்பு சொற்பொழிவு ஆற்றிய தில்லை புகழ் வழக்கறிஞரும், இப்பள்ளியின் P.T.A. தலைவரும் ஆகிய திரு. A. சம்மந்தம் M.A. B.L. அவர்கள் தமது உரையில் சுமார் **3000** மாணவிகள், **100**க்கும் அதிகமான ஆசிரியர்கள் **10**க்கும் மேற்பட்ட பணியாளர்கள் அடங்கிய ஒரு பள்ளியை நிர்வகிப்பதில் பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் குணங்கள், பகைமைகளைச் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் நிறைய எதிர்கொள்ள நேரிடும். இவைகளை துறை அலுவலர்களை சந்தித்தும், P.T.A. தலைவரின் ஆலோசனையை பெற்றும், நீதி மன்றம், காவல்துறை சென்று விளக்கமளித்தும் திறம்பட நிர்வாகம் செய்து சிறந்த பள்ளி என்ற சிறப்பினை பெற்றுத்தந்த தலைமை ஆசிரியை கலைவாணி அவர்கள் பாராட்டுக்குரியவர்கள். அவர்களுக்கு எனது அன்பு வாழ்த்துக்களையும் அருள் ஆசியையும் அளித்து மகிழ்கின்றேன்.

முன்னிலை வகித்த திரு. சாமி. கிருட்டிணமூர்த்தி, M.A. M.Phil முன்னை தமிழ்த்துறை தலைவர், ஏ.வி.சி. கல்லூரி அவர்கள். கலைவாணி அவர்களின் திறமையைப் பற்றி பல்வேறு நிகழ்வுகளில் பாராட்டியதை நினைவு கூர்ந்து மகிழ்ந்தார்கள். சிறப்பு விருந்தினர் திரு. S. கோதண்டராமன் M.Sc, M.Ed, M.Phil முதுகலை ஆசிரியர் வெங்கடேசா மேல்நிலைப்பள்ளி, ஆயங்குடிப் பள்ளம் அவர்கள் தனது கவிதை நடை உரை மூலம் புகழ்மாலை சூட்டினார்கள்.

விழா நிகழ்வில் சிறப்புரை செய்த பல பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய பெருமக்கள், தில்லை நகர் பிரபலங்கள், அனைத்து துறை ஆன்றோர்கள், நண்பர்கள்,

நலம் விரும்பிகள், உள்ளன்பு கொண்ட உறவுகள் தங்கள் உரையில் கலைவாணி அவர்களின் நேர்மை, ஒழுக்கம், காலம் தவறாமை, கண்டிப்பு, கடமையில் தொய்வில்லாமை, பள்ளியின் உட்கட்டமைப்பு வசதிகளை பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நன்கொடையாளர்கள் மூலம் ஏற்பாடு செய்து நிர்வகித்ததையும், பணிபுரியும் ஆசிரிய பெருமக்கள், பணியாளர்களை அரவணைத்து செயல்பட்டதையும் பாராட்டி புகழ்மாலை சூட்டினார்கள்.

கலைவாணியின் நற்பணிகளை பாராட்டி பல்வேறு நிறுவனங்கள் கல்விச் சேவை விருது, பெஸ்ட் டீச்சர் அவார்டு, நிர்வாகத்திறமை பாராட்டு சான்றிதழ்கள் வழங்கியும் அரசு பள்ளி கல்விச் சேவையில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கியும் கௌரவித்தனர். 3–2–2023–ல் கார்குலச் செம்மல் திரு. புதுவிளாகம் S. திருநாவுக்கரசு பிள்ளை அவர்களின் பாராட்டும், ஆசியும் பெறப்பட்டது. பெற்றோர் ஞானதேசிகன் சிவகாமி ஆசியும் பெறப்பட்டது.

விழா நாயகி தனது ஏற்புரையில் பங்களிப்பு செய்து பெருமைப்படுத்தி, பாராட்டுகள், வாழ்த்துக்கள், ஆசிகள் வழங்கி மகிழ்வித்த அனைத்து பெருமக்களுக்கும் தனது நன்றியினை தெரிவித்தும், குடும்ப பொறுப்புகளில் தனக்கு உறுதுணையாக இருந்த தனது இளைய சகோதரி இசைவாணி செல்வகுமாரை நினைவு கூர்ந்தும், விழாவில் பங்கு கொண்ட அனைவருக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கியும், இன்சுவை விருந்தளித்தும் மகிழ்ந்தார்கள்.

திருமதி. ஜானகி ஞானசம்மந்தம் M.Sc, M.Ed, M.Phil முதுகலை பட்டதாரி ஆசிரியை வெங்கடேசா மேல்நிலைப்பள்ளி அவர்களின் நன்றி உரையுடன் விழா இனிதே முடிவுற்றது.

அன்பன்,
ஞானதேசிகன்.


SRI ANJANYAR THUNAI

**GSTIN : 33AAKFC0941L1ZI**
**TAN No. : CMBC05827D**

**C. CHITRA,** B.Sc., (M.D.)
**Cell : 93645 65546**

Office : **CS TEXTILE PROCESS**
NO. 208, PUTHUNAGAR 7TH STREET,
NALLUR, KANGEYAM ROAD,
TIRUPUR - 641 606.

Website : **www.cstextiles.in**

Email : **chitra@cstextiles.in**

Factory : **KVR Nagar, Mangalam Road (Unit - II)**

Our Buyers : **1. FILA (UK)**
**2. RELIANCE (INDIA)**
**3. ADIDAS (GERMANY)**
**4. TATA ZUDIO (INDIA)**



**"QUALITY IS OUR LIFE"**

# அன்பு எனும் அறநெறி

ஞான. அம்புலி

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்", "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" போன்ற பொன்மொழிகள் தினசரி வழக்கத்திலும் பழக்கத்திலும் உள்ளன. அன்பைப் பெறுவதைவிட அதனை அளிப்பது ஆனந்தமயமான செயலென்பர். அன்பால் பிணைக்கப்பட்டோரின் வாழ்க்கை விசாலமானது. உண்மை அன்பு விவரிக்க முடியாத, வேறெந்த மனித பண்புகளால் பெற்றிட முடியாத நெருக்கத்தை கருத்தொருமித்தை தருவதாகும்.

உண்மையான அன்பு கிடைத்தவர்களெல்லாம் பாக்கியசாலிகள். இந்த அன்பு போற்றி பாதுகாத்து பரிமாறப்படுவதற்கு சம்மந்தப்பட்டவர்களின் எண்ண அலைகள் ஒத்துப்போகவேண்டும். அள்ளி அள்ளி அனைவருக்கும் கொடுப்பதற்கு அன்பு என்பது கடைச்சரக்கல்ல! அன்பானது உயிரினம் நல்ல வாழ்க்கை வாழ்ந்திட அறியாமை ஆணவம், அகங்காரம் போன்ற காரிருள் சூழ்ந்துள்ள இவ்வுலகம் உயிர்த்தெழ இறைவன் அளித்திட்ட ஜீவ விளக்கு. இவ்விளக்கை அழித்திடவோ, அடக்கவோ, அணைத்திடவோ, அளித்திடவோ, அதிகாரத்தினாலோ அச்சுறுத்தலாலோ எவராலும் முடியாது. ஒப்பிட ஒரு பொருள் சொல்ல வேண்டுமென்றால் தானாக ஊறும் மணற்கேணியைச் சொல்லலாம்.

இந்த மகத்தான சக்தி வாய்ந்த அன்பை, மனம் எனும் மாயசக்தியை, கட்டுப்படுத்தும் சக்தி இருந்தால் யாருக்கும் கொடுக்கலாம் துரோகம் செய்பவர்களைத்தவிர! துரோகிகளிடமிருந்து அன்பைப் பெறுவதும் கொடியது என்பார் பெரியோர். இக்கருத்துக்கு காரணம் துரோகச் செயலை செய்வது உயிரினங்களில் மனிதகுலம் மட்டுமே. ஒரு சமய சொற்பொழிவில் கேட்ட செய்தி; "துரோக மனப்பான்மை உடையவரை இறைவன் படைப்பதில்லை. ரோஜா மலரோடு முள் இணைந்து பிணைந்து உருவாவதைப்போல முன்வினைப் பயனாய் துரோகிகள் நல்லோர் மத்தியில் தோன்றுவதுண்டு. இந்த ஈனப்பிறவிகள் இப்பிறவியிலேயே முழுமையாய் தண்டிக்கப்படுவார்கள். துரோகம் போன்ற பாவச்செயல் புரிந்தோனை தண்டிக்கத்தான் அத்தகையோருக்கு மானிட மறுபிறவியை இறைவன் மீண்டும் தருகிறான்."

சென்னையில் நடந்த ஒரு மாபெரும் மாலை Prayer கூட்டத்தில் காந்திஜி சொன்னார் "என்மீது களங்கமற்ற அன்பை செலுத்துவோரை தவறவிடாது அடையாளம் காட்டுங்கள்! தவறுதலாய் துரோகிகளுக்கு பாவமன்னிப்பு அளித்து என் அன்பை வீணடிக்க நான் விரும்பவில்லை. ஏனென்றால் என் ஒரே சொத்து உலகத்தில் அன்பு ஒன்றுதான்."

எப்போதும் மறக்காமல் இருப்பது மட்டுமல்லாமல் என்ன நடந்தாலும் வெறுக்காமல் இருப்பதுதான் உண்மை அன்பாகும். இதனை வார்த்தைகளில் வர்ணிப்பதோ கவிதை வரிகளால் விவரிக்கவோ முடியாத ஒரு உணர்வுப்பூர்வமான பண்பாகும். ஆதலின் அன்பை பெறுவதற்கும் தருவதற்கும் நமது மனநிலையில் எதற்கும் கட்டுப்படாத மாற்றம் வேண்டும். பின்பு தெளிவு பிறக்கும். விரைவில் அதன் விளைவால் அன்பென்ற ஜோதியின் கதிர் அலைகள் சொல்லில் செயலில் பிரதிபலிக்க ஆரம்பிப்பதை உணரலாம்! சுகபோக வாழ்க்கையில் வெறுப்பு, புரிதல் அனைத்திலும் ஒரு பொறுப்பு, கடினம், முடியாது போன்ற எதிர்மறை எண்ணங்களிலிருந்து விடுவிப்பு, சுயநலம், குரோத மனப்பாங்கு தோன்றா நல்வாழ்க்கை பிரதிபலிப்பு, இவை அனைத்தின் கூட்டுக் கலவையே அன்பு பெறுதலின் வழித்தடமாகும்.

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் சொன்னார். "உலகத்தில் மனிதகுலம் அனைத்தும் பிற உயிர்களுக்கு செய்யவேண்டிய செயல் மற்றும் கடமை ஒன்றே ஒன்றென்றால் அது அன்பு செலுத்துதலே ஆகும். நிலையான அன்பு பரிமாற்றத்தின் காரணமாகத்தான் மனிதன் பிற உயிரினங்களிலிருந்து வேறுபடுத்தப்படுகிறான்." மகாத்மா காந்தி சொன்னார். "அன்புக்காக ஏங்குங்கள்! தவமிருங்கள், உடலை வருத்திக்கொள்ளுங்கள், மனதை திருத்திக்கொள்ளுங்கள். அன்பு உங்களை நாடி ஓடிவரும்."

அன்பு கொண்டோரிடம் நிலைமைக்கேற்ப சூழ்நிலையைப் பொறுத்து தேவை அனைத்தையும் செய்தலே மாசற்ற அன்பின் அடையாளம். செய்யும் உதவி பொருளாக இருக்கத் தேவையில்லை. "தக்க சமயத்தில் அன்போடு அளித்திடும் அறிவுரை பலநேரங்களில் ஆழ்கடலினும் பெரிது. அத்தகையோர் அல்லறும்போது உதவி ஏதும் செய்ய முடியாவிட்டாலும் நல்வழி பிரார்த்தனை செய்யுங்கள்" என்றார் விவேகானந்தர்.

பாண்டிய மன்னர்களில் இரு சகோதரர்கள் நாட்டை நிர்வகிப்பது சம்பந்தமாக சண்டையிட்டுவந்தபோது அவர்களை நல்வழிப்படுத்திய ஒரு தனிப்புலவர் பாடல் ;

"வெய் அமரில் செங்கதிரோன் மைத்தனையும்
பஞ்சவரில் பாத்தனையும் பாராதே
மேதினியில் ராமனையும் பரதனையும் பார்"

(நிகழ்வுச் சுருக்கம் : சுக்கிரன், வாலி சகோதரர்கள் அன்பில்லாமல் அழிந்தொழிந்தனர், அதேபோல் அர்ஜுனன், கர்ணன், சகோதரர்களும் சகோதரத்துவ அன்புள்ளம் கொண்டவராக

இல்லாததால் வரலாற்றில் சிறப்பானவர்களாக திகழமுடியவில்லை. நீங்கள் இவர்களையெல்லாம் கணக்கில் கொள்ளாமல் ஸ்ரீராமன், பரதன் சகோதரர்களது அன்பான வாழ்க்கையினைப் பாருங்கள். ஸ்ரீராமர் காட்டுக்கு சென்றபின் பரதன் மன்னனாக முடிசூட்டிக்கொண்டாலும் அண்ணன் ஸ்ரீராமனிடம் கொண்ட அன்பால் தானும் துறவியாய் வாழ்ந்தபடி நாட்டை நடத்திய வரலாற்றை பாருங்கள்.)

'அன்பும் அருளும் இறை' என்றார் வள்ளலார்.

'அன்பினால் உண்டாகும் இன்பநிலை அளப்பறு ஆனந்தம் அளிக்க வல்லது' – கண்ணதாசன்.

'ஆன்மிகத்தின் அடிநாதம் அன்புதான். அனைத்து மதங்களும் சமயங்களும் ஒரு சேரச் சொல்வது அன்பைப் பற்றித்தான்'. – சுவாமி சித்பவானந்தா.

வள்ளலார் 200 பெருவிழா மலரில் Dr. சிவராமன் கட்டுரையில் சொன்னது.

அன்பின் படிகள் எட்டு :

முதல் நிலை : மனைவி, மக்கள், உறவினர்கள் மீது காட்டுவது.

இரண்டாம் நிலை : தன் ஆசைகளை, விருப்பங்களை பிறருக்கு விட்டுக் கொடுத்தல்.

மூன்றாம் நிலை : நன்றி எதிர்பார்ப்போடு பிறருக்கு உதவுதல்.

நான்காம் நிலை : கைமாறு கருதாது உதவி செய்வது.

ஐந்தாவது நிலை : பகைவருக்கும் அன்பு காட்டுவது.

ஆறாவது நிலை : எல்லா உயிரினங்களுக்கும் காட்டும் அன்பு.

ஏழாவது நிலை : ஒருவரது துன்பத்தைக் கண்டு தானே அவராகி அந்த துன்பம் அடைந்ததாக வருந்துதல் (வள்ளலாரின் 'வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்.')

எட்டாம் நிலை : உயிரற்ற பொருட்கள் மீது அன்பு காட்டல் (வள்ளலார் மண்ணாங்கட்டி உடைந்ததற்காக மனம் வாடிய நிகழ்வு)

அன்பினார் நெஞ்சில் எழும் ஆயிரமாயிரம் அலைகளில் ஜீவகாருண்யம் ஒன்றாகும். அன்பை அசைக்க முடியா ஆணிவேராய் ஆக்கிக் கொண்டோரிடமிருந்து இந்த பண்புகள் கிளைவிட்டு கிளம்புகின்றன. அவை, புகழ், பற்று, பாசம், புறம் கூறாமை, பயனில் சொல்லாமை, பொறாமையுடமை முதலியனவாம். காலம் கடந்து அளிக்கும் அன்பு சூரிய வெளிச்சமுள்ள நேரத்தில் விளக்கு ஏற்றிடுவதற்கு ஒப்பாகும்.

அன்பு கொண்டார் நெஞ்சில் அழையா விருந்தாளியாய் ஆண்டவன் குடியேறுவானாம்.

"ஆண்டவன் அணிந்திருக்கும் அத்துணை ஆபரணங்களும் அலங்கார பொருட்களும் அவனது அன்பின் வேறு ரூபங்கள்" என்றார் சேக்கிழார்.

'நிரந்தரமான எதிரி என்போனை சமாளிக்க வேண்டுமெனில் அன்பினால் மட்டுமே அது முடியும்'. – காந்திஜி.

"உலகத்தில் மிகப்பெரிய முட்டாள் அன்பை அடுத்தவரிடம் தேடுபவன்! – காரல்மார்க்ஸ்.

'அன்பு என்ற சொல்லுக்கு அரிய இலக்கணம் தந்தவன் வள்ளுவப் பெருந்தகை' – மகாகவி பாரதி.

'யாமறிந்த பாடல்களிலே அன்பின்பால்
குறள்வழிபோல் வேறெங்கும்
காணோம்' – ஒரு கவிஞன்.

மனிதாபிமானங்களிலே சிறந்ததிலொன்று பரிமாற்றம் என்று உறுதியிட்டு கூறலாம். பரிமாற்றம் என்பது ஒரே நேரத்தில் புழக்கத்தில் இருக்கும் எதிரும் புதிருமான இருவழிப்பாதை போன்றது; பொருள் பரிமாற்றத்தோடு ஆக்கப்பூர்வமான ஒன்று கருத்துப் பரிமாற்றம். கோபம் வரும் போதெல்லாம், மனநோய் தீண்டும் போதெல்லாம், கவலை மேகம் சூழும் போதெல்லாம், அன்பு பரிமாற்றம் பேருதவி தந்திடும். சில பரிமாற்றங்கள் மனித இனம் என்ற வளையத்துக்குள்ளேயே வலம் வருபவை. ஆனால் அன்பு பரிமாற்றம் எல்லா உயிரினங்களிடத்தும் தன்னிச்சையாய் நடைபெறுவதாகும்.

வாங்க முடியாத, விளைவிக்க முடியாத விலைமதிப்பிட முடியாத பொருள் அன்பு! இதனைப் பெற்றிடத்தான் வேண்டுமெனில் பற்றிட வேண்டியது இறைப்பாதம். சாஸ்திர சம்பிரதாயம் கற்றுத்தந்த வேத பாராயணம் இம் மந்திரம். பிரதிபலன் பார்க்காது உங்களிடம் அன்பு செலுத்துவோரை அலட்சியப்படுத்தாதீர்கள். அந்த நல்லுள்ளம் கொண்டோரின் துணை தொடர்ந்திட நீங்கள் கொடுத்திடும் முக்கியத்துவம் முக்தியை பெற்றுத்தந்திடும்.

உண்மை அன்பு பரிமாற்றம் நடந்திட....

1) ஒருவருக்கான அன்பை நிறுத்திப் பாருங்கள் !
அன்பின் வலி என்னவென்று புரியும் !!

2) ஒருவரிடம் அன்பு காட்டிப்பாருங்கள் !
அன்பின் வலிமை என்னவென்று தெரியும் !!


3) ஒருவரிடம் அன்பை பெற்றுப் பாருங்கள் !
அன்பிற்குண்டோ விலை மதிப்பு என்பது தெரியும் !!

4) ஒருவரிடம் அன்பை பொழிந்து பாருங்கள் !
அன்பின் பின்னால் இறைநிழல் தெரியும் !!

அனைத்து உயிரினங்களும் சமம் என்பது
அன்பின் பொது நிலைப்பாடு !

இதை வழித்தடமாக்கிட தேவை தூய
மனதோடு இறை வழிபாடு !!.

# வாழ்க மணமக்கள்!



காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு கார்காத்தார் தெரு, திரு. P. மோகன் (எ) வரதராஜன் பிள்ளை – திருமதி. அம்பிகா தம்பதியரின் அன்பு மகன் திருநிறைச்செல்வன். **V. அருண்குமார், B.Tech., MBA**-க்கும் திருவிளையாட்டம், திரு. M. ராமதாஸ் பிள்ளை – திருமதி. மாலதி தம்பதியரின் அன்பு மகளுமான திருவளர்ச்செல்வி. **R. சௌமியா, B.E.,** இவர்கள் திருமணம் கடந்த **27–01–2023** வெள்ளிக்கிழமை அன்று மயிலாடுதுறை திருவிழந்தூர் A.V.C. திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கலந்து கொண்டு வாழ்த்திய உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திரு. **P. மோகன்** (எ) **வரதராஜன் பிள்ளை**
நிலக்கிழார்
**அம்பிகா வரதராஜன்**
அம்பிகா பைனான்ஸ், நெடுங்காடு.
**R. பாலாஜி,** B.E., MBA, CREW (P) Ltd
சென்னை
**B. திவ்யா பாலாஜி,** B.Tech.,
(AARNA BRIDAL STUDIO & FASION)
சென்னை.

**M. ராமதாஸ் பிள்ளை**
தனலெட்சுமி பேங்கர்ஸ்
**K. மாலதி ராமதாஸ்,** ஆசிரியை
**R. ஆகாஷ்,** D.E.E.E.
திருவிளையாட்டம்
**M. திருஞானசம்பந்தம் பிள்ளை**
புத்தகரம்
**M. குணசேகரன் பிள்ளை**
**வாசுகி,** நீடூர்.

# மணமகன் தேவை

பெயர் செல்வி **மோ. அபிநயா**



படிப்பு B.E. (EEE)
வேலை Production Editor
Sinjore Technologies,
Thanjavur.
பிறந்த தேதி 21.09.1995
உயரம் 5' - 4"
நட்சத்திரம் ஆயில்யம் 3–ம் பாதம்
கோத்திரம் சணமுடை
பூர்வீகம் உடையார் பாளையம்
தகப்பனார் **கோ. மோகன் பிள்ளை**
தாயார் **மோ. மலர்கொடி**
(திருநாரையூர்)
முகவரி A/2, சீத்தா நகர்,
சிவாஜி நகர் வழி,
தஞ்சாவூர் – 613 001.
Cell : 94424 75666, 94424 75777
விருப்பம் சமபடிப்பு, நல்ல பணியில் உள்ள வரன்.

---

பெயர் செல்வி **A.R. தீபலட்சுமி**
படிப்பு B.E. (EEE)
வேலை Senior Engineer, Vestas Wind Technology Pvt. Ltd., Chennai
Rs. 10 Lakhs / Per Annum



பிறந்த தேதி 06.10.1995
உயரம் 165 cm
நட்சத்திரம் பூரட்டாதி
கோத்திரம் பல்லவராய
பூர்வீகம் கழுக்காணிமுட்டம், மயிலாடுதுறை
தகப்பனார் **S. ராமதாஸ்** (Proprietor, Kasthuri Medicals, Sempathaniruppu, Sirkali TK)
தாயார் **R. அமுதா** (நாஞ்சலூர், சிதம்பரம்)
(Co- Proprietor, Kasthuri Medicals, Sempathaniruppu, Sirkali TK)
முகவரி Mrs. S. Sinthamani
G-3, 3/1643, Orchid Grove Flats, Shanmuga Nagar, Madananthapuram, Chennai - 600125.
Mobile: 9962088640, 9445653330
விருப்பம் Good looking, well educated, Family oriented, Open minded, Independent, Self-Confident, Supportive, Understanding

---

பெயர் **து. லக்ஷ்மி பிரியா**
படிப்பு B.E., (E & IE)
வேலை Senior QA Engineer
Quickheal Technology Ltd.,
Rs. 9,00,000/PA
பிறந்த தேதி 16.05.1997
உயரம் 5' - 2"
நட்சத்திரம் பூரம்
கோத்திரம் சாத்துக்குட
பூர்வீகம் சீர்காழி (ஆர்ப்பாக்கம்)
தகப்பனார் **அ. துரை,** B.E.
Managing Director of Lakshmi Publications and Suchitra Publications
(Previously worked as Executive Engineer, NLC India Limited, Neyveli)
தாயார் **து. நிர்மலா,** B.A. (விருத்தாசலம்)
Prorietrix of Lakshmi Publications
முகவரி 73, இரண்டாவது பிரதான சாலை,
வி.ஐ.பி. கோகுல் நகர்,
பெரும்பாக்கம், சென்னை – 600 100.
Cell : 98423 06514
Email : duraibeneyveli@gmail.com
விருப்பம் B.E., M.E., M.C.A., படித்த நல்ல பணியில் உள்ள வரன்

---

பெயர் செல்வி **B. திவ்யா**
படிப்பு B.E. (CS)
வேலை Software Engineer,
Accenture, Chennai



பிறந்த தேதி 14.12.1993
நட்சத்திரம் மூலம் 2ம் பாதம்
கோத்திரம் தென்னவராய
பூர்வீகம் சாத்துக்கூடல்
தகப்பனார் **S. பாலகிருஷ்ணன் பிள்ளை**
விவசாயம்
தாயார் **B. சுசிலா,** இல்லத்தரசி
ஏசனூர்
முகவரி வடக்கு தெரு, மேல்பாதி,
சாத்துக்கூடல் – 606 110.
விருத்தாசலம் வட்டம்
Cell : 99529 20903
81487 67273 (Whatsapp)
விருப்பம் பொருத்தமான வரன்

# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் **ARAVINDHAN .S** |
| படிப்பு | B.E. (EEE), MBA., |
| வேலை | Business - Proprietor, Orchid Modular Kitchen & Interiors Rs. 25,00,000/PA |
| பிறந்த தேதி | 25.11.1996 |
| நட்சத்திரம் | Karthigai |
| கோத்திரம் | Kalappala |
| பூர்வீகம் | Sendhurai - Ariyalur District |
| தகப்பனார் | **Saravanan .S** Business - Proprietor - Orchid Chimney Studio |
| தாயார் | **Sivakama Sundari** |
| முகவரி | 129/1, Anna Street Extn., Sabapathy Nagar, TTP Mill Backside, 15, Velampalayam, Tirupur - 641 652. Cell : 91593 55355 / 96298 34927 E-mail : aravindhanorchid@gmail.com |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் **T. சிவசுந்தர்** |
| படிப்பு | B.Tech (Plastic Engg.) |
| வேலை | Senior Officer, Hatsun Agro Product Ltd., Walajapettai Rs. 50,000/PM |
| பிறந்த தேதி | 17.09.1996 |
| உயரம் | 165 cm |
| நட்சத்திரம் | விசாகம் |
| கோத்திரம் | வில்வராய |
| பூர்வீகம் | பெருவரப்பூர் (சிதம்பரம்) |
| தகப்பனார் | **S. தில்லைகோவிந்தராஜன்**, M.A., நிதி ஆலோசகர் |
| தாயார் | **S. ஜெயந்தி -** உதவியாளர் ஆரம்ப கல்வி அலுவலகம், குமராட்சி |
| முகவரி | 14–15, கமலீஸ்வரன் கோயில் தெரு, சிதம்பரம் Cell : 9443130923 |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் **Gowtham Ramadoss** |
| படிப்பு | B.S., (Comp. Science) M.S., (Studying) |
| வேலை | Senior Full Stack Java Developer, CGI Technologies Inc. USA USD 10,000/PM |
| பிறந்த தேதி | 21.03.1995 |
| உயரம் | 6' - 2" |
| நட்சத்திரம் | Anusham |
| கோத்திரம் | Karuvazha |
| பூர்வீகம் | Visaloor |
| தகப்பனார் | **Ramadoss Sabanathan** |
| தாயார் | **R. Latha** |
| முகவரி | N. Ramadoss, Retd. Agri. Professor No. 3, Chinna Kannara Street, Mayiladuthurai Cell : 94436 04486, 99529 88119 |



## "கார்காத்தார் ஒப்புரவு" கட்டண விபரங்கள்

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | ரூ. 300/- |
| ஆயுள் சந்தா (12 ஆண்டுகளுக்கு மட்டும்) | ரூ. 2000/- |
| கலர் (¼) கால் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்) | ரூ. 1500/- |
| கலர் (½) அரைப் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்) | ரூ. 3000/- |
| கலர் முழு பக்கம் | ரூ. 6000/- |
| பின் அட்டை வெளிபுறம் | ரூ. 7000/- |
| மணமகன் மணமகள் தேவை கருப்பு வெள்ளை (மாதம் ஒன்றுக்கு) | ரூ. 500/- |
| கருப்பு வெள்ளை (¼) கால் பக்கம் | ரூ. 750/- |
| கருப்பு வெள்ளை (½) அரைப் பக்கம் | ரூ. 1500/- |
| கருப்பு வெள்ளை முழுப் பக்கம் | ரூ. 3000/- |

# மணமகன் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வி **வி. சுவேதா** |
| படிப்பு | B.E. (CSE)., |
| வேலை | Software Engineer, Advantest, Chennai<br>Rs. 45000 / PM |
| பிறந்த தேதி | 02.07.1996 |
| உயரம் | 154cm |
| நட்சத்திரம் | பூராடம் |
| கோத்திரம் | கூடலுட |
| பூர்வீகம் | கீழ் அதங்குடி |
| தகப்பனார் | **R. விஜயகுமார்** |
| தாயார் | **V. ராஜேஸ்வரி,** (K.தென்பாதி) |
| முகவரி | **155–4,** கிழக்கு தெரு, கீழ் அதங்குடி,<br>காட்டுமன்னார்கோயில் TK **– 608 302.**<br>Cell : 80567 18121, 75399 21272 |
| விருப்பம் | சமபடிப்பு, சமபணியில் உள்ள வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வி **வேதவல்லி** |
| படிப்பு | B.S. Psychology, MPS Business Psychology,<br>Medical Student (2027) |
| பிறந்த தேதி | 22.10.1997 |
| உயரம் | 165 cm |
| நட்சத்திரம் | புனர்பூசம் |
| கோத்திரம் | பென்னாமுட |
| பூர்வீகம் | கீழ்நத்தம், சிதம்பரம் Tk. |
| தகப்பனார் | **இரா.ப. கோவிந்தன்,** M.Sc., Ph.D., |
| தாயார் | **வெ. ஜெயந்தி,** M.A., |
| முகவரி | 7561, Crowley Street,<br>Hanover, Maryland, USA<br>Cell : 001 - 301 - 256 - 6987 (தந்தை)<br>உள்ளூர் தொடர்பு 94440 09807<br>E-mail : rbgovindan@hotmail.com |
| விருப்பம் | அமெரிக்கா குடியுரிமை பெற்றவர். முதுகலை பட்டம் அல்லது மருத்துவ பட்டம் படித்தவர். |



# மணமகன் தேவை

| | |
|---|---|
| பெயர் | **செல்வி K. நிவேத பிரீத்தா** |
| படிப்பு | BDS (Dentist) |
| பிறந்த தேதி | 05.02.1999 |
| உயரம் | 159cm |
| நட்சத்திரம் | ஹஸ்தம் |
| கோத்திரம் | வில்வராய |
| தகப்பனார் | **J. கண்ணன்** |
| தாயார் | **L. ஆனந்தி** |
| முகவரி | **66,** பெருமாள் கோவில் வீதி,<br>புதுச்சேரி – **1.**<br>Cell : 87606 61133 / 63817 58266 |
| குறிப்பு | Single Parent (Mother Only) |



| | |
|---|---|
| பெயர் | **செல்வி M. ஒன்ஸ் கமலி** |
| படிப்பு | DCA, B.Com. (General) |
| பிறந்த தேதி | 15.08.2002 |
| உயரம் | 148 cm |
| நட்சத்திரம் | விசாகம் |
| கோத்திரம் | கலப்பாலா |
| பூர்வீகம் | செந்துறை |
| தகப்பனார் | **S. முத்துக்குமார்** |
| தாயார் | **M. அருணா** (மணிக்கிராமம்) |
| முகவரி | பிளாட் எண். **61,** அன்னை அவென்யு,<br>அவ்வையார் குறுக்கு தெரு,<br>ஒட்டியம்பாக்கம், சென்னை – **600 130.**<br>Cell : 95512 62075 / 80724 34422 |



# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | **செல்வன் G. அரவிந்** |
| படிப்பு | B.E. (EEE)., P.G.D.P.P.E., |
| வேலை | OPTEL Company,<br>Hyderabad<br>Rs. 10 Lakhs / PA |
| பிறந்த தேதி | 07.03.1996 |
| உயரம் | 180cm |
| நட்சத்திரம் | அஸ்தம் |
| கோத்திரம் | பூவுடைய |
| பூர்வீகம் | வரகடை |
| தகப்பனார் | **R. கோவிந்தராஜன்** (இரயில்வே ஓய்வு) |
| தாயார் | **P. சுடர்,** (அரசு பள்ளி ஆசிரியை) |
| முகவரி | 5, வாகீச நகர், முதல் பிரதான சாலை,<br>சிதம்பரம் – 608 001.<br>Cell : 98654 27267 |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் N.C. நிரஞ்ஜன் ராஜ்** |
| படிப்பு | B.E. Mechanical, D. Agri |
| வேலை | Business Executive<br>Dealer - Agri. Equips, Agro Chem., Seeds &<br>Paddy Seed Processing Unit &<br>15 Acre Own Agricultural Farm<br>Rs. 50 Lakhs/PA+ |
| பிறந்த தேதி | 26.08.1993 |
| உயரம் | 178 cm |
| நட்சத்திரம் | கேட்டை |
| கோத்திரம் | வளவதரைய |
| பூர்வீகம் | திருக்கருகாவூர் |
| தகப்பனார் | **S. நடராஜன்,** D.Agri., |
| தாயார் | **N. சித்ரா,** B.Sc., B.Ed., |
| முகவரி | No. 5, II Cross, L.B. Nagar, Mayiladuthurai<br>Cell : 98428 93232, 94438 08490 |



# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் S. ரவீன் குமார் |
| படிப்பு | M.Tech. VLSI |
| வேலை | Senior Engineer (VLSI)<br>Multicoreware inc / Uhnder inc.<br>Rs. 19.5 Lakhs / PA |
| பிறந்த தேதி | 21.11.1993 |
| உயரம் | 175cm |
| நட்சத்திரம் | சதயம் 1ம் பாதம் |
| கோத்திரம் | கனகராய |
| பூர்வீகம் | திருநெல்வேலி |
| தகப்பனார் | A. சங்கர், Director of School Education (Retd.) |
| தாயார் | P. வசந்தி, Headmistress, Govt. Hrs. Sec. School (Retd.) |
| முகவரி | 28 & 29, VGN Highness,<br>Vikramaditya Street,<br>Iyyappanthangal, Chennai - 600 056.<br>Cell : 86670 33721, 94447 48490, 78459 14635<br>E-mail : spvrk1956@gmail.com |
| விருப்பம் | பணிபுரியும், பணிபுரிய விருப்பமுள்ள<br>பொருத்தமான வரன் |



| | | |
|---|---|---|
| பெயர் | : | அதிசரன். B |
| பிறந்த தேதி | : | 04.11.1995 |
| உயரம் | : | 180 c.m. |
| நட்சத்திரம் | : | உத்திரட்டாதி |
| கோத்திரம் | : | குளத்துட |
| கல்வி தகுதி | : | B.Tech. (NIT, Trichy), M.S. (USA), |
| பணி விபரம் | : | Analytics Consultant<br>Deloitte Consulting LLP, Dallas, Texas - USA |
| தந்தை பெயர் | : | பீகர் த/பெ. தி. கபீர்தாஸ் |
| பூர்வீகம் | : | செம்மங்குடி (சீர்காழி) |
| பணி விபரம் | : | Lab Technician, RMMCH, Annamalai University |
| தாயார் பெயர் | : | ஸ்ரீதேவி இராமலிங்கம் |
| பூர்வீகம் | : | சிறகிழுந்தநல்லூர் |
| பணி விபரம் | : | தலைமை ஆசிரியை, அரசு நடுநிலைப்பள்ளி |
| விருப்பம் | : | M.S (அ) B.E. படித்து வேலையில் உள்ள,<br>வெளிநாடு செல்ல விருப்பமுள்ள வரன் |
| தொடர்பு முகவரி | : | 64/65, S.R. நகர், சிதம்பரம் - 608 001<br>Cell : 98656 54030 / 99436 44254<br>email : beekar66@rediffmail.com |



# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
24.10.1931

மறைவு
07.04.2023

## நாங்கூர் சோ.பாலச்சந்திரன் அவர்கள்

மல்லியக்கொல்லை அ. சோமசுந்தரம் பிள்ளை – சோ. தர்மாம்பாள்
ஆகியோரது மகனாகப் பிறந்தீர்கள். மீனாட்சியின் கரம் பிடித்து,
நாங்கூரில் ஊருக்கே உதவும் ஆலமரமாய் இருந்தீர்கள்.
இன்று அன்பு ஒன்றையே அள்ளி அள்ளித் தந்து தெய்வமாய் நின்றுவிட்டீர்கள்.
உங்கள் அன்பை இழந்து தவிக்கும் ஆலமர விழுதுகளாய் நாங்கள்....

தங்கள் பிரிவால் வாடும் இல்லத்தினர்

**மீனாட்சி பாலச்சந்திரன்**

வாசுகி வைத்திலிங்கம் - கு.வைத்திலிங்கம்
பா.பாண்டியன் - செல்வி பாண்டியன்
பா.செந்தில்நாதன் - உமா செந்தில்நாதன்
மாதவி தியாகராஜன் - சு.தியாகராஜன்
பா.பாரிவேந்தன் - ஆண்டாள் பாரிவேந்தன்

பாலமீனா இல்லம், கூட்டுறவு நகர், மயிலாடுதுறை.
9840055220, 7598098181.

# நினைவஞ்சலி



**கு. வாலாம்பாள்**
மறைவு : 4–3–2016

புலவர் **கோ. குஞ்சிதபாதம் பிள்ளை**
தோற்றம் : 20–06–1930
மறைவு : 25–05–2021

கார்குல மக்களின் முதல் சொந்தமாய் இருந்து
ஆசானாய் அனைவருக்கும் போதித்து
கோயில் திருப்பணிகள் பல செய்வித்து
காராளனாய் இயற்கை வளங்களை காத்து
எப்போதும் இதழில் புன்னகை பூத்து
தந்தையாய் எங்களை என்றும் நேசித்து
இறுதியில் அனைத்தையும் துறந்து
வாழ்க்கை இதுதான் என்று கற்பித்து
சென்ற உங்களின் நினைவில்...

என்றும்...

வள்ளி நடராசன்

கோ. காருண்யா ஸ்ரீ
கோ. சௌமியா ஸ்ரீ

கு. கோவிந்தராசு
லட்சுமி கோவிந்தராசு

**காராளன் ஒருங்கிணைந்த பண்ணையம்**
இளையபெருமாள் நல்லூர், அரியலூர் மாவட்டம் – **612 903.**

**Kaaraalan Data Factory -** Adambakkam, Chennai-88.
Mobile : 91760 38261

# கண்ணீர் அஞ்சலி

மலர்ந்தது :
**10–07–1949**



உதிர்ந்தது :
**23–04–2023**

## கோ. லலிதா

ஆசிரியை ஓய்வு

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா தில்லைவிடங்கனை பூர்வீகமாக கொண்ட, தற்போது தஞ்சையில் வசித்து வரும் சோ. வெங்கடேசன், ஆட்சி அலுவலர் (ஓய்வு) பொ.ப.துறை அவர்களின் துணைவியாரும், எங்களது தாயாருமாகிய திருமதி. **கோ. லலிதா** அவர்கள் கடந்த **23–04–2023** அன்று இறைவனடி சேர்ந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்

**அவர் பெற்ற செல்வங்கள்**

**வெ. சரவணக்கண்ணன்,** M.Sc., M.Phil, Ph.D
உதவி பேராசிரியர்

**வெ. கார்த்திகேயன்,** M.Sc., M.Phil.,
உதவி பேராசிரியர்

**நா. முருகவள்ளி,** M.Sc, M.Phil, B.Ed.,
ஆசிரியை

**மெ. கலைவாணி,** M.Sc, M.Phil, Ph.d
உதவி பேராசிரியை

**பேர செல்வங்கள்**

**ச.மு. சாய் முகுந்தன்**

**ச.மு. சாய் விமலன்**

# நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி





தோற்றம்
01.10.1942



மறைவு
15.05.2019

## R. சரஸ்வதி அம்மாள்

காட்டுமன்னார்கோயில் வட்டம், மா. கொத்தங்குடி, தெய்வத்திரு. காருட முருகேசன் பிள்ளை – காசாம்பு ஆச்சி அவர்களின் மகளும், குணமங்கலம், திட்டதுட திரு. K.S. ராமசாமி பிள்ளை அவர்களின் துணைவியாரும் மற்றும் எங்களது தாயாருமான திருமதி. **R. சரஸ்வதி அம்மாள்** 15.05.2019 அன்று, இறைவனடி சேர்ந்தார். அன்னாரது நினைவு நாளில் நாங்கள் அன்புடன் நினைவு கூர்ந்து உள்ளத்தால் வழிபடுகிறோம். வான்நின்று வாழ்த்தி எங்களுக்கு நல்வழி காட்ட வேண்டுகிறோம்.

பிரிவினால் வருந்தும்

**R. பாஸ்கர்,**
செல் : 98650 65642
**C. கலைச்செல்வி**
மயிலாடுதுறை.
செல் : 95971 97980
**K.B. கார்த்திக் ராஜா,** B.E., M.A.Sc
(Toronto).

**K.S. ராமசாமி,** BDO (Retd),
சிதம்பரம்.
செல் : 94867 86455

**R. சிவகுமார்**
செல் : 94440 55256
**M.S. மஞ்சுளா**
Chennai.
செல் : 94440 55206
**S. மஹாலட்சுமி,** B.Tech.,
**K. விக்னேஷ்,** B.E., M.B.A.,
**R.S. பாலாஜி,** B.Tech.,

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் மலர்ந்தது
23.01.1951

விண்ணில் மறைந்தது
02.05.2019

## திரு. க.இமயவரம்பன் பிள்ளை

சிதம்பரம் கூட்டுறவு நிலவள வங்கி (ஓய்வு)

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், நகராமலை
தெய்வத்திரு. ஆ.கல்யாணசுந்தரம் பிள்ளை – சகுந்தலா
அவர்களின் மூத்த குமாரரும் எங்களின் தந்தையுமான
**க. இமயவரம்பன் பிள்ளை** அவர்களின்
நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

*என்றும் அவர்கள் நினைவில் வாழும்* திருமதி. **சுந்தரவடிவு இமயவரம்பன்**

| | | |
|---|---|---|
| I.ஆனந்தன் | S.செந்தில் | B.முத்துகுமார் |
| A.நிரஞ்சனா | S.காயத்ரி | I.இமயவள்ளி |
| A.இளம்பூரணன் | S.ப்ரவின் | M.தன்யஸ்ரீ |
| A.இளம்பிறையன் | S.சஞ்சன் | M.பிரணவ் |

*மற்றும் உறவினர்களும், நண்பர்களும்*

## ஓர் ஆன்மீகச் சுற்றுலா

நங்கநல்லூர் வட்டார கார்காத்தார் சமூக நலச் சங்கம் திரு. தியாகராஜன் அவர்கள் மூலம் ஏற்பாடு செய்த மூன்று நாள் பயணத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது நாங்கள் செய்த புண்ணியமென்றே கருதுகின்றோம். ஏப்ரல் மாதம் ஆறாம் தேதி, வியாழக்கிழமை இரவு சுமார் 8 மணி அளவில், நாங்கள் 42 பேர், நங்கநல்லூர் சுவாமிநாதன் அண்ணன் இல்லத்தில் கூடினோம். அருகிலிருந்த நங்கநல்லூர் அனுமனை, பயணம் நன்முறையில் அமைய வணங்கி, இரவு உணவிற்குப் பின் சுமார் 10 மணி அளவில் குளிர்சாதன பேருந்திலும், ஒரு சிற்றுந்திலும் கிளம்பினோம். அடுத்த நாள் காலை சுமார் 7 மணி அளவில் அகோபிலம் அடைந்து, காலை உணவிற்குப் பின் தரிசனத்திற்குப் புறப்பட்டோம்.

அகோபிலத்தில் எழுந்தருளும் நவ நரசிம்மர்களும், நவக்கிரகங்களுடன் தொடர்புடையவையாகும். அவை யாவன : ஸ்ரீ சத்ரவட நரசிம்மர், ஸ்ரீ யோக நரசிம்மர், அஹோபில நரசிம்மர், க்ரோட நரசிம்மர், ஸ்ரீ மாலோல நரசிம்மர், ஜ்வாலா நரசிம்மர், காரஞ்ச நரசிம்மர்,பாவன நரசிம்மர் மற்றும் பார்க்கவ நரசிம்மர் ஆகும். பேருந்தில் செல்லும் போது, கணபதியைத் தொழுது, விஷ்ணு சகஸ்ரநாமம் கூறி முடித்தோம். நவநரசிம்மர்களையும் தரிசித்து வந்த களைப்பில், மாலை உணவிற்குப் பின் நன்கு உறங்கி, மறுநாள் காலை மகாநந்திக்குப் புறப்படும் முன் கீழ் அகோபில நரசிம்மரைத் தரிசித்தோம். சுமார் 2½ மணி நேர பயணத்தில், ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து கொண்டோம். கற்பனை செய்திருந்ததைப் போல நந்தி பெரிதல்ல; பீடம் உயரமாகவும், நந்தி நடுத்தர உயரத்திலும் அமைந்துள்ளது. நந்தியின் முன்னே இருந்த நந்தவனத்தினூடே இருந்த பிரகாரத்தின் வழியே உள்ளே சென்றால், இரு புறமும் திருக்குளங்கள்; மகளிர், ஆடவரென பிரிக்கப்பட்டுள்ளது. கோவிலின் உள்ளேயும் ஒரு திருக்குளம்; இரு பாலாருக்கும் பொதுவானது. நீராடுவது விசேஷம் எனக் கூறியதால், எங்களில் சிலர் நீராடி சுவாமி தரிசனம் செய்தனர்.

அனைவருமே ரூ. 30 கட்டணம் செலுத்தி, வரிசையில் சென்று சுயம்பு மூர்த்தியான மகாநந்தீஸ்வரரைத் தரிசித்து, பின் காமேஸ்வரி அம்மன், கோதண்ட ராமர் சந்நிதிகளில் வணங்கி, கோசாலை வழியே வெளியே வந்தோம். இத்தலத்தில் நந்தி தேவர் தவமிருந்ததாக கூறப்படுகிறது. அழகிய கோயில். அருகில் ஒரு பூங்காவில் பெரிய நந்தி வடிவில் ஒரு கட்டிடம் உள்ளது. உள்ளே நாம் கூறும் பிரணவம் எதிரொலிக்கிறது. அங்கு மதிய உணவை முடித்து, அடுத்து நாங்கள் சென்றது ஜோதிர் லிங்கத் தலங்களில் ஒன்றான ஸ்ரீ சைலம். சிவத்தல தரிசனத்திற்கு செல்வதால், வழியில் சிவ புராணம் ஓதினோம்.

இத்தலத்தில் மல்லிகார்ஜுனரும், பிரம்மராம்பிகை அம்மனும் அருள் புரிகின்றனர். இது ஜோதிர்லிங்கத் தலம் மட்டுமன்றி சக்தித் தலமும் கூட. இருமுறை நான் சென்ற போது சுலபமாக தரிசித்த ஈசனை, இம்முறை கட்டுக்கடங்காத மக்கள் வெள்ளத்தில் ரூ. 300 நுழைவுக் கட்டணம் செலுத்தி தரிசித்து வந்தோம். சிறப்பு தரிசனம் ரூ. 150, ரூ. 300, ரூ. 500 என மூன்று உள்ளது. ரூ. 500 தரிசனம் மாலை 5 மணியுடன் முடிந்துவிடுகிறது. பொது தரிசனத்திற்கு குறைந்தது 3 மணி நேரம் ஆகும் என்று கூறியபடியால், நாங்கள் சிறப்பு தரிசனத்தில் தரிசித்து வந்தோம். ஈசனைத் தரிசித்து, அம்பிகையைத் தரிசிக்க சுமார் 45 நிமிடங்கள் கூட்டத்தில் நீந்திச் செல்ல வேண்டி இருந்தது. பக்தர் அனைவருக்கும் லட்டு பிரசாதம் உண்டு. அங்கிருந்த கூட்டத்தில் விபூதி, குங்குமம், லட்டு என எந்த பிரசாதமும் வாங்க இயலாமல் இருந்த நிலையில், எங்களுக்கு ஒரு பெண் குங்குமப் பிரசாதம் அளிக்க பரமதிருப்தி அடைந்தோம். எங்களில் ஒரு பக்தை மகாமேருவின் குங்குமப் பிரசாதம் வாங்கி வந்து, அடுத்த நாள் காலை அனைவருக்கும் அளிக்க, நாங்கள் மனமார்ந்த நன்றியை அச் சகோதரிக்கு கூறினோம். இரவு சுமார் 8½ மணிக்கு கீழே இறங்க ஆரம்பித்து, பாதி வழியில் டோர்னபில் எனும் சிற்றூரில் இரவு தங்கினோம்.

காலையில் சுமார் 8 மணிக்கு சென்னைக்கு கிளம்பினோம். தரிசனங்கள் முடிந்துவிட்டமையால், நாங்கள் பேருந்தில் பாட்டுக்குப் பாட்டு விளையாடியபடியும், நடித்துக்காட்டி படப் பெயர் கண்டு பிடிக்கும் விளையாட்டும் விளையாடி மகிழ்ந்தோம். சிலர் ஆன்மீகத் தகவல்களை எங்களுடன் பகிர்ந்து கொண்டனர். அதிலும் குறிப்பாக திருமதி. ஜானகி சம்பந்தம் அவர்கள் பாடிய பாடலும், தகவலும் அற்புதம். பலர் சம்பந்திகளுடன் பயணம் செய்தமையால், திரு. தியாகராஜன் அவர்கள் எத்தனை திருமணங்கள் ஒப்புரவின் மூலம் முடிந்ததென வினா எழுப்ப, சுமார் 15 பேர் கையைத் தூக்கினர். இப்போதும் அனைவரும் ஒப்புரவு வாங்குகிறீர்களா ? என்ற அடுத்த கேள்விக்கு ஆறேழு பேரே வாங்குவதாக கூறியதும், அவர் அனைவரையும் ஒப்புரவு வாங்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

வரும் வழியில் புழல் அருகே ஞாயிறு எனும் தலத்தைத் தரிசித்தோம். ஒரு சிறிய கிராமம், சூரியன் வழிபட்ட ஈசன்; சங்கிலி நாச்சியார் பிறந்த தலம்; கண்வ மகரிஷி முக்தி அடைந்த தலம். திருவோடு மரம் காய்களுடன் இருப்பதைக் கண்டு ரசித்தோம். இங்கு சித்திரை 1 முதல் 7 ஆம் தேதி வரை கதிரவன், ஈசனைக் காலை 6.10–க்கு வணங்குவதாக கூறினர். அங்கு தரிசனம் முடிந்து, அருமையான சுற்றுலாவை ஏற்பாடு செய்த, திருவல்லிக்கேணி விஜயலட்சுமி டிராவல்ஸ் உரிமையாளர்கள் விஜய் ஆனந்த், விஜயலட்சுமி மற்றும் எங்களைப் பாதுகாப்பாக அழைத்துச் சென்று திரும்பிய வாகன ஓட்டுநர்களுக்கும், அன்புடன் சுவையாக அமுது படைத்த குழுவினருக்கும் பாராட்டி, நன்றி கூறி, இப்பயணத்தை வெற்றிகரமாக ஒருங்கிணைந்து, வழிநடத்திய நங்கநல்லூர் திரு. தியாகராஜன் அவர்களுக்கும் ஒரு 'ஓ' போட்டு, மகிழ்ச்சியுடன் இல்லம் திரும்பினோம். அடுத்த பயணத்திற்காக காத்திருக்கிறோம். நன்றி! வணக்கம்!

– திருமதி. வனஜா இளங்கோவன்.

பி.கு : நவ நரசிம்மர் தரிசனம் குறித்த கட்டுரை அடுத்த இதழில்.

---

## ஓய்வூதியர்களுக்கு சமுதாய சேவை

R. சபாபதி, கருவூலத்துறை, இணை இயக்குநர் (ஓய்வு)
எண். 1, முதல் தெரு, K.M.G. நகர், தலத்தெரு அஞ்சல்,
காரைக்கால்–609605. 9655618699/9486116037

10 ஆண்டுகளாக ஓய்வூதியர்களுக்கு திரு. சபாபதி அவர்கள் சேவை செய்து வருகிறார். 31.12.2022 வரை 3482 பென்ஷனர்களுக்கு உதவி செய்துள்ளார். அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் தினமும் தொலைபேசி மூலமாகவும், கடிதங்கள் வாயிலாகவும் அவர்களின் சந்தேகங்களை கேட்டு பயன் பெற்றுள்ளார்கள். அரசாணைநகல், படிவங்கள், பதில் வேண்டுவோர் அஞ்சல்வில்லை ஒட்டிய சுயமுகவரியிட்ட கவர் அனுப்பி பயன்பெறலாம். காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை போனில் தொடர்பு கொண்டு பேசலாம். இதை படிப்பவர்கள், நண்பர்கள், உறவினர்களுக்கு தெரியப்படுத்துங்கள், பயன்பெறுங்கள்.

"தகவல்"

P.G. இராமலிங்கம், சிதம்பரம்.
9842054106 / 8807032012

## பொய் அதிகாரம் !

மெய்யாத்தூர் சொ. வேல்முருகன்.
9578286891

நான் எனும் பொய்யோடு
நாளும் உயிர் வளர்க்கின்றான்
தான் அதில் கருகுவது
தனக்கே தெரியாமல் !

'காயமே இது பொய்' என்ற
பொய்க்குள் பொய் வைத்து
பூரிப்பில் திளைக்கின்றான் !
புரியாமல் களிக்கின்றான் !

தானெனும் செருக்கில்
தர்பார் நடத்துவதென்ன !
நானெனும் பொய்யில்
நாடகம் ஆடுவதென்ன !

படைத்தவன் சிரித்தான்
'பைத்தியக்காரன்' என்று !
பொய் அதிகாரத்தில் இவன்
பொழுதுகள் வீழக்கண்டு !

அரிச்சந்திரனைத் தெரியாதவன் !
அந்த அரிச்சுவடியையும் அறியாதவன் !
அறிந்தே பொய் சொல்கின்றான் !
அறியாமல் கெடுகின்றான்

பொய்க்கால் குதிரை ஆடுபவனும்
'பொய்' எனச் சொல்லித்தானே
வயிற்றைக் கழுவுகின்றான் !
வாய்மையைப் போற்றுகிறான் !

நானெனும் பொய்யை
நடத்துவோன் நானெனப்
பாடிய பாரதி தானே
'வீண்படு பொய்' என்கிறான் !

'பொய்யாமை அன்ன
புகழில்லை' என்றும்
'பொய்த்த பின் தன் நெஞ்சே
தன்னைச் சுடும்' என்றும்

வள்ளுவனின் சொல்லெடுத்துத்
தாருங்களேன் ! வாழும்
இவனது வாழ்க்கையை
நெறிப்படுத்த வாருங்களேன் !

# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

| **பெயர்**<br>**நட்சத்திரம்** | **பிறந்த தேதி**<br>**உயரம்** | **படிப்பு** | **வேலை** | **முகவரி** |
|---|---|---|---|---|
| **B 1/5** செல்வி **கௌ. ரோஷிணி**<br>ரோஹிணி<br>அரசுடையார்<br>பூர்வீகம் : தஞ்சாவூர்<br>விருப்பம் : சமபடிப்பு/சென்னை/பெங்களூரில் நல்ல பணியில் உள்ள வரன் | **16.09.95**<br>155 cm | B.E.<br>(Com. Sci)<br>M.Sc., Cyber Forensics and Information Security | Associate in MNC<br>Bangalore<br>(Top 5 Company) | திரு. N. Gowrishankar,<br>14/47, Valluvar Street,<br>Jagannatha Nagar, Arumbakkam,<br>Chennai - 600 106.<br>Cell : **96772 33791**<br>Phone : **044 – 2363 8284** |
| **B 2/5** செல்வி **R. பானுபிரியா**<br>கேட்டை 3ம் பாதம்<br>எரவுட<br>பூர்வீகம் : முல்லையூர்<br>விருப்பம் : சமபணியில் உள்ள பொருத்தமான வரன். | **21.11.98**<br>165 cm | B.E. (ECE) | Sr. Software Engineer<br>Fresh Works Technologies<br>Chennai | திரு. T. இரமேஷ்,<br>5, சரோ இரத்தினபுரம்,<br>புத்தர் தெரு,<br>**பெண்ணாடம் – 606 105.**<br>Cell : **94885 29923, 90801 87596** |
| **B 3/5** செல்வி **மு. திவ்யபிரியா**<br>கேட்டை 2ம் பாதம்<br>வஞ்சினமுட<br>பூர்வீகம் : செந்துறை – அரியலூர் (Dt)<br>விருப்பம் : டிகிரி முடித்த நல்ல பணியில் உள்ள வரன் | **02.06.96**<br>5' - 4" | B.A. (English) | | திரு. ச. முருகேசன் பிள்ளை,<br>1/53, நடுத் தெரு, வஞ்சினபுரம் (PO),<br>செந்துறை (Tk),<br>அரியலூர் (DT) **– 621 714,**<br>Cell : **96263 97559** (Whatsapp)<br>**94869 67149, 85319 86109** |
| **B 4/5** செல்வி **Dr. S. சத்திய பிரியா**<br>கேட்டை 3ம் பாதம்<br>களப்பாள<br>பூர்வீகம் : செந்துறை | **21.12.95**<br>160 cm | B.D.S., | Pvt. Clinic,<br>Trichy | திரு. M. சச்சிதாநந்தம்,<br>மேலரத வீதி, நெய்வனம் தெற்கு,<br>செந்துறை (PO),<br>அரியலூர் (DT) **– 621 714.**<br>Cell : **63833 93379, 94864 81712, 99948 69441** (W) |
| **B 6/5** செல்வி **ஆ. ஜெயலஷ்மி**<br>திருவோணம்<br>குழுமுட<br>பூர்வீகம் : தாமரைப்பூண்டி, செந்துறை (T.K.)<br>குறிப்பு : ராகு, கேது தோஷம் உள்ள வரன் | **01.01.98**<br>5' - 2: | M.Sc.,<br>Physics | - | திரு. வ. ஆறுமுகம்,<br>**1/189,** தாமரைப்பூண்டி,<br>மணக்குடையான் அஞ்சல்,<br>செந்துறை (Tk),<br>அரியலூர் (Dt) **– 621 719.**<br>Cell : **94428 68191, 94889 49380** |
| **B 7/5** செல்வி **M. இந்துமதி**<br>கேட்டை 4ம் பாதம்<br>விஸ்வராய<br>பூர்வீகம் : சிதம்பரம்<br>விருப்பம் : சமபடிப்பு, அரசு வேலை / IT சென்னையில் உள்ள வரன் | **13.06.95**<br>5' - 3" | B.E., EEE.,<br>MBA., | Software Engineer<br>Rs. 10 Lakhs/PA | திரு. G. முருகேசன்,<br>97, பார்த்தசாரதி தெரு,<br>**நன்மங்கலம், சென்னை–600 129.**<br>Cell : **70106 83125 / 86089 00886** |
| **B 8/5** செல்வி **M. ஜெயபிரதா**<br>ரேவதி<br>பஞ்சதரிய<br>பூர்வீகம் : ஆக்கூர்<br>விருப்பம் : சமபடிப்பு, அல்லது B.E., படித்து நல்ல வேலையில் உள்ள வரன் | **06.10.98**<br>5' - 3" | B.Com.,<br>MBA.,<br>ICWA (Inter) | Associate,<br>B.N.P. Paribas,<br>Chennai<br>Rs. 4 Lakhs/PA | திரு. சாந்திமோகன்,<br>பிளாட்**–25,** D.T. ராஜன் சாலை,<br>V.I.P. நகர், நல்லத்துக்குடி,<br>மயிலாடுதுறை **– 609 001.**<br>Cell : **89400 90610** |

| பெயர் நட்சத்திரம் | பிறந்த தேதி உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 9/5** செல்வி **க. ஹேமஸ்ரீ**<br>பூசம் 2ம் பாதம்<br>குமாரக்குட<br>பூர்வீகம் : விசலூர் – திருவிடைக்கழி<br>விருப்பம் : BE/ME படித்த நல்ல பணியில் உள்ள வரன் | 05.05.87<br>160 cm | M.S.<br>Software<br>Engineering | System Consultant<br>TCS / Chennai | திரு. A.S. Kalaiselvan<br>No. 61/4, Main Road,<br>Karpaga Vinayagar Nagar II,<br>Near Anbalayam, Thittai Road,<br>Sirkali - 609 110. Nagai Dt.,<br>Cell : 72994 30133 / 94451 18896 |
| **B 10/5** செல்வி **M. தனலட்சுமி**<br>உத்திரம்<br>பழுவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : சமபடிப்பு | 07.05.98<br>154 cm | B.Tech (CS)<br><br><br>. | Software<br>Professional<br>EPSILON<br>Bangalore | திரு. K. மணிகண்டன்,<br>G1, Ashok Manor, Ruby Builders,<br>5/2, Kalamegam Street,<br>East Tambaram, Chennai - 600 059.<br>Cell : 94447 11045, 99416 20355 |
| **B 11/5** செல்வி **ஆ. தேவதர்ஷினி**<br>ஆயில்யம் 2ம் பாதம்<br>தென்னவராய<br>பூர்வீகம் : வடகுமரை | 10.5.2000<br>173 cm | M.Sc.,<br>B.Ed., | | திரு. ஆறுமுகம்,<br>2/180, அங்காளம்மன் கோவில் தெரு,<br>வடகுமரை கிராமம்,<br>தென்குமரை அஞ்சல்,<br>தலைவாசல் வட்டம்,<br>சேலம் மாவட்டம் – 636 121.<br>Cell : 94433 13193<br>E-mail : arumugamvallalar1@gmail.com |
| **B 12/5** செல்வி **V. நந்தினி**<br>திருவோணம்<br>செம்பதரிய<br>பூர்வீகம் : பரதூர் – சிதம்பரம் | 24.03.98<br>5' - 3" | B.E. (ECE) | Software Enginner,<br>Chennai<br>Rs. 11 Lakhs/PA | திரு. S. வாசுதேவன்,<br>8, மீனாட்சி அவென்யூ,<br>சாந்தி நகர், சிதம்பரம் – 608 001.<br>Cell : 82206 30973, 99443 27563 |
| **B 13/5** செல்வி **சி. சௌந்தர்யா**<br>திருவோணம்<br>எரவுட<br>பூர்வீகம் : மணவாளநல்லூர் – விருத்தாசலம் | 11.10.97<br>163 cm | B.E. (EEE) | Capgemini,<br>Consultant<br>Rs. 8.5 Lakhs/PA | திரு. N. சிவக்குமார்,<br>74/1, தெற்கு தெரு,<br>கிளிமங்கலம் & அஞ்சல்,<br>திட்டக்குடி T.K., கடலூர் Dt.,<br>Cell : 91592 35153, 76398 98894 |
| **B 14/5** செல்வி **அனன்யா .S**<br>ஸ்வாதி<br>ஆலத்துகுட<br>பூர்வீகம் : மயிலாடுதுறை | 21.07.99<br>156 cm | B.E. (CS)<br>MBA<br>(IIM Trichy) | | திரு. Shivakumar .K,<br>D-1103, Salarpuria Sanctity,<br>Sarjapura road, Bangalore,<br>Karnataka - 560 035.<br>Cell : 94489 08726, 63641 44591 |

## வாழ்த்துகிறோம்

காரைக்கால் குரும்பகரம் Dr. மு. வேணுகோபாலன் அவர்களுக்கு புதுச்சேரி மாநில அரசு, இயல் துறையில் ஆற்றிவரும் அளப்பரிய பணிகளுக்காக "புதுவைக் கலைமாமணி" என்ற விருதினை வழங்கி பாராட்டியுள்ளது. சென்னை கார்காத்தார் சங்கமும், கார்காத்தார் ஒப்புரவும் அவர் மேலும் பல விருதுகளை பெற வாழ்த்துகிறது.


## வேலை வாய்ப்பு

**Looking for Restaurant Supervisor / Manager with 10 years of experience. Send your resume in Whatsapp 98407 87151**

| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 1/5** செல்வன் **S. ஜெகநாதன்**<br>சுவாதி 4ம் பாதம்<br>யெனுகுடையார்<br>விருப்பம் : சமபடிப்பு | **24.07.96**<br>180 cm | B.E.,<br>MBA., | Software Engineer<br>HCL<br>Chennai | திரு. L. சரவணன்,<br>27-1/6A, வடக்கு ரத வீதி,<br>செங்கோட்டை – **627 809,**<br>தென்காசி மாவட்டம்.<br>Cell : **94872 46698** |
| **G 2/5** செல்வன் **M. கார்த்திகேயன்**<br>உத்திரம்<br>சேதுவராயர்<br>பூர்வீகம் : திருநாரையூர்<br>விருப்பம் : நல்ல குணமுள்ள வரன் | **17.12.92**<br>170 cm | B.E., | கமிஷனர் ஆபீஸ்<br>எழும்பூர்<br>Amtex Software<br>Solutions Pvt. Ltd. | திரு. K. முருகேசன்,<br>65/1, ராகவேந்திரர் நகர்,<br>கூடுவாஞ்சேரி, மாடம்பாக்கம்,<br>சென்னை<br>Cell : **99426 16640 / 97898 81809** |
| **G 3/5** செல்வன் **கா. வெங்கடேஷ்**<br>உத்திரம்<br>கொங்குராய<br>பூர்வீகம் : பண்ணப்பட்டு – சிதம்பரம் | **17.08.96**<br>172 cm | B.E, (ECE) | SEDIN<br>Technologies<br>Chennai<br>Rs. 8 Lakhs/PA | திரு. C. கார்த்திகேயன்,<br>304, Surya Appartments,<br>2nd Floor, Surya Garden,<br>Peelamedu,<br>Kovai - 641 004.<br>Cell : **93457 50510** |
| **G 4/5** செல்வன் **T. சந்தோஷ்**<br>திருவாதிரை<br>வானதிராய<br>பூர்வீகம் : அம்பாள்புரம்<br>விருப்பம் : சமபடிப்பு / பெங்களூரில் வேலை செய்ய சம்மதம் | **10.03.95**<br>170 cm | B.Tech.,<br>(CS) | Software Engineer<br>Bangalore<br>Rs. 24 Lakhs/PA | திரு. S. திருமாவளவன்,<br>பிளாட் எண் 417B,<br>பன்னீர் நகர், முகப்பேர்,<br>சென்னை – **600 037.**<br>Cell : **99415 09304, 99414 18437** |
| **G 5/5** செல்வன் **A. சிவராஜன்**<br>பரணி<br>வானவராய<br>பூர்வீகம் : கள்ளிக்காடு<br>விருப்பம் : படித்து பணியில் உள்ள வரன். | **23.06.95**<br>5' - 8" | M.B.A., | Azentio Software<br>Pvt. Ltd. Chennai<br>Rs. 5,00,00 /PA | திரு. N. அருணாச்சலம்,<br>1/80, தெற்குத் தெரு,<br>கள்ளிக்காடு,<br>கொற்கை அஞ்சல், நீடுர் வழி,<br>மயிலாடுதுறை – **609 203.**<br>Cell : **98437 62410** |
| **G 6/5** செல்வன் **மு. ஹரிஹரன்**<br>மிருகசீரிடம்<br>மாலுட<br>பூர்வீகம் : வையூர், சிதம்பரம்<br>விருப்பம் : பட்டதாரி வரன் | **16.06.96**<br>175 cm | B.E.,<br>MBA | NPD, Sr. Engineer,<br>Bangalore<br>Rs. 40,000/PM | திரு. மா. முருகேசன்,<br>மேலத் தெரு,<br>வையூர்,<br>சிதம்பரம் TK - 608 401.<br>Cell : **98434 44581, 94864 57184** |
| **G 7/5** செல்வன் **R. முத்துக்குமரன்**<br>அசுபதி<br>பேருட<br>பூர்வீகம் : பின்னத்தூர் | **05.09.93**<br>170 cm | B.E.,<br>(ECE) | Group M Pvt.<br>Manager<br>Chennai | திரு. A. ராஜாமணி,<br>**19/42,** கமலீஸ்வரன் கோயில் தெரு,<br>சிதம்பரம் – **608 001.**<br>Cell : **93605 55082, 96291 85008** |
| **G 8/5** செல்வன் **B. Anandan**<br>ஆயில்யம் 1ம் பாதம்<br>பல்லவராய | **29.05.90**<br>176 cm | B.Tech, | Software Enginner<br>Astra Networks<br>Bangalore<br>Rs 3 Lakhs/PM | திரு. R. Balasubramanian,<br>22, Sri Senjudaiappar Nagar,<br>Dhanalakshmi Nagar Extn.,<br>Ainthu Thalai Vaikal,<br>Kumbakonam - 612 103.<br>Cell : **97867 79505, 96774 61691** |

| பெயர் நட்சத்திரம் | பிறந்த தேதி உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 9/5** செல்வன் **S. பரணீதரன்**<br>பரணி<br>வேலுடையான்<br>பூர்வீகம் : விருத்தாசலம்<br>விருப்பம் : படித்த, வேலையில் வரன். | 29.04.95<br>178 cm | B.Tech., | Cognizant,<br>Chennai<br>Rs. 10 Lakhs /PA | திரு. V. சிவக்குமார்,<br>Plot No. 50, வெண்பா அவென்யூ,<br>2வது தெரு, சித்தாலப்பாக்கம்,<br>சென்னை – 600 126.<br>Cell : 94445 08005, 94445 08001<br>Phone : 044 – 22770471 |
| **G 10/5** செல்வன் **R. Karthikeyan**<br>Karthigai<br>Kothanuda<br>பூர்வீகம் : Mullaiyur | 28.08.94<br>5' - 10" | B.Tech.,<br>(Computer Science) | ZOHO Corporation<br>Chennai<br>Rs. 18 Lakhs /PA | திரு. T. ராமலிங்கம்,<br>1/183, Perumal Koil Street,<br>Mullaiyur, Sendurai Taluk,<br>Ariyalur Dist.<br>Cell : 99655 57000 |
| **G 11/5** செல்வன் **V. Gunaseelan**<br>Uthiram<br>Sembuthariya<br>பூர்வீகம் : Thunijiramedu, Chidambaram<br>விருப்பம் : Suitable Alliance | 06.01.91<br>170 cm | B.Sc., (CSE)<br>BBA Banking<br>MBA | Deputy Branch Manager IDFC First Bank<br>Pondicherry,<br>Rs. 5,40,000/PA | திரு. C. Chinnasamy Pillai @ Gandhi<br>Kodalikarupur,<br>Cell : 94435 89944, 97893 46847 |
| **G 12/5** செல்வன் **S. விக்னேஷ்**<br>பரணி<br>பங்களதரிய<br>பூர்வீகம் : கீழ்நத்தம், சிதம்பரம்<br>விருப்பம் : படித்த வேலையில் உள்ள வரன். | 23.06.95<br>5' - 7" | M.Sc.,<br>(CS) | System Administrator<br>NLGIC Support Service Pvt. Ltd.,<br>Nungambakkam<br>Rs. 35,000/PM | திரு. S. சுந்தரம்,<br>பிளாட் எண். 34,<br>வேலன் நகர்,<br>கண்ணங்குடி மெயின் ரோடு,<br>சிதம்பரம் – 608 001.<br>Cell : 99428 57747 / 73055 81424<br>E-mail:sundaramnirmala.90@gmail.com |
| **G 13/5** செல்வன் **ச. விஷால்**<br>ஆயில்யம் – 4<br>அறங்குட<br>பூர்வீகம் : ஆக்கூர் (மயிலாடுதுறை)<br>விருப்பம் : பணியில் உள்ள வரன் | 08.08.94<br>165 cm | B.E.,<br>MBA., | Software Engineer<br>Cognizant<br>(CTS), Chennai<br>Rs. 18 Lakhs/PA | திரு. இரா. சந்திரகுமார்,<br>No. 1, இராஜா ராமண்ணா தெரு,<br>எம்.எம்.டி.ஏ. நகர்,<br>சிட்லபாக்கம்,<br>சென்னை–600 064.<br>Cell : 94443 14601, 70106 32024 |
| **G 14/5** செல்வன் **V. நட்ராஜ்**<br>புனர்பூசம்<br>செம்பதரிய<br>பூர்வீகம் : பரதூர் – சிதம்பரம்<br>விருப்பம் : பணியில் உள்ள வரன் | 12.02.95<br>5' - 8" | B.E.<br>(ECE), | Software Engineer<br>Chennai<br>Rs. 11 Lakhs/PA | திரு. S. வாசுதேவன்,<br>8, மீனாட்சி அவென்யூ,<br>சாந்தி நகர்,<br>சிதம்பரம் – 608 001.<br>Cell : 82206 30973, 99443 27563 |
| **G 15/5** செல்வன் **பாலாஜி (எ) பிரதீப்**<br>பரணி<br>வில்வராய<br>பூர்வீகம் : தருமகுளம் – பூம்புகார் | 21.07.95<br>184cm | B.E.<br>(ECE), | Technology Lead<br>Infosys<br>Rs. 15 Lakhs/PA | திரு. S. பாலசுப்ரமணியன்,<br>3, Venkateswara Nagar, Thenpathy,<br>Sirkali - 609 111.<br>Cell : 9488004523, 7010973770 |

## வாழ்த்துக்கள்

கொங்கு பொறியியல் கல்லூரியின் 39வது ஆண்டு விழாவில் B.Tech. Food Technology பிரிவில் கே. சிநேகா சிறந்த மாணவியாக தேர்ந்தெடுக்கப்பட்டு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டுள்ளது. இவர் T.N. முத்துக்குமாரசுவாமியின் (CREW Trust Honorary Advisor) பேத்தி ஆவார். கே. சிநேகா மேலும் பல வெற்றிகளை பெற வாழ்த்துக்கள்.

# சங்க நிகழ்வுகள்

**சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு**

100க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் ஒவ்வொரு மாதமும் சங்கச் செய்திகள் அனுப்புவதில்லை என்றாலும் அனுப்பப்படும் சங்கச் செய்திகள் அனைத்தையும் வெளியிட முயற்சிக்கிறோம். அதற்கு உதவிகரமாக சங்கச் செய்திகள் அனுப்புபவர்கள் தாங்கள் அனுப்பும் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் மட்டும் அனுப்பி அதிகமான சங்கங்களுக்கு வாய்ப்பளிக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். நிர்வாகத் தேவை காரணமாக அனுப்பப்படும் செய்திகளை நிராகரிக்கவோ சுருக்கித் தொகுக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

## நங்கநல்லூர்

சங்கத்தின் ஏப்ரல் 2023க்கான மாதாந்திர கூட்டம் தலைவரது இல்லத்தில் 23.4.2023 அன்று நடைபெற்றது. சங்க மகளிரணி உறுப்பினர் திருமதி கல்பனா கல்யாணசுந்தரம் அவர்களது தந்தையார் திருஞானசம்மந்தம் பிள்ளை, கொத்தங்குடி வயது 86 மறைவுக்கும், YMKA–ன் மேனாள் தலைவர் S. தியாகராஜன் அவர்களது மறைவுக்கும் இரங்கல் தெரிவிக்கக்கட்டது.

சங்கத்தின் சென்ற மாதத்திய கூட்ட அறிக்கையையும் 20.3.2023 முதல் இன்று வரை உள்ள காலத்தில் சங்கத்தின் இதர நிகழ்வுகள் அனைத்தும் செயலாளரால் விவரிக்கப்பட்டது.

சென்ற மாத கூட்டத்தில் தீர்மானித்தபடி 23.4.2023 காலை 10.00 மணிக்கு நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோவில் அருகில் நீர் மோர் பந்தல் துவக்கப்பட்டு சுமார் 400 நபர்களுக்கு நீர் மோர் வழங்கபட்டது. இந்த நிகழ்வில் ஒத்துழைப்பு நல்கிய சங்கத்தை சார்ந்த தொண்டுள்ளங்களுக்கு வாழ்த்துக்கள், சங்கத்தின் சார்பாக செயலாளரால் ஆன்மீக சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த 6.4.2023 முதல் 9.4.2023 (நான்கு நாட்கள்) ஆந்திரா மாநிலம் அகோபிலம், மகா நந்தி, ஸ்ரீசைலம் மற்றும் ஜானவாடா தலங்களில் பிரசித்தி பெற்று விளங்கும் வைஷ்ணவ / சிவ திருக்கோவில்களும் சென்னை திரும்புகின்ற வழியில் ஞாயிறு கிராமத்தில் உள்ள பழமையான தொன்மை வாய்ந்த சிவன் கோவிலையும் தரிசித்து மகிழ்ந்து சுற்றுலா குழு சென்னை நங்கநல்லூர் வந்தடைந்தது.

சுற்றுலா அனுபவங்களை விரிவாக சங்க செயலாளர் திரு. கோ. தியாகராஜன் அவர்கள் கூட்டத்தினரிடையே பகிர்ந்து கொண்டது வெகு சிறப்பு வாழ்த்துக்கள்.

செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு சங்க தலைவர் குடும்பத்தினரால் இரவு உணவு வழங்கப்பட்டது.

செயற்குழு உறுப்பினர் கவிஞர் R. கார்த்திகேயன் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிது நிறைவடைந்தது.

க. சரவணன் தலைவர்.

## அண்ணாநகர்

சங்க கூட்டம் 9–4–2023 அன்று கொரட்டூர் சங்க குடியிருப்பில் நடைபெற்றது.

அண்ணாநகர் திரு. பாண்டியன், திருமதி. மாதவி மனோ தியாகராஜன் அவர்களின் தந்தை திரு. நாங்கூர் பாலு பிள்ளை அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

சிஎம்டிஏ சிவகுமார் அவர்களின் மகள் மகாலெஷ்மி – விக்னேஷ் திருமண வாழ்த்து மடல் தலைவர் மற்றும் எஸ். சிவப்பிரகாசம் அவர்களால் செயற்குழு உறுப்பினர்கள் முன்னிலையில் வழங்கப்பட்டது.

அவரவர்க்கு தெரிந்த ஆண்டு உறுப்பினர்களை ஆயுட்கால உறுப்பினராக்க முயற்சி எடுக்க வேண்டும் எனவும், புதிய உறுப்பினர்களை அடையாளங் கண்டு உறுப்பினராக்க முயற்சி எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

திரு. சிவசங்கரன், உதவி காவல் அதிகாரி (ஓய்வு) அவர்கள் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. நன்றி !

என். ஆனந்தகணபதி, செயலர்.

9094682811

## குரோம்பேட்டை

குரோம்பேட்டை மாதாந்திர செயற்குழு கூட்டம் 16–04–2023 அன்று 6, பிரவீன் பிளாட்ஸ், காந்தி ரோடு, சிட்லப்பாக்கத்தில் தலைவர் திரு. சி. மனோகர் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

பொருளாளர் திரு. ஆர். வசந்தகுமார் நிதி நிலை அறிக்கை சமர்ப்பித்தார். நெல்லையப்பர் வளாக கட்டுமான நிலை குறித்தும் அதன் பெயர் சூட்டலில் மேலும் அரசுக்கு கொடுக்க வேண்டிய அழுத்தம் குறித்தும் விவாதிக்கப்பட்டது. தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் திட்டத்தின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டது. மே மாத இறுதியில் ஒரு நாள் சுற்றுலா ஏற்பாடு செய்ய முடிவு செய்யப்பட்டது. குழு அமைக்கப்பட்டது. செப்டம்பர் மாதத்தில் வர இருக்கும் மங்கல சந்திப்பு குறித்து ஏற்பாடுகள் தொடங்கவும் அதற்கான நிர்வாக குழுக்கள் அமைப்பது பற்றியும் விவாதிக்கப்பட்டது. கோடைகாலங்களில் மூத்த உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வர சந்திக்கும் சிரமங்களை போக்கும் வகையில் அவர்களுக்கு மட்டும் ஜூம் மீட்டிங் வசதி செய்து தர ஏற்பாடு செய்யப்பட்டது.

– பா. தியாகராஜன்

செயலாளர்.

## காட்டுமன்னார் கோயில் ஒன்றியம்.

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 02–04–2023 அன்று பூவிழுந்த நல்லூரில், தலைவர் திரு. R. பத்மநாபன் இல்லத்தில் நடைபெற்றது. செயலர் திரு. V.R. ஞானம் அனைவரையும் வரவேற்றார். தலைவர் தனது தலைமை உரையில் சங்கத்தில் அதிக உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார். பொருளாளர் திரு. V. இராமகிருஷ்ணன் 2022 – 2023 ஆம் ஆண்டின் வரவு – செலவு அறிக்கையை சமர்ப்பித்தார். செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மனதாக ஏற்றனர்.

நமது ஒன்றிய கிராமப்புறத்தைச் சேர்ந்த 7 குடும்பங்களுக்கு ஒப்புரவு மாத இதழ் அனுப்பிடுமாறு, இதழ் ஆசிரியரை கேட்டுக் கொள்வதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. துணைத்தலைவர் திரு. S. ஜெயசீலன், 12–ஆம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கு, மேற்கொண்டு படிக்க வேண்டிய துறைகளைப் பற்றி ஆலோசனை வழங்கினார். இணைச் செயலர் திரு. K. ராஜூ நன்றி கூறினார். தலைவரின் சிற்றுண்டி விருந்துக்குப்பின் கூட்டம் நிறைவு பெற்றது.

- V.R. ஞானம்,

செயலர்.

9444876164

## சீர்காழி

சங்க செயற்குழு கூட்டம் 1–4–2023 அன்று சங்க கட்டிடத்தில் தலைவர் திரு. கல். சுகுந்தவனநாதன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வருகின்ற 7–5–2023 அன்று நடைபெறும் ஆண்டு விழா மற்றும் 20–வது மங்கல சந்திப்பு இரண்டையும் சிறப்பாக நடத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டது. வரும் காலங்களில் ஒப்புரவு புத்தகத்தில் உள்ள QR கோடு பயன்படுத்தி தேவைப்படுவோர் புத்தகம் பெற்று கொள்ளலாம் என்று ஆலோசிக்கப்பட்டது.

சங்க செயற்குழு கூட்டம் C. அகோரம் பிள்ளை நன்றி கூற இனிதே நிறைவு பெற்றது.

### வருந்துகிறோம்

சீர்காழி, பாப்பையா நகரில் வசித்த திரு. S. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை முன்னாள் சீர்காழி கார்காத்தார் சங்க தலைவர் அவர்கள் 30–03–2023 அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம்.

குண. அமுதன் பிள்ளை,

செயலாளர்.

## செம்பொன்னார்கோவில்

சங்க கூட்டம் 06–04–23 அன்று திரு. ச. ஆனந்தன் அவர்கள் மேலப்பாதி இல்லத்தில் திரு. ச. சங்கர் அவர்களும் இணைந்து கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்கள். மு. மண்டல செயலாளர் திரு. கோ. வடிவேலு பிள்ளை அவர்கள் தலைமையில் திரு. ச. சங்கர் அவர்களது மகன்கள் செல்வன். ச. பிரியதர்ஷன் இறைவணக்கம் பாடிடவும், செல்வன். ச. பிரவீன் வரவேற்புரை ஆற்றிடவும், மு.ம. செயலாளர் கோ. வடிவேலு பிள்ளை சென்ற மாத அறிக்கை வாசிக்கவும், பொருளாளர் திரு. M.C. செல்வராஜ் அவர்கள் வரவு – செலவு அறிக்கை வாசிக்கவும் கூட்டம் அதனை ஏற்றது. சிறப்புத்தலைவர் திரு. மு. சபாநாயகம் பிள்ளை தமது உரையில் அனைத்து வேளாளர் சங்கமும் ஒன்றிணைந்து செயல்பட மாநில சங்கம் ஒத்துழைப்பு நல்கி ஏற்பாடு செய்திட வேண்டும் என்று கூறினார்கள். திரு. V. வாசன் அவர்கள் தமது உரையில் ''கார்காத்தார் ஒப்புரவு'' மாத இதழில் வாரியார் நகைச்சுவை உரைகள் மற்ற பலன் அளிக்க கூடிய கவிதைகள், கட்டுரைகள் நல்ல பல செய்திகளோடு வெளியிடப்படுவதால் அனைவரும் ''ஒப்புரவு'' மாத இதழை வாங்கி செய்திகளை அறிந்திட வேண்டும் என்று கூறினார்கள். மேலும் திரு. கணபதி நடனம் பிள்ளை, திரு. மு.ம. செயலாளர் கோ. வடிவேலு பிள்ளை ஆகியோர்

தங்களது உரையில் கூட்டம் நடத்திய இல்லத்தார் பற்றி அவர்கள் கீழையூர் கிராமத்தில் பாரம்பரிய குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றும் தற்சமயம் அவர்கள் ஏற்று செய்ய கூடிய எலக்ட்ரிஷியன் தொழிலை செவ்வனே செய்து வருவதாகவும், நமது கார்குல சொந்தங்கள் குடும்பங்களுக்கு அவர்கள் தகவல் சொன்னால் உடனே இல்லத்திற்கு சென்று சொல்லும் பணிகளை செய்து கொடுப்பதாகவும் பெருமையுடன் எடுத்து கூறினார்கள். கூட்டம் நடத்திய இல்லத்தார் சார்பாக வருகை தந்தோர்க்கான பரிசு ஆண்களுக்கு திரு. நெ. சரவணன் அவர்களுக்கும், பெண்களுக்கான பரிசு திருமதி. லலிதா w/o ரமேஷ் அவர்களுக்கும் குலுக்கல் முறையில் வழங்கப்பட்டது. கூட்டம் நடத்திய இல்லத்தார் இருவருக்கும் சங்கம் சார்பாக சால்வை அணிவிக்கப்பட்டது. இரவு சிற்றுண்டியும், பாலும் இல்லத்தார் சார்பாக வழங்கப்பட்டது. திரு. ச. ஆனந்தன் அவர்கள் நன்றி கூறிட இரவு 9.00 மணியளவில் கூட்டம் நிறைவு பெற்றது.

S. நெடுஞ்செழியன்,

செயலாளர்.

## பரசலூர்

14–4–2023 அன்று சங்க கூட்டம் பரசலூர் ஆனந்தபுரம் V. சிவக்குமார் இல்லத்தில் தலைவர் க. கோவிந்தராஜன் பிள்ளை தலைமையில் திருமதி. R. சாரதா இறைவணக்கம் பாட, திரு. V. சிவக்குமார் பிள்ளை வரவேற்புரை நிகழ்த்த துவங்கியது.

முதல் நிகழ்வாக விக்னேஸ்வர பூஜையுடன் சோபகிருது வருடம் பஞ்சாங்கம் வாசித்தல் தொடங்கியது.

செயலர் திரு. வீ. கண்ணன் பிள்ளை அவர்கள் சென்ற மாத அறிக்கையையும் பொருளர் திரு. S.M. விஜய் பிள்ளை நிதி அறிக்கையையும், தலைவர் திரு. க. கோவிந்தராஜன் பிள்ளை மு.அ. நிதி அறிக்கையையும் வாசித்தார்கள்.

தருமபுரம் ஆதீனம் 27–வது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக நேரிடையாக சங்க பொறுப்பாளர்கள் பஞ்சாங்கம் வழங்கினர்.

உறுப்பினர்கள் சங்க வளர்ச்சிக்கு தங்களது கருத்துக்களை வழங்கினார்கள். பரசலூர் அருள்மிகு. வீரட்டேஸ்வரர் திருக்கோயில் ஸ்ரீ தட்ச சம்ஹார மூர்த்தி மகா அபிஷேகத்தில் (தமிழ் வருடப் பிறப்பு அன்று) பெரும் அளவில் கார்குல சொந்தங்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கூட்டம் நடத்திய இல்லத்தார் சார்பில் அனைவருக்கும் இனிப்புடன் கூடிய இரவு உணவு வழங்கப்பட்டது.

ஆண்கள், பெண்கள் மொத்தம் 60 பேர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

குலுக்கல் பரிசு ஆண்களுக்கான பரிசு N. அஸ்வின்ராஜ், பெண்களுக்கான பரிசு திருமதி. R. ஈஸ்வரி முறையே V. சிவக்குமார் பிள்ளை, R. சபிதா வழங்கினார்கள்.

கூட்டம் நடத்திய இல்லத்தார் V. சிவக்குமார் பிள்ளை, R. சபிதாவிற்கு, N. சிவக்குமார் பிள்ளை, திருமதி. A. ஜெயசுதா சால்வை அணிவித்தனர்.

திரு. N. அஸ்வின்ராஜ் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

– V. கண்ணன், செயலர்.

Cell : 9894960438

## ஆக்கூர்

மாதக் கூட்டம் 9–4–2023 அன்று ஆக்கூர் சிவன்கோவிலில் கௌரவத்தலைவர் திரு. டாக்டர். K. பாலகிருஷ்ணன் பிள்ளை அவர்கள் முன்னிலையில் திரு. ஞா. செல்வக்குமார் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. திரு. S. சுரேஷ்மணி பிள்ளை இறைவணக்கம் பாடினார்கள்.

திரு. A.R.S. பிரபாகர் பிள்ளை வரவேற்றார். டாக்டர். K. பாலகிருஷ்ணன் தமது உரையில் பெருமாள் கோவில் கும்பாபிஷேக திருப்பணிகள் முன்னேற்றம் குறித்து பேசினார்கள். தலைவர் G. செல்வகுமார் பிள்ளை மாரியம்மன் கோவில் (தீமிதி) கரகம் எடுத்தல் நிகழ்வு தமது குடும்ப உபய நிகழ்வாக நடைபெற உள்ளது. அதற்கு அனைவரும் வருகைத் தரவேண்டும் என அன்புடன் கேட்டுக் கொண்டார்கள்.

உறுப்பினர்கள், கூட்டத்திற்கு வரும்போதே சந்தா செலுத்தலாம் என முடிவு செய்யப்பட்டது. மேலும் புத்தாண்டு அன்று மாலை 6.00 மணிக்கு சிவன் கோவிலில் பஞ்சாங்கம் படித்தல் நிகழ்வு நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது.

செயலர் திரு. R. கோவிந்தாசு பிள்ளை அவர்களால் சென்றக் கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. தொடர்ந்து பொருளர் திரு. M. சுந்தரேசன் பிள்ளை நிதிநிலை அறிக்கையினை வாசிக்க சங்கம் அதனை ஏற்றுக்கொண்டது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

பெருமாள் கோவில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற உறுப்பினர்கள் நிதி உதவி செய்யவும்,

ஆக்கூர் தீமிதி உற்சவ கரகம் எடுத்தல் நிகழ்வில் உறுப்பினர்கள் கலந்து கொள்ளவும், ஆண்டு சந்தா வசூல் செய்யவும், பெருமாள் கோவில் கும்பாபிஷேகத்தின் போது ஆக்கூர் கார்காத்தார் சங்கத்தின் சார்பில் அன்னதானம் செய்யவும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

A. பாலன் பிள்ளை அவர்களின் நன்றியுரைக்குப்பின் அடுத்தக் கூட்ட அறிவிப்புடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

- G. செல்வக்குமார்,

தலைவர்.

9942480320

## மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு கார்காத்தார் சங்க மாதாந்திர கூட்டம் 05–04–2023 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே தொடங்கியது.

சங்க உறுப்பினர்களை தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் வரவேற்று பேசினார். பின்னர் மேலப்பெரும்பள்ளம் ஸ்ரீ சீதலாதேவி மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் பணிகள் பற்றி ஆலோசனை செய்யப்பட்டது.

பின்னர் சங்க உறுப்பினர்களுக்கு சோபகிருது ஆண்டு சுத்த வாக்கிய பஞ்சாங்கம் வழங்கப்பட்டது. பொருளாளர் திரு. G. பாஸ்கரன் அவர்கள் நன்றி கூற சங்க கூட்டம் இனிதே நிறைவுற்றது.

பால. இலட்சுமணன்,

தலைவர்.

9443783743

## மணிக்கிராமம்

சங்க கூட்டம் 03–04–2023 அன்று மணிக்கிராமம் சிவன்கோவிலில் பிரதோஷ வழிபாட்டுக்கு பிறகு தலைவர். திரு. M. சிங்காரவேலன் தலைமையில் நடைபெற்றது. செயலர் திரு. G. அன்பழகன் சிவபுராணமும், சென்ற மாத அறிக்கையையும் வாசித்தார். பொருளர் திரு. T. கபிலன் வரவு – செலவு கணக்குகளை படித்தார். சங்கம் அதை ஏற்றுக்கொண்டது.

தலைவர் முன்னுரையில் ஸ்ரீ மாரியம்மன் கோவில் தீமிதி உற்சவமும், காப்புகட்டும் நிகழ்ச்சி, சுவாமி புறப்பாடு ஆகியவற்றை எல்லோரும் வந்து இருந்து சிறப்பாக செய்ய வேண்டும் என பேசினார். பொருளர் நன்றி கூற நாட்டுபண்ணுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

– கோ. அன்பழகன்,

செயலர்.

## இராதா நல்லூர்

சங்க கூட்டம் 9–4–2023 தலைவர் இல்லத்தில் தலைவர் தலைமையில் செயற்குழு உறுப்பினர் G. மணிகண்டன் வரவேற்க கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ரூ. 1350/– க்கு பஞ்சாங்கம் வாங்கி உறுப்பினர்களுக்கு வழங்கிய ராசு பிள்ளை குடும்பத்தினருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

சங்க துணைத்தலைவர் G. இராஜநாயகம் அவர்களின் மகன் R. சீனுவாசன் என்ற மாணவருக்கு கல்வி உதவித்தொகை ரூ. 10,000/– வழங்க வழிகாட்டியாக செயல்பட்ட R.M. சத்தியமூர்த்தி அவர்களுக்கும், மேற்படி உதவித்தொகை வழங்கிய தி கார்காத்தார் சங்கம் (மெட்ராஸ்) க்கு நன்றியினை தெரிவித்து,

2023–24–ம் ஆண்டிற்கான மாநில சங்கத்திற்கு இணைப்புதொகையினை செலுத்த தலைவர் அவர்களை கேட்டுக்கொள்ளவும் G. மணிகண்டன் அவர்களின் இளைய மகன் M. நிமலனின் காதணி விழா மற்றும் இரா. வெங்கடேஸ்வரன் அவர்களின் மனைவி சி. புவனேஸ்வரி அவர்களின் வளையலணி விழாவிற்கு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தமைக்கு நன்றி தெரிவித்தும் ,

இருதய அறுவை சிகிச்சை மேற்கொண்டுள்ள சங்க பொருளாளர் மு. சீனிவாசன் அவர்கள் விரைவில் குணமடைய சங்கம் இறைவனை வேண்டியும்,

ஸ்ரீ மாரியம்மன் கோயிலில் 14–4–2023 அன்று காப்புகட்டி தொடர்ந்து 11நாட்கள் நடைபெற உள்ள தீமிதி உற்சவ விழாவிற்கு அனைவரும் கலந்து கொண்டு ஒத்துழைப்பு நல்கிடவும் தீர்மானிக்கப்பட்டது.

சங்க செயலர் இரா. மு.அ. செல்வம் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

- T. முத்துக்குமரசாமி,

தலைவர்.

9443645646

## இலையமுது கூடம் :

சங்கக் கூட்டம் 09–04–2023 அன்று தலைவர் திரு. A. நடனம் அவர்கள் தலைமையில் திரு. G. சிவக்குமார் அவர்கள் இல்லத்தில் திருவெண்காடு மேலவீதியில் இறைவணக்கத்துடன் தொடங்கியது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்க வரவு செலவு கணக்கு பொருளர் திரு. S. சிவகடாட்சம் பிள்ளை அவர்களால் படித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த ஆண்டு சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் சோபகிருது ஆண்டு பஞ்சாங்கம் வழங்கிய திரு. V. அம்பலவாணன் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும்,

திரு. G. சிவக்குமார் சித்ரா தம்பதியருக்கு வெள்ளிவிழா திருமண ஆண்டிற்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டு பரிசு வழங்கியும், அவர்கள் வழங்கிய சிற்றுண்டிக்கு நன்றி தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திரு. G. சிவக்குமார் அவர்கள் நன்றி கூற தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

G. சுப்பிரமணியன், சங்க செயலர்.

## திருவாரூர்

சங்க கூட்டத்தினை 26–3–2023 அன்று திரு. கண்ணபிரான் பிள்ளை தலைமையேற்றும் திரு. முத்துக்குமாரசாமி பிள்ளை முன்னின்றும் நடத்தி வைத்தார்கள். திரு. பனங்காடி பொன்னுசாமி பிள்ளை கடவுள் வணக்கம் பாடினார்கள். தலைவர் உரையில் 15–ஆம் ஆண்டு விழாவை மிக சிறப்பாக கொண்டாட வேண்டும் என்றும் உறுப்பினர்கள் வருகை இன்னும் மேம்படுத்த அனைவரும் ஒத்துழைக்கவும் கேட்டுக் கொண்டார்கள். திருமருகல் பாலசுப்ரமணிய பிள்ளை இணைச்செயலாளராக ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டு அடுத்த மே, ஜுன் மாத கூட்டங்களைநடத்ததலைவர்கேட்டுக்கொண்டார்கள். அனைவருக்கும் தேநீர், சிற்றுண்டி திரு. ஜெயராமன் பாங்கல் திரு. கமலகண்ணன் அவர்களால் வழங்கப்பட்டது. செயலாளர் சோமசுந்தரம் அவர்கள் சிற்சில ஆன்மீக கருத்துக்களை கூறினார்கள். சென்ற கூட்ட அறிக்கை நிதிநிலை அறிக்கை திரு. பொன்னுசாமி பிள்ளை பனங்காடி அவர்கள் கூறினார்கள். கூட்ட முடிவில் திரு. கமலகண்ணன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

## கும்பகோணம் ;

02/04/2023 அன்று மங்கல சந்திப்பு வரன் விபரப்பட்டியல் திருவிழீமிமலை கோவில் மாப்பிளைசாமிக்கு சிறப்பு அர்ச்சனை வழிபாடு செய்யப்பட்டது.

09–04–2023 அன்று 27–வது மங்கல சந்திப்பு நிகழ்ச்சி திரு. T.M. வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் செயலாளர் திரு. S. விஜயகுமார் அவர்கள் முன்னிலையில் துணைதலைவர் திரு. M. பாலகுரு அவர்களின் இறை வணக்கத்துடன் துவங்கி, திரு. P. இராஜசேகர், ஆலோசகர் அவர்கள் ஆண் வரன் விவரப் பட்டியலை வெளியிட, திரு. M. சந்திரமோகன் பெண் வரன் விவரப் பட்டியலை வெளியிட, M. சாமிநாதன் துணை செயலாளர் ராதிகா சாமிநாதன், நீலா இராஜசேகர் மகளிர் அணி, V. சிவக்குமார் பொருளாளர் இளம் கார் சிங்கங்கள் R. அசோக், A. முருகபாலாஜி அடங்கிய குழுவினர் வரன் விவரப் பட்டியலை அனைவருக்கும் வழங்க, மகளிர் அணியினர் திருமதி. மைதிலி வைத்தியநாதன், திருமதி. உமாமகேஸ்வரி சுகுமார், திருமதி. சுமதி இளங்கோவன் ஆகியோர் காணொளி காட்சி வாயிலாக புகைப் படத்துடன் வரன்களை அறிமுகம் செய்ய, திரு. T.S. சூரியநாராயணன் து. செயலாளர் நன்றியுரை நல்க மங்கல சந்திப்பு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

16–03–23 அன்று பதினாறு செல்வங்களையும் பெற்று தரும் ஆலயதரிசன(ம்) பயணம் நான்கு வாகனங்களில் கும்பகோணம் கார்குல சொந்தங்கள் 18 நபர்களுடன் தொடங்கி கீழ்வேளூர் சிவபெருமான் அபிஷேக ஆராதனையுடன் சிறப்பான தரிசனம் தந்தருளினார். அம்பாள் ஐந்து வட்டத்தம்மன் முருகபெருமானை அசுரர்களிடமிருந்து காத்தருளியது போல் நமக்கும் தீப ஆராதனையுடன் காட்சி தந்தருளினார். மாடகோயில் தேவூர் ஆலய தரிசனம் பிறகு, திருகுவளை ஆலயத்தில் சுவாமி தியாகேசர், அம்பாள் தரிசனம் அடுத்து, எட்டுகுடி வேலவனை மண்டலாபிஷேக பூர்த்தி நாளில் பூரணாகதி அலங்கார தீப ஆராதனை நேரத்தில் ஆனந்தமாக மனங்குளிர தரிசித்து மனதார பிரார்த்தித்தோம்.

பின்னர் கொளப்பாடு மாரியம்மன் ஆலயத்தில் ஆனந்தமாக மதிய உணவு உட்கொண்டோம்.

பின்னர் 2 மணிக்கு புறப்பட்டு குறையொன்றுமில்லை மறை மூர்த்தி கண்ணா என்ற ராஜாஜியின் சொல்லுக்கு இணங்க குறையொன்றுமில்லாமல் கும்பகோணம் 3.30 மணிக்கு மனதிருப்தியுடன் வந்தடைந்தோம்.

இன்றைய ஆன்மீக உலாவில் இறை தரிசனம் செய்வதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்த திரு. M.R.K. பாண்டியன், திரு. A.S. பழனி, திரு. S. குணசீலன் ஆகியோருக்கு இந்த இறை தரிசனத்திற்கு ஆலோசனை வழங்கிய தலைவர் திரு. T.M. வைத்தியநாதன் அவர்களுக்கும், இருவேளை உணவு அளித்த திரு. சிவராமன் தம்பதியர் மற்றும் பாண்டியன் அவர்களுக்கும் சங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

- S. விஜயகுமார் பிள்ளை, செயலாளர்.

## தஞ்சை

02–04–2023 அன்று சங்கக் கூட்டம் சங்கத் தலைவர் திரு. K. தண்டாயுதபாணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். சிறப்பு அழைப்பாளர் திரு. K. வேல்முருகன் அவர்கள் பெண்ணின் பெருமை குறித்து உரை நிகழ்த்தினார்கள். செறிவு, நிறைவு, செம்மை, செப்பு, அறிவு, ஞானம், அன்பு, அருள், முக்தி மற்றும் அருமை ஆகிய சிறந்த பண்புகளைக் கொண்டவர், பெண்கள் என தொல்காப்பியர் 2000 ஆண்டுகளுக்கு முன் கூறிச் சென்றதை அழகுற விளக்கினார்கள். பெண்ணின் பண்புகளான தாய்மை, மனைவி, சகோதரி, சமூக சேவகி என பண்முகத் தன்மைகளையும் வரலாற்றில் இடம்பெற்ற வேலு நாச்சியார், ஜான்சிராணி மற்றும் தெரசா போன்றோரைப் பற்றியும் சிறப்புரையாற்றினார்கள். மேற்கண்ட சிறப்புரையின் மதிப்புரையாக திருமதி. A. பானுமதி மதியழகன் அவர்கள் உரையாற்றினார்கள். கூட்டத்தின் அடுத்த நிகழ்வாக காமதேனு அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்தோர்க்கு நன்றி கூறப்பட்டது. புதிய உறுப்பினர் அறிமுகம் நடைபெற்று, நன்றியுரையினை செயலாளர் திரு. S. மதியழகன் அவர்கள் நிகழ்த்த கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- S. மதியழகன், செயலாளர்.

## மதுரை :

சங்க செயற்குழு கூட்டம் கடந்த 09–04–2023 அன்று நடைபெற்றது.

செயற்குழு உறுப்பினர் திரு. K. ராஜேந்திரன் அவர்கள் கடவுள் வாழ்த்து பாடினார். தலைவர் Dr. K. சிவசுப்பிரமணியம் அனைவரையும் வரவேற்று பேசினார். பின் வந்திருந்த அனைவருக்கும் வரும் 30–07–2023 அன்று நடைபெற உள்ள மங்கள சந்திப்பு படிவங்களை வழங்கி அவரவர்களுக்கு தெரிந்த மணமகன், மணமகள் விபரங்களை பெற்றுத்தருமாறு கேட்டுக்கொண்டார்.

கடந்தமாதம்நமதுமகளிரணித்தலைவிதிருமதி. ப. குமாரி லெட்சுமி அவர்கள் எழுதிய "விசையுறு பந்தினைப் போல்" என்ற கவிதைத் தொகுப்பு 3–ஆம் பாகம் கோவையில் வெளியிடப்பட்டதற்கு நமது சங்கம் சார்பில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

பொருளாளர் திரு. S. முருகன் நன்றி கூற கூட்டம் நிறைவடைந்தது.

- C.M. சொக்கலிங்கம், செயலாளர்.

## திருநெல்வேலி :

செயற்குழு கூட்டம் 2–4–2023 அன்று காலை தலைவர் திரு. சி. சண்முகசுந்தரம் பிள்ளை அவர்கள் தலைமையிலும் பொருளாளர் அ. திருஞானசம்பந்தன் அவர்கள் முன்னிலையிலும் இணைசெயலாளர் திரு. S.S. மாரியப்பன் அவர்கள் கடவுள் வாழ்த்துடன் கூட்டம் துவங்கியது. அ. திருஞானசம்பந்தன் அவர்கள் அனைவரையும் வரவேற்று மாதாந்திர வரவு செலவு அறிக்கையை தாக்கல் செய்தார். கூட்டத்தில் நிர்வாககுழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை பதிவு செய்தனர்.

ஆழ்வார்குறிச்சிசாவடிதிரு. C. சைலப்பபிள்ளை அவர்கள் மறைவிற்கும், திருநெல்வேலி கார்காத்தார் சங்க செயலாளர் S. சங்கரபாகம் பிள்ளை அவர்களின் தாயார் திருமதி. லெட்சுமி அம்மாள் மறைவிற்கும் கூட்டத்தில் இரண்டு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தி இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மற்றும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

சி. சண்முகசுந்தரம் பிள்ளை,

தலைவர்.

## இராஜவல்லிபுரம் :

இராஜவல்லிபுரம் தாமிரசபை செப்பறை அருள்மிகு அழகிய கூத்தர் திருக்கோவில் 29–3–2023 புதன்கிழமை அன்று பங்குனி மாத திருவாதிரை அபிஷேக கட்டளையானது இராஜவல்லிபுரம் கார்காத்தார் சங்க தலைவர் அ. திருஞானசம்பந்தன் அவர்களின் நிரந்தர கட்டளையாகும். காலை 11.00 சிறப்பு ஹோமத்துடன் துவங்கியது. சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் சிறப்பு நடன தீபாராதனை மற்றும் சிறப்பு அன்னதானம் நடைபெற்றது. நமது கார்குல சொந்தங்கள் அனைவரும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். அனைவருக்கும் சிறப்பு செய்யப்பட்டது. செயலாளர் R.S. முருகன் பிள்ளை அனைவரையும் வரவேற்றார். வருகை புரிந்த அனைவருக்கும் தலைவர் அ. திருஞானசம்பந்தன் அவர்கள் நன்றி கூறினார்.

R.S. முருகன்,

செயலாளர்.

## ஈரோடு :

12–3–23 மகளிர் தினவிழா மரகதம் அண்ணாமலை மெட்ரிக் பள்ளி வளாகத்தில் திருமதி. தேன்மொழி முருகானந்தம் தலைமையில் நடைபெற்றது.

மகளிரணி துணைத்தலைவி C. பூங்கோதை சிற்றரசு இறைவணக்கம் பாடினார். செயலாளர் செல்வி. அலமேலு மங்கை வரவேற்றார். மகளிர் தினவிழா குறித்து தலைவி. தேன்மொழி முருகானந்தம், இணைசெயலாளர். செண்பகவள்ளி மதியழகன், சிறப்புரை நிகழ்த்தினார். விழாவில் செல்வி. சக்தி, சுஹாசினி, சுஜி ஆகியோர் பேசினார்கள். திருமதி. பூங்கோதை மற்றும் செண்பகவள்ளி இருவரும் வாங்கி வந்த கேக்கினை மூத்த உறுப்பினர் திருமதி. ஜெயலட்சுமி அவர்கள் வெட்டி அனைத்து உறுப்பினர்களுக்கும் அளித்து மகிழ்ந்தனர்.

பின்னர் வேடிக்கை விளையாட்டுகளை திருமதி. செண்பகவள்ளி நடத்தினார். அலமேலு மங்கை நன்றியுரை நிகழ்த்தி விழா இனிதே நிறைவு பெற்றது. 32 மகளிர் பங்கு பெற்றனர்.

மாலை 4 மணியளவில் அதே வளாகத்தில் திரு. பூபதி மண்டல செயலாளர் முன்னிலையில் திரு. V.M. ஜெயபால் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அதில் விளையாட்டு விழா குறித்து கருத்து கேட்பு, ஆண்டுவிழா நடத்துவது, Family Tree புத்தகம் ஜுன் மாதம் தயாரிப்பது மேலும் சங்க செயலாளர் அறிக்கை பொருளாளர் வரவு செலவு அறிக்கை தயாரிப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது. மாலை 5 மணிக்கு பொருளாளர் ராம்குமார் நன்றியுரை கூறினார். செயற்குழுவில் 9 பேர் கலந்து கொண்டார்கள்.

அ. மதியழகன்,
செயலாளர்.

## ஆழ்வார்குறிச்சி

நமது கார்குலத்தெய்வம் ஆழ்வார்குறிச்சி அ/மி வடக்குவாய்ச்செல்வி அம்மன்கோவில் பதினொன்றாம் வருட வருஷாபிஷேகம் சோபகிருது வருடம் வைகாசி மாதம் 24–ஆம் தேதி (07–06–2023) புதன்கிழமை காலை 9.00 மணி முதல் 12.00 மணிக்குள் நடைபெற இருப்பதால் தாங்கள் குடும்ப சகிதம் வந்திருந்து அம்பாளின் அருள் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

– விழாக் கமிட்டியார்.

## சிந்தனைக் களம்

எல்லோரும் கூறுவது,

'மனசே சரியில்லைங்க எதையோ யோசித்துட்டே இருக்கேன், தூக்கமே வரமாட்டேங்குது, யாராவது எதாவது சொல்லிடுறாங்க, மனசு ஒரே குழப்பமா இருக்கு'.

இவை அனைத்தும் தேவையில்லாத சிந்தனைதான், இச் சிந்தனைகளை ஒதுக்கினால் மனம் அமைதி அடைந்துவிடும். இதுவரை எவ்வளவோ (எ.கா) பல்வேறு பிரச்சனைகளுக்கு பலர் கூற கேட்டு இருந்தாலும் ஒரு பெரியவர் கூறிய விண்கல எ.காட்டு அசத்தல்.

விண்கலம் விண்ணுக்கு செல்ல வேண்டுமென்றால், ஈர்க்கும் புவி ஈர்ப்பு விசையை விண்கலம் கடக்க வேண்டும். அதோடு இதைக் கடக்க எரிபொருள் தேவை. விண்கலம் ஏவப்படும் போது தொழில் நுட்பக் கோளாறுகள் இருக்க கூடாது. இவை அனைத்தும் சரியாக உள்ளது என்றால் புவிஈர்ப்பு விசையை கடந்து விண்கலம் விண்ணுக்கு சென்று விடும். செல்லும்போது, பல்வேறு சோதனைகளை கடந்து, அதிர அதிர மேலே சென்று புவிஈர்ப்பு விசையை கடந்தவுடன், விண்கலம் அமைதியாகிவிடும். இதை மனதோடு ஒப்பிட்டு அழகாக கூறுகிறார். மனம் எதனால் குழப்பம் அடைகிறது, எதிர்மறை சிந்தனைகள் கோபம், எதிர்கால பயம் கடந்த கால கவலை, மற்றவர்கள் விமர்சனம், கிண்டல், ஏராளமான காரணங்கள். இவற்றை புவிஈர்ப்பு விசை கோளாறுகள் ஆகியவற்றோடு ஒப்பிடலாம். நேர்மறை சிந்தனைகள் தியானம் நிகழ்கால எண்ணத்தில் பயணப்படுவதை விண்கல எரிபொருளோடு ஒப்பிடலாம்.

நம் மனதை அமைதியாக்க வேண்டுமென்றால் நம்மை கீழே இருக்கும் சிந்தனைகள் கடந்த கால கவலைகள் எதிர்கால பயத்தில் இருந்து விடுபட வேண்டும். நேர்மறை எண்ணங்களை வளர்த்து பொறாமை, வன்மம், கோபம் ஆகியவற்றை தவிர்த்துப் பயணித்தால் அனைத்தில் இருந்தும் விடுபட்டு மனம் விண்ணுலகம் என்ற அமைதி நிலையை அடையும்.

புவிஈர்ப்பு விசையை கடந்தால் எப்படி பரபரப்பின்றி விண்கலம் அமைதியாக பயணிக்கிறதோ அதுபோல நம் மனம் அமைதியை நோக்கி பயணிக்கும்.

இன்றைய நாள் இனிதாக அமைய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்களுடன் சித்ரா பௌர்ணமி வாழ்த்துக்கள்.

- L. ராமசெல்வம்,
விசலூர், செம்பை.
9750806991

## சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டு - 2023

''கருங்கால் வரகே, இருங்கதிர்த் தினையே
சிறு கொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையொடு
இந்நாள் கல்லாது உணாவும் இல்லை.

– புறநானூறு.

வரகு, சாமை, தினை, குதிரை வாலி, கம்பு, கேழ்வரகு, சோளம் ஆகிய உருவில் சிறியதாக உள்ள தானிய வகைகள் சிறுதானியங்கள் எனப்படும். பழந்தமிழர் உணவில் பெரும் பங்கு வகித்தது சிறுதானியங்கள் என்பதை சங்க இலக்கியங்கள் மூலம் அறியலாம். சிறுதானியங்கள் அனைத்தும் 1960–க்கு முன் நம் நாட்டில் பயிரிடப்பட்டு, நமது உணவாக இருந்தவைகள்தான். ஆதிகால மனிதன் காடு, மேடுகளில் வாழ்ந்த காலத்தில் விலங்குகளை வேட்டையாடி, பச்சையாகவும், நெருப்பின் பயன்பாடு அறிந்த பிறகு நெருப்பில் சுட்டும் உண்டு வாழ்ந்திருக்கிறான். அந்த முறை தற்போது ''பேலியோ டயட்'' என்று பிரபலமாகி வருகிறது. நீர்ப்பாசன வசதியில்லாமல், மழை நீரை மட்டுமே மனிதன் நம்பி வாழ்ந்த காலத்தில் பயிரிடப்பட்டவை தான் சிறுதானியங்கள். மக்கள் தொகைப் பெருக்கம், வறட்சி, உணவு பற்றாக்குறை ஏற்பட்டபின் ''பசுமைப் புரட்சி'' என்ற பெயரில் அதிகளவில் உரம், பூச்சி மருந்துகளைப் பயன்படுத்தி நெல், கோதுமை நாடு முழுவதும் பயிரிடப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நாகரிகம் வளர வளர நெல் கோதுமைகளைச் சுத்தம் செய்து வெள்ளை உணவாக உண்ணத் தொடங்கினான். அதனால் உலக நாடுகளிலேயே அதிக சர்க்கரை நோயாளிகள் உள்ள நாடு நமது நாடுதான் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டோம். நமக்கு ஏற்படும் நோய்களைக் கண்டு அச்சம் ஏற்படுவதால், உடல் ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வும், உணவு முறையில் மாற்றம் மட்டுமே நமக்கு நல்வாழ்வைத் தரும் என்ற எண்ணமும் நமக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக சிறுதானியங்களின் பயன்பாடு பற்றி நாம் சிந்திக்கவும், சிறுதானிய உணவுகளை உண்ணவும் தொடங்கியுள்ளோம்.

நெல், கோதுமையை ஒப்பிடும் போது சிறுதானியங்கள் சாகுபடிக்கு 25% நீரே போதுமானது. சிறுதானிய பயிர்கள் வறட்சியைத் தாக்குப்பிடிக்கும், இரசாயன உரம், பூச்சி மருந்துகள் தேவையில்லை. உற்பத்தி செலவும், உற்பத்திக்குத் தேவையான மின்சார உபயோகமும் கணிசமாகக் குறையும். ஒட்டு ரக நெல், கோதுமை விதைகளை விவசாயிகள் நிறுவனங்களிடம் வாங்க வேண்டிய நிலை உள்ளது. ஆனால் சிறுதானிய விதைகள் விவசாயிகளிடமே இருப்பதால் அவர்களின் செலவு குறைந்து வாழ்வாதாரம் பாதுகாக்கப்படுகிறது. சிறுதானியங்கள் சுழற்சி முறையில் பயிரிடப்படுவதால் (Bio diversity) மண் மலடாகாமல், வளம் பெருகுகிறது. சிறுதானியங்களில் இரவில் மகரந்த சேர்க்கை நடைபெறுவதால் வெட்பநிலைப் பிரச்சனை இல்லை. குறைந்த செலவு, குறைந்த அளவு வேலை அதிக வருமானம் சிறுதானியங்களால் கிடைப்பதால் சிறு, குறு விவசாயிகளுக்கு ஏற்றது. புவி வெப்ப மயமாதலால் ஏற்படும் இழப்புகள் சிறுதானியத்தால் குறைகிறது. ''சிறுதானிய மனிதன்'' என்று அழைக்கப்பட்ட P.V. சதீஷ் தெலுங்கானா மாநிலத்தில் "DECCAN DEVELOPMENT SOCIETY" என்ற நிறுவனத்தை 1983–ல் தொடங்கினார். அதன் நோக்கம் சிறுதானியங்கள் சாகுபடியை நாடு முழுவதும் மீண்டும் மலர்ச்சியடையச் செய்ய இயற்கை விவசாயம், தாழ்த்தப்பட்ட பெண்களின் முன்னேற்றம், விவசாயத்தில் சுழற்சி முறையை அமல்படுத்துவது ஆகியவைகள். 75 கிராமங்களில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வந்த, நாடு முழுவதும் பொது விநியோகத்திட்டத்தில் (P.D.S.) சிறுதானியங்கள் அரசு வழங்க காரணமாக இருந்த P.V. சதீஷ் சிறுதானிய ஆண்டில் 19–3–2023 அன்று இயற்கை எய்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

வரகு : சமச்சீர் ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது; நமது உடலுக்கு அதிக வலிமையைத் தருவது; அதிக நார்ச்சத்து உள்ளது; மலச்சிக்கல் தீர; உடல் பருமன் குறைய; சர்க்கரை அளவு குறைய; இரத்த அழுத்தம் சீராக இருக்க உதவுகிறது. பெண்களுக்கான மாதவிடாய்பிரச்சனை சரியாகும்; நிணநீர் சுரப்பிகளைச் சீராக்கும்; கல்லீரல் செயல்பாட்டுக்கு நல்லது, கண் நரம்பு நோய்களைத் தடுக்கும்; சிறுநீரக நோய்க்கும், உடல் கழிவுகளை நீக்கவும் ஏற்றது.

சாமை : சர்க்கரை நோய் பிரச்சனை உள்ளவர்களுக்கு ஏற்றது. இதிலுள்ள இரும்புச்சத்து இரத்த சோகையைப் போக்கும். வயிறு சம்பந்தமான பிரச்சனைகளையும் சரி செய்யும்.

தினை : புரதச்சத்து, நார்ச்சத்து, வைட்டமின் A&B, பாஸ்பரஸ், மக்னீசியம், மாவுச்சத்து நிறைந்தது. இதய ஆரோக்கியத்திற்கும் கண் பார்வைக்கும், வாய்வுப் பிரச்சனைக்கும், தாய்ப்பால் சுரப்பதற்கும் ஏற்றது. குழந்தைகளின் மூளை வளர்ச்சி, நடுத்தர வயதினரின் நரம்பு மண்டல உறுதி, முதியவர்களின் ஞாபக சக்தி அனைத்திற்கும் ஏற்றது.

குதிரை வாலி : இரும்புச்சத்து, நார்ச்சத்து அதிகம் நிறைந்தது. புற்றுநோய், உயர் இரத்த அழுத்தம், இதய நோய், இடுப்பு வலி, வயிற்று வலியைச் சரி செய்ய ஏற்றது.

கம்பு : சிறுதானியங்களில் முதல் இடத்தில் வைக்க வேண்டியது. நார்ச்சத்து, புரதச்சத்து, கால்சியம்,

பாஸ்பரஸ், இரும்புச்சத்து, நியாசின், ரிபோபுளோவின் சத்துக்கள், வைட்டமின்கள், தாது உப்புக்கள், கரோட்டின், எலசின் போன்ற உயிர்ச்சத்துக்கள் நிறைந்தது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும், வயிற்றுப்புண் வராமல் தடுக்கும், நம்மை சுறு சுறுப்பாக இயங்கச் செய்யும். ஒரே இடத்தில் அமர்ந்து, கண் விழித்து வேலை பார்ப்பவர்கள் கம்பங்கஞ்சி அருந்த உடல் சூடு குறையும்.

கேழ்வரகு : இரும்புச்சத்து, நார்ச்சத்து, வைட்டமின் 'B' நிறைந்தது. எலும்பு தேய்மானம், இரத்தசோகை, சர்க்கரை நோய் பிரச்சனை உள்ளவர்களுக்கு ஏற்றது. இதில் 300 மடங்கு கால்சியம் சத்து உள்ளதால் பெண்களுக்கும், முதியவர்களுக்கும் ஏற்றது. குழந்தையின் முதல் உணவாக தாய்ப்பாலை கொடுக்க விரும்பும் தாய், அதே சத்துக்களையும், உணர்வையும், பாதுகாப்பையும் கொடுக்கக்கூடிய உணவாக இதைக் கொடுக்கலாம்.

சோளம் : புரதச்சத்து, நார்ச்சத்து நிறைந்தது. சர்க்கரை நோய், செரிமான கோளாறு, இரத்த சோகை உள்ளவர்களுக்கு ஏற்றது. உப்பின் அளவை சீராக வைக்கும். ஆஸ்டியோ போரோசிஸ் பிரச்சனை உள்ளவர்களுக்கு ஏற்றது.

நோய்களுக்கும், மருந்துகளுக்கும் இன்று அளிக்கப்படும் முக்கியத்துவம், ஆரோக்கியம் தரும் ஊட்டச்சத்து உணவுகள், நோய் தடுப்பு முறைகளுக்குத் தரப்படுவதில்லை. உடலுக்குத் தேவையான அனைத்து ஊட்டச்சத்துக்களையும் சிறுதானியங்கள் நமக்கு அளிக்கின்றன என்று உணவியல் நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள். 6 மாத குழந்தை முதல் முதியவர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற உணவாக இருப்பதால் நமது உடலும் பாதுகாக்கப்படுகிறது. நாம் இரண்டு தலைமுறைகளாக உரம், பூச்சி மருந்தால் உற்பத்தியான சத்தற்ற, சக்கை உணவுகளை உண்டு பழகிவிட்டதால் நமது ஜீரண மண்டலம் சிறுதானிய உணவுகளை ஜீரணிக்க கொஞ்சம் நேரம் ஆகும். நமது முன்னோர்கள் காலையில் கம்பும், மாலையில் கேழ்வரகும் உண்டு இருவேளை உணவிலேயே அனைத்து ஊட்டச்சத்துக்களையும் பெற்றிருந்தனர். சிறு தானியங்களில் குறைந்த அளவு கார்போஹைடிரேட் மற்றும் கொழுப்பு உள்ளது. கால்சியம், சுண்ணாம்பு சத்து அதிகம் உள்ளது. பல், எலும்புகளுக்கு நன்மை பயக்கிறது, உடலில் சிதைந்த திசுக்களை குணப்படுத்தியும், புதிய இரத்த செல்கள், எலும்புகள் உருவாகவும், சரும ஆரோக்கியத்திற்கும் ஏற்றது. சிறு குழந்தைகளை சிறுதானிய உணவுக்குப் பழக்கினால் அவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி கூடி, வருங்காலம் அவர்களுக்கு ஆரோக்கியமானதாக இருக்கும். அரிசியும், கோதுமையும் சிறுதானியங்களின் நார்ச்சத்துக்கு அருகில் கூட நிற்க முடியாது. சிறுதானியங்களை சில மணி நேரம் ஊற வைத்துச் சமைத்தால் தான் அதிலுள்ள முழுச் சத்துக்களும் நமக்குக் கிடைக்கும். சிறு தானியங்களில் நார்ச்சத்து அதிகம் உள்ளதால், உண்டபின் இரத்தத்தில் சர்க்கரையை சீராக வெளியிடுவதால் நமது உடலில் இரத்த சர்க்கரை அளவு கட்டுப்படுத்தப்படுகிறது. ஒரு காலத்தில் கம்பு, சோளம், கேழ்வரகு தான் நம் உணவாக இருந்தது. நமது உடல் செயல்பாட்டிற்கு சரிவிகித உணவுகள்தான் ஆரோக்கியமானவை. நாள் முழுவதும் சிறுதானிய உணவுக்கு மாறுவதும் நல்லது அல்ல. வாரத்தின் 21 வேளை உணவுகளில் 10 – 12 வேளை சிறுதானிய உணவுகளை எடுத்துக்கொள்ளலாம். சிறுதானிய உணவுகளை சூடாக சாப்பிட்டால் தான் ருசியாக இருக்கும். ஒரே சிறு தானியத்தைத் தொடர்ந்து சாப்பிடுவதும், எல்லா சிறுதானியங்களையும் சேர்த்து அரைத்துப் பயன்படுத்துவதும் நல்லது அல்ல. நம் உடலில் எந்த சத்துக்குறைபாடு உள்ளது, நாம் வாழும் பகுதியின் தட்ப வெப்பம் இவைகளைக் கருத்தில் கொண்டு ஏழு சிறுதானியங்களையும் சீரான இடைவெளிகளில் பயன்படுத்த வேண்டும். தைராய்டு பிரச்சனை உள்ளவர்கள் சிறுதானியங்களை தவிர்க்க வேண்டும்.

இந்தியாவின் பாரம்பரிய சிறுதானிய வகைகளை உலக மக்களிடையே பிரபலப்படுத்தும் விதமாக நமது பாரதப் பிரதமரின் பரிந்துரையை ஏற்று நம்முடன் வங்கதேசம், கென்யா, நேபாளம், நைஜீரியா, ரஷ்யா, செனகல் ஆகிய நாடுகள் இணைந்து எடுத்த முன்னெடுப்பை, 70 உலக நாடுகள் வழிமொழிய ஐ.நா. சபையின் 193 உறுப்பு நாடுகள் இந்த தீர்மானத்தை ஆதரித்ததால் "2023–ம் ஆண்டு சிறுதானியங்களின் சர்வதேச ஆண்டு" என ஐ.நா. சபை அறிவித்தது. இதன் அடிப்படையில் இந்த 2023–ல் இந்தியாவை சிறுதானியங்களின் சர்வதேச மையமாக மாற்ற வேண்டும் என்ற நமது பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்கு கண்ணோட்டத்தை மக்கள் இயக்கமாகமாற்றநடவடிக்கைஎடுக்கப்பட்டுவருகிறது. உலகம் முழுவதும் 130 நாடுகளில் சிறுதானியங்கள் விளைவிக்கப்பட்ட போதிலும் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் வாழும் 50 கோடி மக்களுக்குத்தான் இது பாரம்பரிய உணவாக உள்ளது. சிறுதானிய பயன்பாட்டை அதிகரித்து ஆரோக்கியமான மனித சமுதாயத்தை மீட்டெடுப்போம்!

"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு"

– ப. சுவாமிநாதன், மயிலாடுதுறை. 9360185457

## திருத்தம்

April 2023 பக்கம் 25ல் மணமகன் தேவை என்பது மணமகள் தேவை என்று தவறாக பதிவாகிவிட்டது.

## பண்டார சந்நிதியாக வருவது எப்படி?

தி. கபீர்தாஸ், சிதம்பரம். செல் : 9445473386

சைவ மடத்தின் அதிபரை பண்டார சந்நிதி என்று அழைப்பார்கள். பண்டாரம் என்றால் கருவூலம். சேமிப்பு கிடங்கு, சைவர்கள் சந்நிதானத்தை குருவாகப் பாவித்து வணங்குவார்கள். குருவின் பணி. அடியவர்களுக்கு ஞானத்தைக் கொடுத்து பாசத்தை நீக்குவது. ஒருவர் பண்டார சந்நிதியாக வரவேண்டுமானால் அவர் யாது செய்ய வேண்டும்? அவர் பல படிநிலைகளை கடக்க வேண்டும். அது எவ்வாறு என்று பார்ப்போம்.

முதலில் அவர் சைவ உணவு உண்பவராகவும், துறவு கொள்ள விருப்பம் உடையவராக இருக்க வேண்டும். தன் விருப்பத்தை ஒரு மடத்தாரிடம் தெரிவிக்க வேண்டும். அவர்கள் அதற்குரிய வழிமுறைகளைக் கூறுவார்கள். இவர் அதற்கு சம்மதித்தால் அவரை மடத்தில் சேர்த்துக் கொள்வார்கள்.

முதற்படி, அவர் மடத்தில் பணிவிடை செய்ய வேண்டும். வெள்ளை வேட்டி இடுப்பில் துண்டுடன் அவர்கள் இட்ட பணியை நன்கு செய்ய வேண்டும். குற்றம் குறை இருக்கக்கூடாது. குறிப்பிட்ட காலத்துக்குப்பின் அவரது பணி திருப்தியாக இருந்தால், அடுத்த நிலையான "பரதேசி" நிலைக்கு உயர்த்துவார்கள். ஒரு நல்ல நாள் பார்த்து முடிநீக்கம் செய்து நீராட வைத்து, காவி உடை தரித்து சந்நிதானத்தை வணங்கச் சொல்வார்கள். சந்நிதானம் அவருக்கு திருநீறு பூசி ஆசீர்வதித்து ஒரு புதிய பெயரை சூட்டுவார். இந்த பெயரோடு பரதேசி என்ற பெயரும் தொடரும். பின் யாத்திரை என்ற பெயரில் பல சிவத் தலங்களை தரிசித்து வரும்படி அனுப்பி வைப்பார்கள். இதற்கு "யாத்திரை கஷாயம்" என்று பெயர்.

யாத்திரை எல்லாம் முடித்து வந்தபின் "சமய தீட்சை" அளித்து அவர் துறவி என்ற நிலைக்கு உயர்த்தப்படுவார். இனி அவர் அனுதினமும் அனுஷ்டானம், பஞ்சாக்ர ஜபம் செய்து வர வேண்டும். இப்போது அவர் பக்குவநிலைக்கு வந்திருப்பார். இந்நிலை வந்தால் சிவ பூசை செய்ய மனம் நாட்டம் கொள்ளும்.

இவரின் தற்போதைய பக்குவத்தை உணர்ந்த சந்நிதானம் ஒரு நன்நாளில் "விசேஷ தீட்சை" யை அவருக்கு அளிப்பார். இனி இவர் ஸ்கணிக லிங்க பூசை செய்து வர வேண்டும். இப்போதுதான் அவர் 'தம்பிரான்' என்ற உயர்பதவிக்கு வருவார். இப்போது அவருக்கு கல்லாடையை மந்திரித்து கொடுப்பார்கள். இதற்கு 'மந்திர கஷாயம்' என்று பெயர். அன்றைய மாகேஸ்வர பூசையில் குருநாதர் உண்ணும் உணவின் ஒரு பகுதியை அவரை உண்ண வைப்பார்கள். இதற்கு 'பரிகலசேடம்' என்று பெயர். உடன் அவருக்கு ஆத்மார்த்த லிங்கத்தை அளித்து தினம் பூசை செய்ய பணிப்பார்.

இவர் இப்போது மேலும் பக்குவம் பெற்று இருப்பார். அதனால் 'சிவதர்மினி' என்ற உயர்நிலைக்கு உயர்த்தப்படுவார். இதை 'ஞானதீட்சை' என்றோ 'நிர்வாண தீட்சை' என்றோ அழைப்பார்கள். இத்தீட்சைப் பெற்றோர் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்சரியம் என்ற பகையை வென்றவர் ஆவார். அதன் நிமித்தம் அவருக்கு 'ஆறுகட்டி சுந்தர வேடம்' என்ற காதணியை வழங்குவார்கள்.

இது தம்பிரான்களுக்கு கிடைக்கும் உயர் பதவியாகும். இது சிலருக்கு மட்டுமே கிட்டும். பின் ஜடாமுடியில் பரிவட்டம் கட்டுவார்கள்.

மேற்கூறிய தகுதியில் பலர் இருந்தாலும் இதில் சிறந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்து தற்போதுள்ள பண்டாரசந்நிதிக்குப் பின் வாரிசாக நியமிப்பார்கள். அனுபவம், ஆற்றல், பக்குவம், உறுதிபாடு, நம்பிக்கை இவைகள் எல்லாம் இவரிடம் இருக்கிறது என்ற நம்பிக்கையில் இவருக்கு 'ஞானாபிஷேகம்' என்னும் ஆசார்ய அபிஷேகம் செய்து வேள்வி நடத்தப்படும். இதை குருமகா சந்நிதானமே நடத்தி வைப்பார்கள். இப்போது குடை மற்றும் சின்னங்கள் அளிக்கப்படும். இப்போது அவர் 'சின்ன பட்டம்' என்று அழைக்கப்படுவார்கள். இதையே, இளைய சந்நிதானம் என்றும், துவதீய ஆசார்யர் என்றும் கூறுவர். சந்நிதானம் இடும் உத்தரவுக்கு கீழ்படிந்து அதை நிறைவேற்றுவது இவரது தலையாய கடமையாகும். இவ்வாறு முறையாக பல படிநிலைகளில் சிறந்து விளங்கிய இளைய சந்நிதானம் அடுத்த குருமகா சந்நிதானமாக அதாவது பண்டாரசந்நிதியாக வரும் தகுதியினைப் பெறுவார்.

அப்பாடா இவ்வளவு படிநிலையா! மூச்சு வாங்குகிறது. ஒருவர் சுலபமாக பண்டார சந்நிதியாக வர முடியாது. ஆர்வம் கடின உழைப்பு. நம்பிக்கை யாரிடம் உள்ளதோ அவரே அடுத்த பண்டார சந்நிதி.

## திருத்தம்

April 2023 பக்கம் 12ல் S. சீனுவாசன் அவர்கள் அனுப்பிய சென்னை சங்க பாராட்டு செய்தியில் சிற்றுண்டி மேற்பார்வை திரு முருகன்பிள்ளை என்பதற்கு பதிலாக கண்ணன் பிள்ளை தவறாக பதிவாகியுள்ளது.

# மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி

# நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்







தாயின் மடியில்
16-06-1948

இறைவன் திருவடியில்
08-05-2020

தெய்வத்திரு. திரு. **R. சங்கரன் பிள்ளை** (குருஸ்தானம்)

**கண் முன்னே வாழ்ந்த காலம்**
**கனவாகிப் போனாலும்**
**எங்கள் முன்னே உங்கள் முகம்**
**எந்நாளும் உயிர் வாழும்...**

**Dear Dad!**
**Following your footsteps**

மனைவி : S. **சுசீலா**

மகன்கள் – மருமகள்கள் :
**S. கோபி கண்ணன் – A. சாந்தி**
9444086273 – 9884486274
**S. கணேஷ்குமார் – G. கீதா**
9945499689 – 9945359689

மகள் – மருமகன் :
**S. சுஜா – S. நாராயண்குமார்**
9886187661 – 9686193594

பேரன்கள் :
**G. சர்வேஷ் சச்சின்**
**G. கோகுல் ஸ்ரீநிவாஸ்**
**G. ஜிதேஷ் ஸ்ரீநாத்**

பேத்திகள் :
**N. நியந்த்ரி**
**N. தாருண்யா**

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
22–2–1943

மறைவு
23–4–2023

## A. சகுந்தலா

கருவாழக்கரை மேலையூர் M. அகோரம் பிள்ளை மனைவியும் கோமல் கொத்தங்குடி S. கோவிந்தராஜும் பிள்ளை மகளுமான **A. சகுந்தலா** அவர்கள் **23.4.2023** ஞாயிற்றுக்கிழமை மாலை **4** மணிக்கு இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவருடைய விருப்பப்படி சென்னை மருத்துவ கல்லூரிக்கு **24–4–2023** காலை **10** மணிக்கு உடல் தானமாக கொடுக்கப்பட்டது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

மகள் **M. சாந்தி**
மருமகன் **M. முத்துகுமரன்**
பேரன்கள் :
**Dr. M. அவிநாஷ்**
**M. சித்தேஷ்**

கணவர் **M. அகோரம் பிள்ளை**
9566949555

மகன் **A. சுரேஷ்**
மருமகள் **S. அபி**
பேத்தி **S. ஸ்ரீநிதி**

மற்றும்
உறவினர்களும், நண்பர்களும்

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
16.04.1946

மறைவு
02.04.2023

மயிலாடுதுறை பெசன்ட் நகர், ரோஜா தெரு, (சோழம்பேட்டை) நல்லாசிரியர். **S.கலியபெருமாள்** (தலைமையாசிரியர் பணி நிறைவு உதவிபெறும் நடுநிலைப்பள்ளி, மல்லியம்) அவர்களின் மனைவியும் **S.K.பாரதி** (Renault, Nissan) அவர்களின் தாயார்

## தெய்வத்திருமதி. K. லலிதா அவர்கள்

02.04.2023 ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.00 மணி அளவில் இயற்கை எய்தினார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிரிவில் வாடும் :

**S.K.பாரதி** (மகன்)
**P. வைஷ்ணவி** (மருமகள்)

**S.கலியபெருமாள்**
ரோஜாதெரு, பெசன்ட் நகர்,
மயிலாடுதுறை.

பேரன்கள்: **B.பார்கவ், B. பிரணவ்**

**Posted at Pathrikachanel, Egmore**
**RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2022 - 2024 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/22-24**
**Date of Publication : 15th of Every Month** **15th / 16th May 2023**

CHOZHA HOTELS

Hotel Kanakabhishegam
First Hotel From The Temple




Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**